தமிழரசு
Tamilarasu

(Monthly)

கலைஞர் 100
1924 - 2023

ஆகஸ்ட் 2023 (August 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 54
இதழ் (Issue) : 2

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகக் கோட்டையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 2023

மலர் : 54 விலை ரூ.30 இதழ் : 2

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
கு. சுபாஷ்
இரா. பாலாஜி

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (குறள் 891)

ஒரு செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாது இருந்தால், அதுவே தம்மைக் காத்திடும் காவல்கள் அனைத்தையும் விடச்சிறந்த காவலாக அமையும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை, அதே ஒற்றுமையால் காப்போம் 4

★ யாராலும் பறிக்க முடியாத சொத்து என்பது கல்வியறிவுதான் 13

★ சென்னையில் ரூ.178.91 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் 17

★ சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில் ரூ.218.20 கோடி மதிப்பில் “கலைஞர் நூற்றாண்டு நூலகம்” 19

★ தருமபுரியில் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம் 31

★ முதல்வரின் முகவரித்துறையில் 2.94 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு 51

★ திருச்சிராப்பள்ளியில் “வேளாண் சங்கமம் - 2023” 53

★ ஓராண்டில் 13 இலட்சம் மாணவர்களுக்கு உயர்தரத்தில் திறன் பயிற்சி வழங்கப்பட்ட “நான் முதல்வன்” திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழா 62

★ தமிழ் இலக்கியமும் போட்டித் தேர்வுகளும்-கட்டுரை 71

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
விடுதலைத் திருநாளையொட்டி 15.08.2023 அன்று,
சென்னை, தலைமைச் செயலகக் கோட்டைக்
கொத்தளத்தில் தேசியக் கொடியினை
ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
15.08.2023 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து ஆற்றிய விடுதலைத் திருநாள் விழாப் பேருரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

பட்டொளி வீசிப் பறக்கும் மூவண்ணக் கொடிக்கு முதல் வணக்கம்! அதன் நிழலில் வாழ்கின்ற நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்வணக்கம்!

77ஆவது ஆண்டினைத் தொடங்கியுள்ளது இந்திய ஒன்றியத்தின் விடுதலை நாள். இந்திய ஒன்றியத்தின் முக்கியமான அங்கம் நம் தமிழ்நாடு.

மூத்த மொழியாம் செம்மொழித் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம் தமிழ்நாடு, இடைக்காலத்தில் சென்னை மாகாணம், மெட்ராஸ் பிரசிடென்சி, மதராஸ் மாகாணம், மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்த பிறகு - பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழ் மண்ணின் முதலமைச்சராக ஆன பிறகுதான், 1967ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது.

'ஒரே ஒரு சங்கரலிங்கனார்தான் செத்துப் போயிருக்கிறார் என்று நினைப்பீர்களேயானால் தமிழ்நாடு என்ற ஒவ்வொரு எழுத்துக்கும் சேர்த்து ஐந்து உயிர்களைத் தரத் தயாராக இருக்கிறோம்' என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் குரல் கொடுத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்!

'சென்னை மாகாணத்தில் இருந்த பிறமொழி பேசும் எல்லா மாநிலங்களும் தனித்தனியாகப் பிரிந்து போனபிறகு தமிழ்நாட்டுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டாமல் ஏன் இருக்க வேண்டும்? அதனைப் பார்த்துக் கொண்டு நான் ஏன் உயிரோடு இருக்க வேண்டும்?' என்று கேட்டவர் தந்தை பெரியார்.

இத்தகைய பார்போற்றும் தமிழ்நாடு மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், மூன்றாவது ஆண்டாக இந்திய நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைக்கிறேன். 400 ஆண்டுகள் பழமையான இந்தப்

புனித ஜார்ஜ் கோட்டையின் கொத்தளத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தக் கொடியேற்றும் வாய்ப்பை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்!

நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியாம் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஆண்டில் கோட்டையில் நின்று கொடியேற்றும் வாய்ப்பை நான் பெற்றமைக்காகப் பெருமை அடைகிறேன்.

மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள் அனைவருக்கும் விடுதலை நாளன்று கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்து, மாநில சுயாட்சிக் கொடியைக் காத்த தலைவர்தான் கலைஞர் அவர்கள். அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது தமிழை, தமிழ்நாட்டைக் கொண்டாடுவதாகும்.

விடுதலை வீரர்களைப் போற்றிப் பாராட்டுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு யாருக்கும் சளைத்தது அல்ல. அதற்குச் சில எடுத்துக்காட்டுக்களை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாவீரன் பூலித்தேவனுக்கு நினைவு மண்டபம், பாஞ்சாலங்குறிச்சியில், வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கோட்டை, மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு, மகாகவி பாரதியின் வீடு, அரசு இல்லம் ஆனது, பெருந்தலைவர் காமராசருக்கு மணிமண்டபம், மூதறிஞர் இராஜாஜிக்கு நினைவாலயம், தில்லையாடி வள்ளியம்மாளுக்கு மணிமண்டபம், வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி, வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்து பயணம், தியாகிகளுக்கு மணிமண்டபம், விடுதலைப் பொன்விழா நினைவுச் சின்னம், விடுதலைப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்களுக்கு நினைவு மண்டபம், தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு அரங்கம், தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸுக்குச் சிலை, தியாகி கக்கனுக்குச் சிலை, சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண், இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிப்பற்று, இனப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் ரத்த உணர்வாகக் கொண்டவர்கள் நாம்.

- 1962ஆம் ஆண்டு சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை எதிர்கொள்வதில் பண்டித நேரு அவர்களுக்குத் துணை நின்றார்கள்.
- 1971ஆம் ஆண்டு இந்தியாவை பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, இந்திய மாநிலங்கள் எல்லாம் ரூ.25 கோடி நிதி திரட்டி, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடம் அளித்தபோது, அதில் தமிழ்நாட்டின் பங்காக ரூ.6 கோடி அளித்தது தலைவர் கலைஞரின் அரசு.
- 1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணையாக மொத்தம் ரூ.50 கோடியை வழங்கினார் முதலமைச்சர் கலைஞர்.

இன்றைய திராவிட மாடல் அரசும், நம் நாட்டுத் தியாகிகளை மதித்துப் போற்றி வருகிறது.

- இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டு விழாவைப் பெருவிழாவாக ஆண்டு முழுவதும் கொண்டாடினோம். அதற்கான நினைவுத்தூண் நேப்பியர் பாலம் அருகில் அமைக்கப்பட்டுள்ளது.
- பாரதியார் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாளை 'மகாகவி நாள்' என அறிவித்தோம்.
- அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பினைச் செய்தோம்.
- செக்கிழுத்த செம்மல் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரைப் பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகளை வெளியிட்டோம்.
- அவரது படைப்புகளைத் தொகுத்துப் பாடநூல் கழகத்தின் சார்பில் வெளியிட்டுள்ளோம்.
- அதுமட்டுமல்ல, அவர் பிறந்த தூத்துக்குடி மாவட்டம், கிள்ளிக்குளத்தில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வ.உ.சிதம்பரனார் அவர்களது பெயர் சூட்டப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். இந்த வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு, இந்த ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பனை ஆராய்ச்சி நிலையம், வாழை ஆராய்ச்சி நிலையம் ஆகியன அமைக்க தலா ரூ.15 கோடி அறிவிக்கப்பட்டதையும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.
- உத்தரப் பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு சீரமைக்கப்பட்டது.
- கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டது.
- கிண்டியில் மருது சகோதரர்கள் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

- விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளிக் காட்சிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- காந்தி மண்டபம், அருங்காட்சியகம், பெருந்தலைவர் காமராசர் மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் மண்டபம் ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளது.

- தனது வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டுக்கு வந்தவர் அண்ணல் காந்தியடிகள் அவர்கள். அரையாடை அணிவது என்ற முடிவை மதுரை மண்ணில் இருந்துதான் காந்தியடிகள் எடுத்தார்கள். இதன் அடையாளமாகச் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் காந்தியடிகளின் திருவுருவச் சிலையை அமைத்துள்ளோம். அதனை நான் திறந்து வைத்தேன்.

விடுதலைப்போராட்ட தியாகிகளின் குடும்ப ஓய்வூதியம் உயர்வு

சொன்னதைச் செய்வதும், சொல்லாமலே செய்வதும் நம்முடைய அரசின் செயல்பாடாக அமைந்துள்ளது.

- இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் 195 பேருக்கு மாதம்தோறும் தியாகிகளுக்கான நிதி கொடையைத் தொடர்ந்து வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசு.

- கடந்த ஆண்டு தியாகிகளுக்கான ஓய்வூதியம் 18 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியம் 9 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது.

- அதேபோல் விடுதலைப் போராட்ட வீரர்களின் வழித்தோன்றல்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறது நமது அரசு.

- விடுதலைப் போராட்ட தியாகிகளின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பத்தாயிரம் ரூபாயிலிருந்து, 11 ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பை இன்று வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாடுதான் விடுதலைப் போராட்டத்துக்கான விதையை முதலில் விதைத்தது. விடுதலை தாகத்தில், விடுதலை வேகத்தில், நாட்டுப்பற்றில் நம் தமிழ் இனம் இந்தியாவில் உள்ள எந்த இனத்திற்கும் எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல.

1600ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி இங்குக் காலூன்றியது என்று சொன்னால், அவர்களது அடக்குமுறைக்கு எதிராக உடனடியாக விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண் தமிழ்நாடு. 1857 சிப்பாய்க் கலகத்தைத்தான் முதலாவது இந்திய விடுதலைப் போர் என்று சிலர் சொல்கிறார்கள். அதற்கு முன்னால் 1755ஆம் ஆண்டு தெற்கில் அதுவும் தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் தொடங்கிவிட்டது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் நின்று கொடியை ஏற்றும்போது தமிழனாகப் பெருமைப்படும், உணர்ச்சி வசப்படும் நிலை ஏற்படுவதற்கு இதுதான் காரணம். அடிமைப்படுத்துதல் என்று தொடங்கியதோ, அன்றைய தினமே விடுதலை முழக்கத்தை எழுப்பிய மண் நம்முடைய தமிழ் மண்.

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் ஆங்கிலேயே ஆதிக்கத்திலிருந்து நம் நாடு விடுதலை பெற்று, சுதந்திரக் கொடி பறந்தது. ஆனால், அதற்குப் பல ஆண்டுகள் முன்பே, ஆடுவோமே.. பள்ளுப் பாடுவோமே.. ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடுவோமே என்று தொலைநோக்குடன் பாடியவர் தமிழ்நாடு தந்த மகாகவி பாரதியார்.

ஆங்கிலேயரிடமிருந்து நாம் விடுதலை பெற வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில், உத்தமர் காந்தியடிகளின் வழிகாட்டுதலில், 1930ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாட வேண்டும், மூவண்ணக் கொடியை ஏற்ற வேண்டும் என நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். நாட்டின் பல இடங்களிலும் மூவண்ணக் கொடியை மக்கள் ஏற்றினார்கள்.

தியாக வரலாறு

அந்த நாளின் பொழுது விடிவதற்கு முன்பாக நள்ளிரவில், இதோ இந்தச் சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள உயரமான கொடி மரத்தின் மீது ஓர் இளைஞன் ஏறினான். ஆங்கிலேயக் காவலர்கள் தன்னைப் பார்த்துவிடக்கூடாது எனக் கவனமாக ஏறினான். அப்போது உயர்நீதிமன்றம் அருகே கலங்கரை விளக்கம் இருந்தது. அதன் ஒளி தன் மீது பட்டு, அடையாளம் காட்டிவிடக்கூடாது என்பதால், எத்தனை மணித்துளிகளுக்கு ஒரு முறை கொடிக்கம்பத்தின் மீது அந்த ஒளி படுகிறது என்பதைக் கணக்கிட்டு, அந்த வெளிச்சம் வரும்போது எல்லாம், கொடிமரத்தின் மறுபுறத்தில் தன்னை மறைத்துக் கொண்டு, கவனமாக ஏறி, உயரத்தில் பறந்த பிரிட்டிஷாரின் யூனியன் ஜாக் கொடியை அகற்றிவிட்டு, மூவண்ணக் கொடியைப் பறக்கவிட்டான் அந்த இளைஞன். அந்த வீர இளைஞரின் பெயர் பாஷ்யம் என்கிற ஆர்யா.

காலையில் கண்விழித்துப் பார்த்த வெள்ளைக்கார அதிகாரிகள், தங்கள் கொடிக்கு பதில் மூவண்ணக் கொடி பறப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். சென்னை மக்களோ மகிழ்ச்சி அடைந்தனர். இந்தக் கொடிக் கம்பத்திற்கும் அதில் பறக்கின்ற கொடிக்கும் தியாக வரலாறு உண்டு.

இந்தக் கொடி இந்திய நாட்டைக் காத்த கொடி மட்டுமல்ல, காக்கும் கொடி! காக்கப் போகும் கொடி! இது வெறும் கொடியல்ல, கோடானு கோடி இந்திய மக்களின் மணிமுடி! இந்தியாவின் விடியலுக்கு வித்திட்ட இந்த மூவண்ணக் கொடிதான், எதிர்கால இந்தியாவை உருவாக்கவும், உணர்ச்சியையும், எழுச்சியையும் ஊட்டி வரும் கொடியாகும்.

பரந்து விரிந்த இந்திய நாட்டில் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். பல்வேறு வழிபாட்டு நம்பிக்கை கொண்டவர்கள் வாழ்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் உடை மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணவு மாறுபடுகிறது. மாநிலத்திற்கு மாநிலம் உணர்வும், உணர்ச்சியும் மாறுபடுகின்றன. பண்பாடும், பழக்க வழக்கங்களும் மாறுபடுகின்றன. இவ்வளவு வேற்றுமை இருந்தாலும் - அந்த வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்கிறோம். ஒரு குடையின் கீழ் வாழ்கிறோம் என்பார்களே, அதே போல ஒரு கொடியின் கீழ் நாம் வாழ்கிறோம். அதுதான் இந்த மூவண்ணக் கொடி.

மூவண்ணக் கொடியைப் போற்றுவதன் மூலமாக நாட்டைப் போற்றுகிறோம், நாட்டு மக்களை வணங்குகிறோம். மூவண்ணக் கொடிக்கு முன்பு, அணி அணியாக அணிவகுத்து நிற்கும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் எனது அன்பான வணக்கங்கள்!

நாம் அனைவரும் இன்று விடுதலைக் காற்றைச் சுவாசிக்கக் காரணமாக அமைந்த வீரத்தியாகிகள் அனைவருக்கும் வீரவணக்கத்தைச் செலுத்துவோம்! அத்தகைய தியாகிகளை ஈந்த அவர்தம் குடும்பத்தினர் வாழும் திசை நோக்கி வணங்குவோம்!

அனைவருக்கும் பொதுவான இந்தியா

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய பெருமக்கள் அனைவரும் - விடுதலை பெற்ற இந்திய நாடு எப்படி இருக்க வேண்டும்? இது

யாருக்கான இந்தியாவாக அமைய வேண்டும் என்பதைக் கனவு கண்டார்கள். ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவே விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் இருந்த போது, விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை வகித்த மகாத்மா காந்தி அவர்கள் தலைநகர் டெல்லியில் இருக்காமல், மதவெறிக் கலவரங்கள் நடந்த நவகாளிப் பகுதியில் இருந்தார். அதுவும் பாதுகாப்பான இடத்தில் இருக்காமல் வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் போய்த் தங்கி இருந்தார். தனது அறச்சிந்தனையால், நல்ல உள்ளத்தால் கலவரத்தைக் கட்டுப்படுத்தினார் மகாத்மா காந்தி.

பஞ்சாபில் 55 ஆயிரம் வீரர்கள் இருந்தாலும், கலவரங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் வங்காளத்தில் ஒற்றை வீரராக இருந்து கலவரத்தைக் கட்டுப்படுத்தி விட்டீர்கள்" என்று அண்ணல் காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார் அன்றைய கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன்.

கல்கத்தாவை அமைதிப்படுத்திய அண்ணல் காந்தி, அடுத்து டெல்லிக்கு வந்தார். அதே அமைதியை உருவாக்கினார். மதங்களின் பெயரால் மனமாச்சரியங்களின் பெயரால் மக்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டால் அந்த இடத்துக்குச் சென்று அமைதிப்படுத்துவதே தனது முக்கியமான பணி என்று கருதினார் காந்தி.

"பரம ஏழைகளாக இருப்பவர்கள் இது எனது நாடு என்று என்றைக்கு நினைக்கிறார்களோ, எதனுடைய உருவாக்கங்களில் அவர்களது குரல் ஓங்கியிருக்கிறதோ, எந்த ஒரு இந்தியாவில் உயர் வகுப்பினர், தாழ்த்தப்பட்டவர் என மக்களுக்குள் வேறுபாடு இருக்காதோ, எந்த ஒரு நாட்டில் எல்லா வகுப்பினரும் நல்லிணக்கத்துடன் வாழ்வார்களோ, அதுதான் உண்மையான இந்தியா" என்று சொன்னார் அண்ணல் காந்தியடிகள்.

25 வயதில் தூக்கு மேடைக்குச் சிரித்துக் கொண்டே சென்ற மாவீரன் பகத்சிங் சொன்னார்.. "பாலுக்கு அழும் குழந்தை, கல்விக்கு ஏங்கும் மாணவன், வேலை தேடும் இளைஞன்... இவைகள் இல்லாத இந்தியாவே விடுதலை இந்தியா" என்றார் பகத்சிங்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு இறுதிக்காலத்தில் சிம்ம சொப்பனமாக இருந்தவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். அவர் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவம்தான், இனி அதிக காலம் இந்தியாவை



ஆட்சி செய்ய முடியாது என்ற எண்ணத்தை பிரிட்டிஷாருக்கு உருவாக்கியது. "இரத்தத்தைத் தாருங்கள் விடுதலையை வாங்கித் தருகிறேன்" என்று சொல்லி இந்தியன் நேஷனல் ஆர்மியை உருவாக்கியவர் நேதாஜி அவர்கள். "இந்தியாவின் பயணம் என்பது சோசலிசத் திசைவழியில் செல்ல வேண்டும்" என்றார் நேதாஜி.

விடுதலை இந்தியாவுக்கான அரசியலமைப்புச் சட்டத்தை வடித்துக் கொடுத்த புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களும், அனைவருக்கும் பொதுவான இந்தியாவைத்தான் விரும்பினார்.

"வகுப்புகளுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வையும், பாலினங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வையும் அப்படியே விட்டுவிட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்த சட்டங்களை உருவாக்கிக் கொண்டே செல்வது என்பது, நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தைக் கேலிக்கூத்தாக்கிவிடும். இது சாணக்குவியலுக்கு மேலே மாளிகையைக் கட்டுவதைப் போன்று ஆகிவிடும்" என்று சொன்னவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள்.

இதனைத்தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும் வலியுறுத்தினார்கள். "மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும், சகோதரத்துவமும் தோன்ற வேண்டும். ஒருவன் உயர்ந்தவன் - ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகல வேண்டும். உலகுயிர் அனைத்தும் ஒன்றெனும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். அனைவருக்கும் அனைத்தும் பொதுவான கூட்டுறவுச் சமதர்மம் உருவாக வேண்டும்" என்பதையே தனது இலக்காகச் சொன்னார் தந்தை பெரியார் அவர்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

இவர்கள் அனைவரும் விரும்பியது சமத்துவ - சகோதரத்துவ - சமதர்ம இந்தியா. இந்தியா என்பது எல்லைகளால் அல்ல, எண்ணங்களால் வடிவமைக்கப்பட வேண்டும். அத்தகைய ஒரு அரசைத்தான் நாங்கள் தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம். சமூகநீதி - சமத்துவம் - சுயமரியாதை - மொழிப்பற்று - இன உரிமை - மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடித்தளத்தில் நிற்கும் இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த அடிப்படையில்தான் நமது ஆட்சியும் அமைந்துள்ளது.

கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை நீங்கள் பார்த்தால் ஒரேயொரு துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

அதனடிப்படையில்தான், காலம் காலமாகக் குடும்பப் பாரத்தைச் சுமக்கின்ற பெண்கள், தங்கள் உழைப்பிற்கு எந்த மதிப்பும் இன்றி, இதுதான் தங்களுக்கு விதிக்கப்பட்டது என்று எண்ணியிருந்த நிலையை மாற்றிடும் வகையிலும், ஆணுக்கு இணையாகப் பெண்களுக்கும் உரிமை உண்டு என்பதை உணர்ந்து கொள்ளும் வகையில் மகத்தானத் திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கிறோம்.

- ஏறத்தாழ ஒரு கோடி மகளிர் மாதம்தோறும் பயனடையும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், அடுத்த மாதம் 15ஆம் நாள் பேறிஞர் அண்ணா பிறந்தநாளன்று தொடங்கப்பட இருக்கிறது.

இந்தச் சமூகத்திற்காக வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரமாக இதனை வழங்க இருக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர்க்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட உள்ளது.

'ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அந்நாட்டில் உள்ள பெண்களது முன்னேற்றத்தைக் கொண்டே அளவிடுவேன்' என்று சொன்ன அண்ணல் அம்பேத்கரின் வழியில், பெண்களின் உயர்கல்வியை உறுதிசெய்ய கொண்டு வரப்பட்ட புதுமைப்பெண் திட்டத்தில், அரசுப் பள்ளியில் பயின்று, கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் என்று, கடந்த நிதி ஆண்டில் மட்டும் சுமார் 2 இலட்சம் இளம்பெண்களுக்கு ரூ.100 கோடி உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் சுமார் 2 இலட்சத்து 11 ஆயிரம் உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு, சுமார் ரூ.350 கோடி வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்படுவதால், பெண்கள் பெறுகின்ற கல்வி மூலம், அவர்களின் இல்லத்தில் புதிய ஒளி பரவுவதையும், அந்த ஒளி மாணவியின் பெற்றோரின் முகத்தில், சகோதர-சகோதரிகளின் முகத்தில் பரவி, புன்னகையைப் பூக்கச் செய்வதையும் கண்டு நான் உள்ளம் நெகிழ்கிறேன்.

விடியல் பயணம்

- 2021ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு கோட்டைக்கு வந்தபோது போட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி செய்து தரும் உத்தரவுதான்.

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையைப் பெற்ற செய்தி வந்து கொண்டிருக்கும் போது, அதிகாரிகள்

என்னை வந்து சந்தித்தார்கள். அப்போது, மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதியைச் செய்து தருவதுதான் என் முதல் பணியாகக் கருதுகிறேன், முதல் கையெழுத்து அதற்குத்தான் போடப் போகிறேன் என்று சொன்னேன்.

“ஏற்கனவே போக்குவரத்துத் துறை மிகுந்த நஷ்டத்தில் இருக்கிறது. அந்த நிலையில் மகளிருக்குக் கட்டணமில்லை என்று சொன்னால் இழப்பு அதிகமாகிவிடும்” என்று சில அதிகாரிகள் சொன்னார்கள்.

“விடியல் தரப்போகிறோம்” என்று சொல்லி ஆட்சிக்கு வந்தோம் - விடியல் வந்துவிட்டது என்பதன் அடையாளமாக மகளிருக்குக் கட்டணமில்லை என்பதை அறிவித்தாக வேண்டும் என்று நான் சொன்னேன்.

பல்வேறு தரப்பு மகளிரின் பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையில், பேருந்துகளில், அவர்கள் கட்டணம் செலுத்தாமல் பயணிக்கக் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் தினசரி 50 இலட்சம் மகளிர் பயணிக்கின்றனர். இதுவரை இந்தத் திட்டத்தில் சுமார் 314 கோடி முறை பெண்கள் அரசுப் பேருந்துகளில் பாதுகாப்பான பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தால் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 850 ரூபாய்க்கும் மேல் சேமிக்க முடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானது, கோடிக்கணக்கான பெண்களுக்குப் பொருளாதார விடியலைக் கொடுத்துள்ளதன் அடையாளமான இந்தத் திட்டமானது, இனி ‘விடியல் பயணம்’ என்று பெயர் சூட்டப்படுகிறது. மகளிர் வாழ்க்கையில் இனி அவர்கள் பெறப் போகிற அனைத்து விடியலுக்குமான தொடக்கப் பயணமாக இது தொடரும்.

காலை உணவுத் திட்டம்

• இதே போன்ற ஒரு மகத்தான திட்டம்தான் பள்ளி மாணவர்களுக்குத் தரப்படும் காலை உணவுத் திட்டம். முதலமைச்சர் என்ற முறையில் ஒரு பள்ளியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்ட போது, ஒரு சில மாணவர்கள் சோர்வாக இருப்பதையும் முகம் வாடி இருப்பதையும் பார்த்தேன். ஏனென்று கேட்டபோது, காலையில் சாப்பிடவில்லை என்று சொன்னார்கள். ஏழைக் குடும்பத்துத் தாய்மார்கள் அருகில் உள்ள நிறுவனங்களிலோ, அக்கம் பக்கத்து வீடுகளிலோ வேலைக்குச் செல்லக்கூடிய நிலையில், தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்குக் காலை உணவைக்கூட சரியாகத் தர முடியவில்லையே என்ற கவலையும் தவிப்புமாக அவர்கள் வேலை பார்ப்பதும், சாப்பிடாமல் பள்ளிக்கு வந்த குழந்தைகள், உடல் சோர்வினால் பாடத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுவதையும் உணர்ந்து கொண்டேன். திராவிட மாடல் அரசு பிள்ளைகளுக்குத் தாயாக, தாய்மார்களுக்குப் பிள்ளையாக இருந்து செயலாற்றுகிற அரசு. அதனால்தான், கடந்த ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று 1 முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் பற்றி அமைச்சர்கள், அதிகாரிகள், வல்லுநர்கள் ஆகியோரிடம் ஆலோசித்தபோது, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோல பள்ளி நாட்களில் காலை நேரத்தில் இதுபோன்ற உணவு வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்தார்கள். இந்தியாவுக்கு முன்னோடித் திட்டங்களை வழங்குகின்ற மாநிலம், தமிழ்நாடு என்கிற வரலாறு தொடரட்டும் என்றேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தால் மாணவர்களின் வருகை அதிகரித்து, அவர்கள் தடையின்றிக் கல்வி பெறுதல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வரும் கல்வியாண்டு முதல் 31 ஆயிரத்து 8 அரசுப் பள்ளிகளில் பயிலும், 15 இலட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத்

திட்டம் வரும் ஆகஸ்ட் 25ஆம் நாள் முதல் மாநிலம் முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகளில் விரிவுபடுத்தப்பட உள்ளது. எதிர்காலச் சிற்பிகளாம் மாணவர்களின் உடல்நலனும், உள்ள வலிமையும் காத்திடும் வகையில் விரிவாகக்கப்படும் காலை உணவுத் திட்டத்தை, நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி எனப் போற்றக்கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயின்ற திருக்குவளைப் பள்ளியில் தொடங்கி வைக்க இருக்கிறேன். இதற்கென இந்த நிதியாண்டில் ரூ.404 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டம்

• அரசின் சார்பில் திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதாது. அது முழுமையாக செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனித்து, நிறைவேற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் இருக்கிறது எனக் கருதுகிற காரணத்தால், மாவட்டங்கள் தோறும் அரசின் திட்டங்களின் நிலவரம் குறித்த ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறேன். அப்படிப்பட்ட ஓர் ஆய்வுப் பணியின் போது, அங்கன்வாடி ஒன்றில் நான் பார்த்த ஒரு குழந்தை மிகவும் மெலிந்திருந்தது. அதற்குக் காரணம் கேட்டபோது, சத்துக் குறைபாடு என்று அங்கன்வாடி பணியாளர்கள் தெரிவித்தார்கள். இதுகுறித்து, சமூக நலத்துறை அமைச்சர் மற்றும் உயர் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, அதேபோல் ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்த மாநிலம் முழுவதுக்குமான புள்ளிவிவரத்தைக் கேட்டேன்.

எனக்குக் கிடைத்த புள்ளிவிவரம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும். உடல் வலிமை இருந்தால்தான் உள்ள வலிமையும் இருக்கும். சிறப்பான எதிர்காலமும் அமையும். எனவே ஊட்டச்சத்து வழங்க ஒரு திட்டத்தை உருவாக்கச் சொன்னேன்.

'ஏற்றமிகு ஏழு திட்டங்கள்' எனக் கடந்த மார்ச் 1ஆம் நாள் வந்த நாளிதழ்களில் செய்தியைப் பார்த்திருப்பீர்கள். அந்த ஏழு திட்டங்களில் ஒன்றுதான், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்!

ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் அது. கடந்த ஓராண்டுக் காலத்தில் சுமார் 10 இலட்சம் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அதில் சுமார் 92 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடுடன் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு ஊட்டச்சத்து நிறைந்த சிறப்பு உணவுப்பொருட்கள் அளிக்கப்பட்டதன் வாயிலாகச் சுமார் 62 ஆயிரம் குழந்தைகள் தங்களது ஊட்டச்சத்து நிலையில் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். அதில் சில குழந்தைகளைக் கோட்டைக்கு அழைத்து வரச் சொல்லி சந்தித்தேன்.

நான்கு வயது வருண் - இரண்டு வயது நுசாய்பா - இரண்டரை வயது சாய்திரன் ஆகியோரை என்னிடம் அழைத்து வந்திருந்தார்கள். மிக மிக ஆரோக்கியமாக இந்தக் குழந்தைகள் வளர்ந்து வருவதை நான் அறிந்தேன். இவர்களைப் பார்க்கும்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இந்தத் திட்டத்தின்கீழ்ப் பிறவியிலேயே குறைபாடுகள் கொண்ட 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தற்போது அவர்கள் நலமாக உள்ளனர்.

இதுபோலவே, ஆறு மாதம்வரை உள்ள குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கெனச் சிறப்புக் கூடுதல் சத்துணவு அளிக்கப்பட்டதால், சுமார் 14 ஆயிரம் குழந்தைகள் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். இந்தத் திட்டம் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து இளம் தாய்மார்களுக்கிடையே நல்லதொரு தாக்கத்தை உருவாக்கியுள்ளது.

நான் முதல்வன் திட்டம்

அடுத்து என்னுடைய கனவுத் திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தை நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய நீங்கள்தான் என்னை முதலமைச்சராக்கினீர்கள். நான் முதல்வராக இருந்தாலும், என்னை முதலமைச்சராக்கிய உங்கள் ஒவ்வொருவருடைய வீட்டிலும் உள்ள பிள்ளைகள் தங்கள் திறனை மேம்படுத்தி, நான் முதல்வன் என்று சொல்லக்கூடிய வகையிலே சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

இந்தத் திட்டத்தின்கீழ்க் கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 13 இலட்சம் மாணவர்களுக்கு வெற்றிகரமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு அதில் மூன்றரை இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் பல்வேறு பணிகளில் அரசின் உதவியுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். திறன் மிகுந்த ஒரு தலைமுறையை உருவாக்குவதும், அதற்கேற்ற பணி வாய்ப்புகளை அவர்கள் பெறுவதும்தான் எனக்கு முழுமையான மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்தத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் வகையில் இன்னொரு முன்னெடுப்பை இந்த விடுதலை நாளில் அறிவிக்கிறேன். தாய்நாட்டிற்காகத் தங்களுடைய இளம் வயதை நாட்டின் எல்லையில் இராணுவப் பணியில் கழித்து, பணிக்காலம் நிறைவுபெற்றுத் திரும்பும் முன்னாள் இராணுவத்தினர் பயன்பெறும் வகையில், சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் 10 ஆயிரம் நபர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கி, திறனை மேம்படுத்தவும், அவர்கள் உரிய பணியில் அமரும் வரையில் தக்க உதவி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ பணியாளர்களுக்கு நலவாரியம்

சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாகச் சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம்.

நேரத்தின் அருமை கருதி பணிபுரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கெனத் தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும் இன்று அறிவிக்கிறேன்.

ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். மேலும், ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுப்படுத்தப்படும்.

கலைஞர் நூற்றாண்டு பூங்கா

அதுமட்டுமல்ல, சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் ரூ.25 கோடிச் செலவில் "கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா" ஒன்று அமைக்கப்படும் என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன்.

திட்டங்கள் இல்லாத நாளே இல்லை எனச் சொல்லக்கூடிய வகையில், அரசு அறிவிக்கும் திட்டங்களைக் கடைக்கோடி மக்களிடமும் கொண்டு போய்ச் சேர்க்கின்ற பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர்கள் அரசு ஊழியர்கள். ஆட்சி சக்கரம் சுழல்வதற்கு அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அந்தச் சக்கரம் வேகமாக சுழல்வதும், மெதுவாகச் சுழல்வதும் அரசு ஊழியர்களின் கைகளில்தான் உள்ளது. அந்தக் கைகள் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அப்போதுதான் வேகம் அதிகமாகும் என்பதை எப்போதும் உணர்ந்திருப்பது திராவிட மாடல் அரசு.

எனவே, நடப்பாண்டுகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த சுமார் 55 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப இருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்குமான அரசு என்பதன் அடையாளமாக இதுபோன்ற திட்டங்களைச் சிந்தித்துச் சிந்தித்துச் செயல்படுத்தி வருகிறோம்.

எட்டுக் கோடி மக்களும் ஏதாவது ஒரு விதத்தில் பயனடையும் ஆட்சியை நமது அரசு வழங்கி வருகிறது.

கல்வி, பொருளாதாரம், மருத்துவம், வேளாண்மை, ஏற்றுமதி, திறன்மிகு மனித ஆற்றல் ஆகிய அனைத்து வகையிலும் தமிழ்நாடு சிறப்பான பங்களிப்பை இந்திய நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வழங்கி வருகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் சமூகநீதி நிருவாக ஆட்சி முறை இந்தியா முழுமைக்குப் பரவுமானால், அதை விட மகிழ்ச்சியான செய்தி எதுவும் இருக்க முடியாது.

கூட்டாட்சி இந்தியாவில் இணைந்திருக்கும் மாநிலங்கள் சுயாட்சி உரிமை கொண்டதாகச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் தொடர்ந்து குரல் எழுப்பி வந்தார்கள். மக்களுக்கு நேரடித் தொடர்பு கொண்ட அனைத்தும் மாநிலப்பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். குறிப்பாக கல்வி, மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்.

அதைச் செய்தால்தான் நீட் போன்ற கொடூரமான தேர்வு முறை முற்றிலுமாக அகற்றப்பட முடியும்.

மாநிலங்கள் ஒருங்கிணைந்த நம் இந்திய நாடு பல்வேறு இனம் - மொழி - மதம் - பண்பாடு கொண்ட மக்கள் அனைவரது வளர்ச்சியையும் கொண்டதாக வளர வேண்டும்.

சமூகநீதி - சமத்துவம் - சகோதரத்துவம் – சமதர்மம் - மதச்சார்பின்மை - ஒடுக்கப்பட்டோர் நலன் ஆகிய மிக உயர்ந்த கோட்பாடுகள் கொண்ட இந்தியாவை அமைப்பதுதான் இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும். அத்தகைய சமத்துவ, சமதர்ம, சமூக நீதி இந்தியாவை அமைப்பதுதான் இந்திய விடுதலைக்காகப் போராடிய தியாகிகளுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

ஒற்றுமையால் கிடைத்த விடுதலையை அதே ஒற்றுமையால் காப்போம். வேற்றுமையை விதைக்கும் சக்திகளை வேரோடு சாய்ப்போம். நாம் இந்தியர்கள் என்ற பெருமையுடன் நம் இந்தியாவை நேசிக்கும் அனைவருக்கும் விடுதலை நாள் நல்வாழ்த்துகள்.

தியாகிகள் புகழ் வாழ்க! தீரர்கள் புகழ் வாழ்க!
வாழ்க தமிழ்! வளர்க இந்தியா!

நன்றி! வணக்கம்!

யாராலும் பறிக்க முடியாத சொத்து என்பது கல்வியறிவுதான்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி **திரௌபதி முர்மு** அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165ஆவது பட்டமளிப்பு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 06.08.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாடினார் மகாகவி பாரதியார் அவர்கள்.

அதற்கு எடுத்துக்காட்டாக இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் நாற்காலியில் அமர்ந்து கோலோச்சி வரும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு எனது வணக்கங்களையும் வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழக மானியக் குழுவானது (UGC) "சிறந்து விளங்கும் திறன்கொண்ட



பல்கலைக்கழகம் என்ற சிறப்பு அடைமொழியினைச் சென்னைப் பல்கலைக்கழகத்துக்குத் தந்துள்ளது.

அத்தகைய சிறந்து விளங்கும் திறன் கொண்ட பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வருகை தந்தது – இந்தப் பல்கலைக்கழக வரலாற்றில் முக்கியமான நாளாக இதனை மாற்றி அமைத்துள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர்களாக இருந்த திரு. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள், திரு.வி.வி.கிரி அவர்கள், திரு. நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்கள், திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள், திரு. ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள் என ஏராளமான குடியரசுத் தலைவர்கள் படித்த பல்கலைக்கழகம் சென்னைப் பல்கலைக்கழகம்.

நோபல் பரிசு பெற்ற திரு. சர்.சி.வி.ராமன் அவர்கள் படித்த பல்கலைக்கழகம் இது.

நீதிபதிகள், அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் உட்பட பல தலைசிறந்த பெண் ஆளுமைகளை வழங்கிய பெருமை இந்தப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த பல்கலைக்கழகத்தில்தான் படித்தார். இன்று முதலமைச்சராக உங்கள் முன் உரையாற்றும் நானும் இதே பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவன்தான். அந்த வகையில் உங்கள் சீனியராகவும் நான் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ளேன்.

கடந்த 165 ஆண்டுகளாகத் தென்னிந்தியாவில் மட்டுமில்லாமல், நவீன இந்தியாவின் வளர்ச்சிக்கு நிலையான பங்களிப்பைச் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. அந்தக் காலத்தில் இருந்தது சென்னைப் பல்கலைக்கழகம் மட்டும்தான்.

நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் சென்னைக்கு வெளியே சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் மாநில அரசின் சார்பில் மொத்தம் 22 பல்கலைக் கழகங்கள் உள்ளன.

தமிழ்நாடு என்பது இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக இருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இந்தியாவில் தலைசிறந்த 100 கல்வி நிறுவனங்களில் தமிழ்நாட்டில் மட்டுமே 18 நிறுவனங்கள் உள்ளன.

தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 21 தமிழ்நாட்டில்தான் உள்ளன.

தலைசிறந்த 100 கல்லூரிகளில் 32 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

தலைசிறந்த 100 ஆராய்ச்சி நிறுவனங்களில் 10 தமிழ்நாட்டில் உள்ளன.

தலைசிறந்த 200 பொறியியல் கல்லூரிகளில் 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

தலைசிறந்த மேலாண்மைக் கல்வி நிறுவனங்களில் 11 தமிழ்நாட்டில் உள்ளன.

100 மருத்துவக் கல்வி நிறுவனங்களில் 8 தமிழ்நாட்டில் உள்ளன.

40 பல்மருத்துவக் கல்வி நிறுவனங்களில் 9 தமிழ்நாட்டில் உள்ளன.

30 சட்டக் கல்லூரிகளில் 2 தமிழ்நாட்டில் உள்ளன.

30 கட்டடக் கலைக் கல்லூரிகளில் 6 தமிழ்நாட்டில் உள்ளன.

இப்படி நான் அடுக்கிக்கொண்டே போக முடியும். கல்வியில் சிறந்த மாநிலமாக நாம் உயர்ந்து நிற்கிறோம். 100 ஆண்டுகளுக்கு முன்னால் நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் கல்விக்காகப் போட்ட விதைதான் இதற்குக் காரணம்.

பள்ளிக் கல்வியை வளர்த்தார் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். கல்லூரிக் கல்வியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் விரிவு செய்தார். இன்று நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் உயர்கல்வியை ஊக்கப்படுத்தி வருகிறோம். ஆராய்ச்சிக் கல்வியாக அதனை உயர்த்தி வருகிறோம். அனைத்து மாணவர்களுக்கும் உரிய வழிகாட்டுதல்களை வழங்கி தனித் திறமையானவர்களாக வளர்த்தெடுத்து வருகிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களைப் படிப்பில் மட்டுமல்லாது, வாழ்க்கையிலும் வெற்றியாளராக்கும் வகையில் எனது கனவு திட்டமான "நான் முதல்வன்" திட்டம் சிறந்து விளங்கி வருகிறது. ஆண்டுக்குப் பத்து இலட்சம் இளைஞர்களைப் படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறனில் மேம்படுத்துவதுதான் இந்தத் திட்டத்தின் இலக்கு.

மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஆசிரியர்களுக்கும் அவர்களது துறைசார்ந்த மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள் இந்தத் திட்டத்தின்கீழ்த் திறன் மேம்பாட்டுப் பயிற்சியாக வழங்கப்படுகிறது.

உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் பயிலும் மாணவர்களின் புதிய ஆராய்ச்சிச் சிந்தனைகளுக்குப் புத்துயிர் வழங்கும் விதமாக "முதலமைச்சரின் ஆராய்ச்சித் திட்டம்" அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கெனத் தமிழ்நாடு அரசால் ஆண்டுக்கு ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

"தமிழ்நாட்டின் வரலாறு, எதிர்கால இலக்கு, பொருளாதார வளர்ச்சி, தொழில்சார் சிந்தனைகளுக்கு ஏற்ப, தமிழ்நாடு அரசு தனித்துவமான "மாநிலக் கல்விக் கொள்கை" வடிவமைப்பதில் தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

"தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம்" என்ற புதிய சீர்மிகு திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இளைஞர்களுக்கு தொழில்முறை, கல்வி அடிப்படையில் இரண்டு ஆண்டுகாலம் ஊக்க ஊதியத்துடன் பயிற்சி ஆகியன வழங்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

அரசுப் பள்ளிகளில் படித்துக் கல்லூரிக்குள் நுழையும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் விதமாக "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்" எனும் புதுமைப்பெண் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திப் பெண்கல்வியை ஊக்குவித்து வருகிறோம்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களைச் சார்ந்த மாணவர்கள் போட்டித் தேர்வுகள், ஆட்சிப் பணித் தேர்வுகள், திறன்சார்ந்த தேர்வுகளுக்குத் தங்களைத் தயார் செய்யும் பொருட்டு மதுரையில் "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் கழக அரசு ஆட்சிக்கு வந்தது முதல் புதுப்பொலிவுடன் செயல்பட்டு வருகிறது.

சென்னை வந்தபோது அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த திருமதி ஹிலாரி கிளிண்டன் அவர்கள் பார்த்துப் பாராட்டிய நூலகம் அது. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் மாணவ சக்தியை அடுத்த கட்டத்துக்கு வளர்த்தெடுக்கும் முயற்சிகள்! குறிப்பாகச் சென்னைப் பல்கலைக்கழகத்துக்குச் சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- ❖ சென்னைப் பல்கலைக்கழகத்தின் மெரினா வளாகத்தில் நவீன வசதிகளுடன் ரூ.30 கோடி மதிப்பீட்டில் புதிய விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.
- ❖ 3,000 பேர் அமரும் வகையிலுள்ள சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கட்டடமும் புதிய பொலிவுடன் சீரமைக்கப்பட உள்ளது.

- சேப்பாக்க வளாகத்தில் மாணவியர்களுக்கான புதிய விடுதியும் கட்டப்படவுள்ளது.
- சென்னைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ள தொழில் முனைவோர் மற்றும் தொழில் வழிகாட்டு மையத்துக்கு ஒன்றிய அரசும் தமிழ்நாடு அரசும் இணைந்து ரூ.50 கோடி வழங்கி உள்ளது.
- பயிலும்போதே பணி என்ற திட்டம் அமலில் உள்ளது.
- "திருக்குறள் காட்டும் தொழில்நெறி", "சமூகநீதி" ஆகிய புதிய பாடத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற சிறப்பான முன்னெடுப்புகளைத் தொடர்ந்து எடுத்துத் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் நிறுவனமாகச் சென்னைப் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது.
- இன்று பட்டம் பெறுகின்ற மாணவச் செல்வங்களாகிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் வள்ளுவரின் இந்தக் குறள்தான் எனக்கு நினைவுக்கு வருகிறது.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

உங்களின் அறிவு, தோண்டத் தோண்ட ஊற்றுநீர்க் கிடைப்பது போல தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்கவேண்டும். பட்டம் வாங்குவதோடு உங்களது படிப்பு முடிந்து விடுவது இல்லை. ஒரே பட்டத்துடன் நிறுத்திவிடாதீர்கள். தொடர்ந்து படியுங்கள். தகுதியான வேலை கிடைத்த பிறகும் படிப்பதை நிறுத்திவிடாதீர்கள்.

யாராலும் பறிக்க முடியாத சொத்து என்பது கல்வியறிவு தான். அது அறிவியல் வழிப்பட்டதாக, பகுத்தறிவாக எதையும் கேள்வி கேட்டு ஆராயும் அறிவாக இருக்குமானால் உங்களை யாராலும் வெல்ல முடியாது. நீங்கள் இன்று பட்டம் பெறுவதைப் பார்த்து உங்கள் பெற்றோர்கள் எத்தகைய மகிழ்ச்சியையும், பூரிப்பையும் அடைகிறார்களோ, அதே அளவு மகிழ்ச்சியை நானும் அடைகிறேன். முதலமைச்சராக மட்டுமல்ல, உங்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவனாக உங்களைப் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.

இன்று உங்கள் குடும்பத்திற்கும் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள நீங்கள், எதிர்காலத்தில் நமது தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இதேபோல பெருமையைத்தேடித் தர வேண்டும், அதுதான் நான் உங்களுக்கு வைக்கக்கூடிய வேண்டுகோள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் நிதி ஆதாரப் பெருக்கத்திற்கும் தமிழ்நாடு அரசும் உயர்கல்வித் துறையும் என்றென்றும் துணை நிற்கும்.

சென்னைப் பல்கலைக்கழகத்தை உலகளாவிய நிலையில் உயர்நிலைத் தகுதியில் இடம்பெறச்செய்ய இடையறாது பணியாற்றிக் கொண்டிருக்கும் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

சென்னையில்

ரூ.178.91 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பார்வையிட்டு ஆய்வு செய்தார் - 03.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 03.08.2023 அன்று, பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகள், அசோக் நகர் 4ஆவது நிழற்சாலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பழவேற்காடு காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு

ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் ரூ.71.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணியானது, ஹிந்து காலனி 4ஆவது தெரு மற்றும் எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பில் ஆரம்பித்து அதன் வழியாக நங்கநல்லூர் 100 அடிச் சாலை, நங்கநல்லூர் 46ஆவது தெரு, நங்கநல்லூர் 6ஆவது பிரதான சாலை குபேர முனுசாமி சாலை வழியாக வீராங்கள் ஓடையில் சென்றடைகிறது. இதன் மொத்த நீளம் 2.29 கிலோ மீட்டர் ஆகும். இதில் 1.78 கிலோ மீட்டர் பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும். இப்புதிய மழைநீர் வடிகால் அமைப்பதன் மூலம் ஹிந்து காலனி, பி.வி. நகர், நேரு நெடுஞ்சாலை ஆகிய பகுதிகள் பயனடையும்.

பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.04.2022 அன்று, திறந்து வைக்கப்பட்ட S9 பழவந்தாங்கல் காவல் நிலையத்திற்கு நேரில் சென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தேவையான உதவிகளைச் செய்திடுமாறு காவல்துறையினரை அறிவுறுத்தினார்.

போரூர் ஏரியில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மதகு அமைத்தல் மற்றும் போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு

நீர்வளத்துறையின் பராமரிப்பிலுள்ள போரூர் ஏரியின் நீர்பரப்பு 252 ஏக்கர் ஆகும். இந்த ஏரியின் முழு கொள்ளவு 67 மில்லியன் கன அடி ஆகும். இதன் வலது கரையோரம் 25 மீட்டர் நீளத்திற்கு உபரி நீர் வழிந்தோடி அமைந்துள்ளது. இந்த ஏரியின் மொத்த கரையின் நீளம் 3,092 மீட்டர் ஆகும்.

பல வருடங்களாகப் போரூர் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரானது மௌலிவாக்கம், மதனந்தபுரம் மற்றும் முகலிவாக்கம் வழியாகச் சென்று முகலிவாக்கத்திலுள்ள இராமாபுரம் ஓடையில் கலந்து மணப்பாக்கம் மற்றும் இராமபுரம் வழியாகச் சென்று அடையாறு ஆற்றில் சேரும்படி அமைந்திருந்தது. தற்பொழுது உபரி நீர் செல்லும் நிலங்கள் முழுவதும் குடியிருப்புப் பகுதிகளாக மாறிவிட்டதாலும், ஏரியின் குறுக்கே புறவழிச்சாலை அமைக்கப்பட்டதாலும், ஏரியின் உபரி நீர் வெளியேறுவதற்கு வழியில்லாமல் போரூர் ஏரியின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கொளுத்துவான்சேரி, சீனிவாசபுரம், பரணிபுத்தூர், பட்டூர் மற்றும் அய்யப்பதாங்கல் கிராமங்களில் வெள்ளநீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்படுகிறது. கடந்த ஆண்டு பருவமழையின்போது மேற்கண்ட பகுதிகள் பெரும் வெள்ள பாதிப்புக்கு உள்ளானது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.12.2021 அன்று, போரூர் ஏரியின் வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, வெள்ள பாதிப்புகளைத் தவிர்க்க பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன்படி, காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பருவமழைக் காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.250 கோடி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் போரூர் ஏரி பகுதியில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்க பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதில் போரூர் ஏரியில் நடைபெற்று வரும் புதிய மதகு அமைத்தல், போரூர் ஏரி முதல் இராமாபுரம் ஓடை வரை புதியதாக மூடிய வடிவிலான கால்வாய் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பருவமழை தொடங்குவதற்கு முன் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்படும்.

அசோக் நகர் 4ஆவது நிழற்சாலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு

கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட அசோக் நகர் 4ஆவது நிழற்சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாலைகளில் 2021 மற்றும் 2022ஆம் ஆண்டு பருவ மழையின் காரணமாகச் சாலையில் 2 அடி உயரத்திற்கு 10 நாட்களாக மழைநீர் தேங்கியது. அசோக் நகர் 4ஆவது நிழற்சாலையின் மழை நீரானது பழைய கால்வாயின் மூலம் போஸ்டல் காலனி வழியாகச் சுமார் 2.5 கி.மீ. தொலைவு கடந்து ரெட்டிக்குப்பம் கால்வாய் வழியாக அடையாறு ஆற்றினை அடைந்தது. இதனால் மேற்கு மாம்பலம் பகுதியும் அதிகம் பாதிக்கப்பட்டது.

மேற்கண்ட மழைநீர்த் தேக்கத்தினை அகற்ற நிரந்தரத் தீர்வாக ஜாபர்கான்பேட்டை கால்வாய் வழியாக அடையாறு ஆற்றினைக் குறைந்த தொலைவில் சென்றடையும்படி மாற்றியமைக்கப்பட்டுத் தொழில்நுட்ப ஆலோசகரின் வடிவமைப்பின்படி 1.313 கி.மீ. நீளத்திற்கு மாநிலப் பேரிடர் நிவாரண நிதியின் கீழ், ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் அசோக் நகர் 4ஆவது நிழற்சாலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மழைநீர் வடிகால் அமைப்பின் மூலம் தேங்கும் மழைநீர் ஜாபர்கான்பேட்டை கால்வாய் மூலம் அடையாறு ஆற்றினை விரைவாகச் சென்று சேரும். இதன்மூலம், அசோக் நகர் 4ஆவது நிழற்சாலை, 6ஆவது நிழற்சாலை, அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழைவெள்ளம் தேங்குவது முற்றிலும் தவிர்க்கப்படும்.

சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில் ரூ.218.20 கோடி மதிப்பில் “கலைஞர் நூற்றாண்டு நூலகம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார்–15.07.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.07.2023 அன்று, மதுரை புதுநத்தம் சாலையில் 2.73 ஏக்கர் நிலத்தில் 2,13,338 சதுர அடிப் பரப்பளவில், ரூ.218.20 கோடி மதிப்பில் தரை மற்றும் 6 தளங்களுடன் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

எழுத்தாளர், கவிஞர், நாடக ஆசிரியர், பத்திரிகையாளர், படைப்பாளி, அரசியல், ஆட்சி என எத்துறையைத் தொட்டாலும், அத்துறையில் முத்திரை பதித்த மாபெரும் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 03.06.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், ‘புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதின் மீதும் வாழ்நாள் முழுவதும் தீராப் பற்றினைக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2010ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 102ஆவது பிறந்தநாள் அன்று சென்னை,

அறை கலன்கள், திறந்தவெளி அரங்கம், கூடுதல் வசதிகள் என மொத்தம் ரூ.218.20 கோடிச் செலவில் இந்நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தளம் வாரியான விவரங்கள்

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் அடித்தளத்தில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், தரைமட்ட தண்ணீர்த் தொட்டி, செய்தி / நாளிதழ் சேமிப்பு அறை, நூல் தொகுக்கும் பிரிவும், தரைத்தளத்தில் கலைக்கூடம், மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவு, மாநாட்டுக் கூடம், முக்கியப் பிரமுகர்கள் அறை, சொந்த நூல்கள் வாசிப்புப் பிரிவு, பல்வகைப் பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கைப் பிரிவு, கணினிக் கட்டுபாட்டு அறை, தபால் பிரிவும், முதல் தளத்தில் கலைஞர் பிரிவு, பருவ இதழ்கள், நாளிதழ்கள் பிரிவு, குழந்தைகள் திரை அரங்கம், குழந்தைகளுக்கான நூலகப் பிரிவு, சொந்த நூல்கள் வாசிப்புப் பிரிவு, சிறார் அறிவியல் பூங்கா, அறிவியல் உபகரணங்கள் பிரிவும், இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவும், மூன்றாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவு, ஆங்கில நூல்கள் பிரிவு, ஆராய்ச்சிப் பதிப்புகள், இதழ்கள் பிரிவும், நான்காம் தளத்தில் போட்டித் தேர்வுப் பிரிவு, கூரைத் தோட்டமும், ஐந்தாம் தளத்தில் அரிய நூல்கள் பிரிவு, மின் நூலகம், பல்லூடகப்பிரிவு, நூல்கள் பாதுகாக்கும் பிரிவு, ஒளி-ஒலி தொகுப்புகள் காட்சியகப் பிரிவு, மின்னுருவாக்கப் பிரிவு, நூலக ஸ்டுடியோ, நுண்படச்சுருள், நுண்பட அட்டை அறை ஆகியவையும், ஆறாம் தளத்தில் ஆங்கில நூல்கள் பிரிவு, நூல் பகுப்பாய்வு மற்றும் நூற்பட்டி தயாரித்தல் பிரிவு, தலைமை நூலகர் அலுவலகம், நிருவாகப் பிரிவு, நூல்கள் கொள்முதல் பிரிவு, பணியாளர் உணவருந்தும் அறை ஆகியவையும் அமைந்துள்ளன.

இந்நூலகத்தில், தரைத்தளம் முதல் இரண்டாம் தளம் வரை தானியங்கி நகரும் மின் படிக்கட்டு (எஸ்கலேட்டர்) வசதி, மின்தூக்கிகள் வசதி, ஒருங்கிணைந்த குளிரூட்டு வசதி, வாசகர்களுக்கான இணைய வசதி (வை-ஃபை), படிக்கும் வசதியுடன் கூடிய திறந்தவெளி மாடித் தோட்டம் ஆகிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கோட்டூர்புரத்தில், ஆசியாவின் அதிநவீன மிகப்பெரிய நூலகமான அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக இந்த நூலகம் விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களும், இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, 'சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நூலகம் இரண்டு இலட்சம் சதுர அடிப் பரப்பளவில் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும்' என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில், மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை வளாகத்தில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.01.2022 அன்று அடிக்கல் நாட்டினார்.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கட்டுமானப் பணிகள் 17 மாதங்களில் முடிவுற்று, அனைவருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக மதுரையில் தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.120.75 கோடிச் செலவிலும், ரூ.60 கோடி மதிப்பீட்டிலான நூல்கள், ரூ.5 கோடி மதிப்பீட்டிலான தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், ரூ.37.45 கோடி மதிப்பீட்டிலான

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தளம் வாரியாக உள்ள நூல்களின் விவரங்கள்

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தின் தரைத்தளத்தில் தமிழ்நாடு பாடநூல்கள், போட்டித் தேர்விற்கான நூல்கள் ஆகியவை பார்வையற்றோர் எளிதாகப் பயிலும் வகையில் பிரெய்லி எழுத்துக்களிலான 1,800 நூல்கள் இடம்பெற்றுள்ளன. முதல் தளத்தில் உள்ள குழந்தைகள் பிரிவில், இந்திய மற்றும் சர்வதேச அளவில் பதிப்பிக்கப்பட்ட அனைத்து வகையிலான 30,000 குழந்தைகள் நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் தளத்தில் உள்ள தமிழ் நூல்கள் பிரிவில், தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள், நாவல்கள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், கட்டுரைகள், கடிதங்கள், சுயசரிதை நூல்கள், கணினி அறிவியல், இதழியல், உளவியல், மெய்யியல், மானுடவியல், சட்டம், பொருளாதாரம், தமிழ் பண்பாடு, பண்பாடு, கலாச்சாரம், தமிழில் தொன்மை, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள், அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு மற்றும் புவியியல் போன்ற அனைத்துப் பாடப்பிரிவுகளில் வெளிவந்த 1,00,000 தமிழ் நூல்கள் இடம்பெற்றுள்ளன. மூன்றாம் தளத்தில் உள்ள ஆங்கில நூல்கள் பிரிவில் கணிப்பொறியியல், தத்துவம், சமயம், சமூக அறிவியல், பொருளாதாரம், சட்டம், அறிவியல் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம், இயந்திரவியல் (Robotics), செய்யறிவு (Artificial Intelligence), வான்வெளித் தொழில்நுட்பம் (Space Technology), பொறியியல், வானியல், கலை, நுண்கலை, விளையாட்டு, சினிமா, வேளாண்மை, உணவு, வரலாறு, புவியியல், உட்பட அனைத்துப் பாடங்களிலும் பதிப்பிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ்பெற்ற பதிப்பாளர்களின் 1,00,000 நூல்கள் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. நான்காம் தளத்தில் உள்ள போட்டித்தேர்வு நூல்கள் பிரிவில் தமிழ்நாடு அரசுப் பணி (TNPSC), ஆசிரியர் தகுதித் தேர்வு (TRB), ஒன்றிய அரசுப் பணி (UPSC), வங்கி (Banking) என அனைத்து வகையான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் இளைஞர்கள் பயன்படுத்தும் வகையில், இப்பிரிவில் போட்டித் தேர்வு நூல்கள் 30,000 இடம்பெற்றுள்ளன. மேலும், ஆங்கிலக் குறிப்புதவி நூல்கள் பிரிவில் கணிப்பொறியியல், தத்துவம், சமயம், சமூக அறிவியல், பொருளாதாரம், சட்டம், அறிவியல் பாடங்கள் சார்ந்த 50,000 ஆங்கில குறிப்புதவி நூல்கள் இடம்பெற்றுள்ளன. ஆறாம் தளத்தில் உள்ள ஆங்கிலக் குறிப்புதவி நூல்கள் பிரிவில் அறிவியல், தொழில்நுட்பம், வரலாறு, புவியியல் போன்ற அனைத்து பாடப்பிரிவுகளில் 60,000 ஆங்கிலக் குறிப்புதவி நூல்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், அரிய நூல்கள் பிரிவில் தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம், தமிழ் வரலாறு, மானுடவியல் பற்றிய 16,000 அரிய நூல்கள், ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியின் இரு கண்கள் என நான் அடிக்கடிச் சொல்வது, கல்வியும் சுகாதாரமும்தான்.

அதனால்தான், கலைஞர் நூற்றாண்டு தொடக்கமான கடந்த ஜூன் மாதம் 15ஆம் தேதி அன்று கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையைச் சென்னை, சைதாப்பேட்டை, கிண்டியில் திறந்து வைத்தேன். ஒரு மாதம் கழித்து ஜூலை 15ஆம் நாளான இன்றைக்குக் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்திருக்கின்றேன். அந்த பெருமிதத்தோடு இங்கு வந்துள்ள அனைவரையும் நான் வருக, வருக, வருக என வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வான் இந்த ஸ்டாலின் என்பதற்கு

எடுத்துக்காட்டுதான் சென்னையில் மருத்துவமனையும், மதுரையில் இந்த நூலகமும்.

இவை இரண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்காத வாக்குறுதிகள்!

தமிழ்நாட்டினுடைய தலைநகர் சென்னை என்றால், இந்த மதுரை, தமிழ்நாட்டினுடைய கலைநகர்!

தலைநகரில், தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தார், அவர் தம்பி கலைஞர்!

இன்று அந்தத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டில், இந்தக் கலைநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் எனும் தென் தமிழ்நாட்டின் அறிவாலயத்தை இந்த அடியேன் அமைத்திருக்கிறேன்.

இந்த நூலகத்தைத் திறந்து வைக்கக்கூடிய பெரும் வாய்ப்பும், பெருமையும் எனக்குக் கிடைத்திருப்பதை எண்ணி, எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இந்த மாமதுரையில் சங்ககால இலக்கியங்களை சாமானியருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் சங்கத்தமிழ் இயற்றிய மாமதுரையில் நூலகம் வைக்காமல் வேறு எங்கு வைக்க முடியும்.

சிலப்பதிகாரம் குறித்தும் காற்சிலம்போடு நீதி கேட்ட கண்ணகி குறித்தும் முத்தமிழறிஞர்

கலைஞர் தீட்டாத எழுத்து ஓவியங்கள் இல்லை. ‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்’ என அறச்சீற்றம் கொண்டு கண்ணகி எரித்திட்ட இந்த நகரத்தில் இலட்சக்கணக்கான நூல்கள் கொண்ட இந்த நூலகத்தினால் அறிவுத் தீ பரவப் போகிறது! திராவிட இயக்கம் என்றாலே அறிவியக்கம்தான்!

தமிழ்ச் சமுதாயத்தினுடைய எழுச்சிக்கும், மீட்சிக்கும் தேவையான கருத்துக்களை எழுதி, பேசி, படித்து வளர்ந்தவர்கள்தான் திராவிட இயக்கத்தினர்! திராவிட முன்னேற்றக் கழகத்தோட தலைமைக் கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அதற்கு அறிவகம் என்று பெயர் வைத்தார். சென்னை, அண்ணா சாலையில் புதியதாகத் தலைமைக் கழகத்தை அமைத்த தலைவர் கலைஞர் அவர்கள் ‘அண்ணா அறிவாலயம்’ என்று பெயர் வைத்தார்கள். ஏனென்றால், இது அரசியல் இயக்கம் மட்டும் இல்லை! அறிவியக்கம்!

படிப்பகங்களால் வளர்ந்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, இன்று பிரம்மாண்டமான நூலகங்களைக் கட்டியெழுப்பிக்கொண்டு இருக்கிறோம். 2,13,338 சதுர அடிப் பரப்பளவில், ரூ.120.75 கோடி மதிப்பில் இந்தக் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அழகாகவும், அற்புதமாகவும் உருவாக்கிக் கொடுத்த, எதிலும் வல்லவர் என்று அழைக்கப்படும், நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களையும், மாணவர்களின் நெஞ்சம் அறிந்த அன்புத் தம்பி, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பொதுப்பணி மற்றும் பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் உள்ளிட்ட இந்த நூலகம் இவ்வளவு பிரம்மாண்டமாக அமைய கடுமையாக உழைத்திருக்கக்கூடிய கடைக்கோடி மனிதர்கள் வரை அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொறுப்பேற்று இருக்கின்ற கடமையையும் தாண்டி, உள்ளார்ந்த அக்கறையும் ஆர்வமும், ஒவ்வொருவருக்கும் இருந்தால்தான் இவ்வளவு நேர்த்தியாக ஒன்றை உருவாக்க முடியும். இதையெல்லாம் தாண்டி, தமிழினத் தலைவர் கலைஞர் மேல் வைத்திருக்கின்ற அன்பின் வெளிப்பாடுதான் இந்த நூலகம்.

மதிப்பிற்குரிய திரு. ஷிவ் நாடார் அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். பெரிதாக, பொது நிகழ்ச்சிகள் எதிலும் அவர் கலந்துகொள்ள மாட்டார். ஆனால், இவரையும், இவரது மகள் ரோஷினி அவர்களையும் மாணவ, மாணவியர்களான நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகதான் நான் அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றேன்.

மிகப்பெரிய தொழில் அதிபர் என்று சொல்வது மட்டுமல்ல, அவருடைய பெருமை; இந்திய தொழிலதிபர்களில் அதிகமான தொகைளை நன்கொடையாக வழங்கக்கூடியவர் என்று பாராட்டப்படக்கூடியவர் அவர்.

“உனக்கு பணம் வரும்போது அதிகப்படியானவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்” என்று இவருடைய தாயார் சொன்னார்களாம். அதற்காகவே அறக்கட்டளை தொடங்கியவர் இவர். 50 நாடுகளில் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் வேலை பார்க்கின்ற அளவுக்கு ஹெச்.சி.எல். நிறுவனத்தினுடைய நிறுவனரான இவரும் உங்களைப்போல அரசுப் பள்ளியில் படித்தவர்தான். பல கிராமங்களைத் தத்தெடுத்து உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

ஒரு கிராமத்தில் பிறந்து, மாநகராட்சிப் பள்ளியில் படித்து, மிகச்சிறிய நிறுவனத்தைச் சொந்த முயற்சியால் தொடங்கி, இன்றைக்கு இவ்வளவு பெரிய மனிதராக அவர் உயர்ந்திருக்கிறார். இப்படிப்பட்டவரை உங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக

அறிமுகப்படுத்தத்தான் இன்றைக்குச் சிறப்பு அழைப்பாளராக அவர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

அவருடைய மகள் ரோஷினி அவர்கள், அந்த நிறுவனத்தினுடைய இயக்குநராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பெண்கள் அனைத்துப் பொறுப்புகளிலும் இறங்கிப் பணியாற்ற வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கனவு நிறைவேறும் காட்சியினுடைய அடையாளமாகவும், இவர்கள் இருவரும் கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழாவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதலில் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். அன்னாருக்கு நன்றி! நன்றி! நன்றி!

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை பொறுத்தவரைக்கும், குழந்தைகள் – மாணவர்கள் – போட்டித் தேர்வர்கள் – மாற்றுத்திறனாளிகள் என அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் ஆறு தளங்கள் – மூன்று இலட்சம் புத்தகங்களைப் பெற்றிருக்கக்கூடிய இந்த நூலகத்திற்கு அறிவுத் தேடலுடன் நீங்கள் வரும்போது உங்களை அன்போடு வரவேற்க தலைவர் கலைஞரே சிலை வடிவமாக இங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

கலைஞரைப் பொறுத்தவரைக்கும் எந்தத் துறையில் நுழைந்தாலும் அந்தத் துறையில், அவர்தான் 'நம்பர் ஒன்'! அரசியலா? ஐம்பது ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். ஐந்து முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர். அதிக முறை சட்டமன்ற உறுப்பினர், நீண்ட கால எதிர்க்கட்சித் தலைவராவும் இருந்திருக்கார்!

சினிமாவா? கதை எழுதினார். திரைக்கதை வசனம் எழுதினார். பாடல்கள் எழுதினார். திரைப்படங்களை தயாரித்தார்.

நாடகமேடையா? நாடகங்களைத் தயாரித்தார், கதை வசனம் எழுதினார். நடிக்கவும் செய்தார்.

பத்திரிகை உலகமா? மாணவனாக இருக்கும்போதே கையெழுத்துப் பிரதியாக

பத்திரிகையை நடத்தினார். பத்திரிகை ஆசிரியராக இருந்தார். எழுத்தாளராக, பத்திரிகையாளராவும் இயங்கினார்.

இலக்கியமா? கவிஞர் – சிறுகதை ஆசிரியர் – நாவலாசிரியர் – உரையாசிரியர் என்று எல்லாவற்றிலும் முத்திரை பதித்தார்.

இப்படிப்பட்ட பன்முக ஆற்றல் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரில்தான் பன்முக ஆற்றலை நீங்களும் வளர்த்துக்கொள்ளக்கூடிய இந்த நூலகம் இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது!

கலைஞரே மிகப்பெரிய நூலகம்தான்! அவர் எழுதிய புத்தகங்களை வைத்தால் அதுவே பெரிய நூலகம் போல இருக்கும்.

நெஞ்சுக்கு நீதி, குறளோவியம், சங்கத்தமிழ், சிலப்பதிகார நாடகக் காப்பியம், தென்பாண்டிச் சிங்கம், தொல்காப்பியப் பூங்கா, பாயும் புலி பண்டாரக வன்னியன், ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் சங்கர், தாய், திருக்குறள் உரை, விடுதலைக் கிளர்ச்சி, வெள்ளிக்கிழமை, புதையல், ஒரே ரத்தம், இருளும் ஒளியும், கிழவன் கனவு, துடிக்கும் இளமை, நளாயினி, பழக்கூடை, கவிதையல்ல, ஆறுமாதக் கடுங்காவல், சிறையில் பூத்த சின்ன சின்ன மலர்கள், வைரமணிகள், நச்சுக்கோப்பை, தூக்குமேடை, உதயசூரியன் – இப்படி அவருடைய புத்தகங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்!

நெஞ்சுக்கு நீதி மட்டும் ஆறு பாகங்கள்!

உடன்பிறப்புகளுக்கு அவர் எழுதிய கடிதங்கள் 54 தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. அவருடைய சட்டமன்ற உரைகள் 12 பாகங்களாக வெளி வந்திருக்கிறது. அவர் ஆற்றிய உரைகள் – சொற்பொழிவுகள் இன்னும் முழுமையாகத் தொகுக்கப்படவில்லை.

1945 முதல் அவர் ஆற்றிய உரைகளைத் தொகுத்தால் மட்டுமே நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளாக வெளியிட முடியும்.

சிறுகதைகள், கவிதைகள், பெட்டிச் செய்திகள், நாடகங்கள், பத்திரிக்கைகளில் எழுதிய துணுக்குகள், ஓவியங்கள், கருத்துச் சித்திரங்கள் – இதையெல்லாம் மொத்தமாகத் தொகுத்தால் இன்னும் பல தொகுதிகள் வெளியாகும்.

இதையெல்லாம் மட்டுமே வைத்து ஒரு தனி நூலகம் அமைக்கலாம். அதனால்தான் கலைஞரே ஒரு நூலகம் என்று சொன்னேன்.

கலைஞரை பற்றி எழுதியவர்கள் – கலைஞரை ஆய்வு செய்தவர்கள் – கலைஞரை மாதிரியே எழுதியவர்கள் என்று தமிழ்நாட்டில் தனக்கென ஒரு எழுதுகோல் படையையே வைத்திருந்தார் தலைவர் கலைஞர்.

நம் தமிழ்நாட்டில் 'கலைஞர் பரம்பரை'–என்றே ஒன்று இருக்கிறது. நம்முடைய இந்தக் கலைஞர் பரம்பரைதான் தமிழ்நாட்டை வாழையடி வாழையாக வளர்த்தெடுக்கின்ற பரம்பரை!

இங்கே பள்ளி கல்லூரி சார்ந்த மாணவ – மாணவியர் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள்! கலைஞருடைய வாழ்க்கையில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் எவ்வளவோ இருக்கிறது!

திருவாரூருக்குப் பக்கத்தில் இருக்குகின்ற திருக்குவளை கிராமத்தில் முத்துவேலருக்கும் - அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த அவர், உங்களைப்போல மாணவராக இருந்த காலத்தில்தான் மொழிக்காகவும், இனத்துக்காகவும் போராடத் தொடங்கினார். திருக்குவளை தொடக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். அப்போது அவர்தான் சட்டாம்பிள்ளை!

சட்டாம்பிள்ளை என்றால் 'க்ளாஸ் லீடர்' என்று அர்த்தம்! திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் 5ஆம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள முடியாது என்று தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார் மறுத்து விட்டார். பள்ளியில் இடம் தரவில்லை என்றால் எதிரே இருக்கக்கூடிய கமலாலயம் தெப்பக்குளத்தில் குதித்து நான் உயிரை விட்டுவிடுவேன் என்று போர்க் குணத்துடன் சொன்னார். ஏனென்றால், படிப்பில் அவருக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது! படிப்பு மேல் அவருக்கு இருந்த ஆர்வம்தான், இந்த ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தினுடைய தாகம்!

படிப்பில் அவருக்கு இருக்கின்ற ஆர்வத்தைப் பார்த்து 5ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்க வாய்ப்புக் கிடைத்தது. கலைஞருக்கு 13 வயது இருக்கக்கூடிய நேரத்தில் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போர் தொடங்கியது. தினமும் மாணவர்களைக் கூட்டிக்கொண்டு கையில் தமிழ்க் கொடியை ஏந்தி இந்தி ஒழிக, தமிழ் வாழ்க என்று அந்த முழக்கத்தை முழங்கிக் கொண்டு கட்டாய இந்தியை எதிர்த்து மாணவர் பேரணி நடத்தினார்.

இந்தி துண்டறிக்கையை இந்தி ஆசிரியருக்கே கொடுத்தார். பன்முகத்தன்மை கொண்ட நம்முடைய இந்திய நாட்டில் ஏராளமான மொழிகள் பேசப்படுகிறது. மற்ற மொழிகளை விட இன்றைக்குத் தமிழ் தனித்தன்மையுடனும், தனித்து இயங்கவும் காரணம், தமிழ்நாட்டில் நடந்த இந்தி திணிப்புக்கு எதிராக நடைபெற்ற போராட்டம்தான் என்பதை யாரும் மறந்திடக்கூடாது. அதற்குத் திராவிட இயக்கமும், தி.மு.க.வும்தான் காரணம்!

'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' அமைத்து வாரம்தோறும் மற்ற மாணவர்களுக்குப் பேச்சுப் பயிற்சி கொடுத்தார் கலைஞர். அப்போதே, மாணவர் ஒற்றுமைக்கு என்று தனி அமைப்பு ஏற்படுத்தி வாரம்தோறும் கூட்டம் நடத்தினார்.

16ஆவது வயதில் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' ஒன்றைத் தொடங்கினார். மாணவர்களுடைய எழுத்தாற்றலை வளர்க்க, 'மாணவர் நேசன்' என்ற மாத இதழைக் கையெழுத்துப் பிரதியாகத் தொடங்கி, அதனுடைய ஆசிரியராகவும் செயல்பட்டார்.

17ஆவது வயதில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தில் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார். அப்போதுதான் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் வாழ்த்துப்பா அனுப்பி வைத்தார். 1942இல் பேரறிஞர் அண்ணா நடத்திய 'திராவிட நாடு' மூன்றாவது இதழில், 'இளமைப் பலி' என்ற கலைஞருடைய கட்டுரை வெளிவந்தது. திருவாரூரில் நடந்த நபிகள் நாயகம் விழாவுக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், கலைஞரை நேரில் அழைத்து சந்தித்தார். கலைஞருடைய எழுத்தாற்றலைப் புகழ்ந்தார். அத்துடன் நிற்கவில்லை, 'நன்றாகப் படி' என்று அறிவுரை சொன்னார் பேரறிஞர் அண்ணா.

'முரசொலி வெளியீட்டுக் கழகம்' என்ற பேரில் ஒரு நிறுவனம் தொடங்கி மாத இதழாக 'முரசொலி'யை வெளியிட்டார். அதில் 'சேரன்' என்ற புனைபெயரில் கருத்துச் செறிவுமிக்க கனல் தெறிக்கும் கட்டுரைகளை எல்லாம் எழுதினார்.

இப்போது நான் சொன்ன இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கலைஞருடைய 20 வயதிற்குள் நடந்தது. உங்களைப் போலவே, பள்ளியில் படிக்கின்றபோது தமிழ்ப் பற்று இருந்ததால்தான் எழுத்தாற்றல் பெற்று, போராட்டக் குணத்தின் காரணமாக மிகப்பெரிய தலைவரானார் கலைஞர்.

பள்ளியில் நன்றாகப் படி என்று அண்ணா சொன்னாலும், கலைஞர் படித்தது என்னவோ, அண்ணாவோட கொள்கைப் பள்ளியிலும், பெரியாரின் போராட்டக் கல்லூரியிலும்தான்!

அன்றைக்கு இருந்த சமூகச் சூழலும், அரசியல் சூழலும் கலைஞருக்குள்ளே இருந்த போராளியும், அவர் விரும்பிய பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போனதற்குக் காரணம். ஆனால், கலைஞருக்குள்ளே இருந்த அந்தப் போராளிதான் இன்றைக்குப் பலரும் படிக்கக் காரணம்! கலைஞரை முதலில் பார்த்தபொழுது அண்ணா சொன்னது 'நன்றாகப் படி!', அண்ணா மட்டுமில்லை, இன்றைக்கு நான் கூட உங்களைப் போன்ற மாணவர்களைச் சந்திக்கின்றபோது எல்லாம் என்ன சொல்கிறேன்? 'நல்லா படியுங்கள்!' 'நல்லா படியுங்கள்!' என்பதுதான்.

படிப்பும், வேலைவாய்ப்பும் நம்முடைய உரிமை என்று கிளர்ந்தெழுந்த இனம்தான், நம்முடைய திராவிட இனம்! எத்தனை தடைகள் வந்தாலும், படிப்பை மட்டும் நீங்கள் யாரும் கைவிடக் கூடாது. படிப்பு மட்டும்தான் யாராலும் திருட முடியாத நிலையான சொத்து!

அந்தப் படிப்பை நாம் எல்லோரும் அடையவேண்டும் என்ற தலைவர் கலைஞர் உருவாக்கியதுதான் இன்றைய நவீன தமிழ்நாடு!

இன்றைக்குத் தமிழ்நாட்டில் நீங்கள் பார்க்கின்ற பெரும்பாலானவை கலைஞரால் உருவாக்கப்பட்டவை! நவீன கலைஞரால் உருவாக்கப்பட்டது! ஓர் இனத்தின் வளர்ச்சிக்கு முதலில் தேவை கல்வி. அதை முதலில் கொடுத்தது,திராவிட இயக்கத்தின் தாய்க்கட்சியான நீதிக்கட்சி!

கல்விப் புரட்சியை ஏற்படுத்தியது தி.மு.க.வோட ஆட்சி! புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்த பிறகுதான் பல்லாயிரக்கணக்கான பிள்ளைகள் பள்ளிகளை நோக்கி வந்தார்கள். இதை அறிந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களே, 'எனக்கு இது மகிழ்ச்சியாக இருக்கிறது, கலைஞர் கருணாநிதியிடம் சென்று சொல்லுங்கள்' என்று சொல்லி அனுப்பினார்!

அந்தப் பெருந்தலைவர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்தவர் யார்? நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்த நாளில்தான் இந்த நூலகத்தை இன்றைக்கு நாம் திறந்து வைத்திருக்கிறோம். தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளை அதிகப்படுத்தினார் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்! அனைத்துப் பள்ளிகளிலும், நூலகம் அமைத்தார்! உடற்கல்வியைக் கட்டாயம் ஆக்கினார்! அறிவியல் பாடங்களை அதிகப்படுத்தி, அறிவியல் கூடங்களை அமைத்தார்! பாடப்புத்தகங்களை இலவசமாக வழங்கினார்! சத்துணவில் வாரம் 5 நாட்கள் முட்டைகளை வழங்கினார். தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அமைத்தார்!

கிராமப்புற மாணவர்களுக்கும், முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கும் சலுகைகள் கொடுத்தார்! அனைத்து மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கினார்! தமிழ்வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்தார்! கணினிப் பாடத்தை அறிமுகம் செய்தார்!

திமு.க.வின் முதல் ஆட்சிக்காலத்திலேயே, தமிழ்நாட்டில் ஏராளமான அரசுக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. 1947 முதல் 1967 வரையிலான 20 ஆண்டு காலத்தில் திறக்கப்பட்ட மொத்த கல்லூரிகள் எவ்வளவு தெரியுமா? 68 தான்! ஆனால், கலைஞர் முதலமைச்சராக இருந்த 1969 முதல் 1975 வரையிலான காலக்கட்டத்தில், அதாவது ஏழு ஆண்டுகளில், 97 அரசுக் கல்லூரிகள் திறக்கப்பட்டன! கோவையில் வேளாண் பல்கலைக்கழகம்! சென்னையில் கால்நடைப் பல்கலைக்கழகம்! டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்! உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்! நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்! சேலம் பெரியார் பல்கலைக்கழகம்! ஏராளமான மருத்துவக் கல்லூரிகள்! இளநிலைப் படிப்புகளுக்கு நுழைவுத்தேர்வு ரத்து!

இப்படி, கல்வியைக் கொடுத்துவிட்டால், ஒரு மனிதருடைய வளர்ச்சியை யாரும் தடுக்க முடியாது என்று அதற்கான மொத்த அடித்தளத்தையும் அமைத்துக் கொடுத்தது கலைஞரோட தி.மு.க. ஆட்சி! இதனுடைய தொடர்ச்சியாகதான் இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசும் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறது.

தரமான கல்வி வழங்குவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்பதற்கான அனைத்துப் பணிகளையும் செய்து கொண்டு இருக்கிறோம்.

இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன், 'எண்ணும் எழுத்தும்' இயக்கம், பசியோடு பள்ளிக்கு வரக்கூடிய மாணவர்களின் பசியைப் போக்க 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' எனப் பல்வேறு திட்டங்களைப் பள்ளிக் கல்வித்துறை சார்பில் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவியர் உயர்கல்வி படிக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற "புதுமைப்பெண் திட்டம்". வருகிற செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில், "கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" தொடங்கப் போகிறோம்.

தகுதியுடைய குடும்பத்தலைவிகள் அனைவருக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கிடைக்கப் போகிறது. உங்கள் குடும்பத்தில் உங்கள் அம்மாவே இதனைப் பெறுவார்கள். இத்தனை ஆயிரம் கோடி மதிப்பிலான பெரிய சமூகநலத் திட்டம் இதுவரை இல்லை என்று சொல்கின்ற மாதிரி மாபெரும் திட்டமாக அந்தத் திட்டம் உருவாக்கப்பட இருக்கிறது.

ஏற்கெனவே, இந்தியாவுக்கே முன்னோடி திட்டமான, மகளிருக்கு இலவசப் பேருந்து பயணத்தை வழங்குகிறோம். இந்தியாவில், மற்ற மாநிலங்களும் நம்மை பின்பற்றக்கூடிய அளவிற்கு மகத்தானத் திட்டங்களை நாம் உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்லும் "திராவிட மாடல்" கோட்பாடு இதுதான். எல்லார்க்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். ஆட்சிப் பொறுப்பின் மூலமாக அதைத்தான் செய்து கொண்டு இருக்கிறோம்.

மக்களுக்குப் பணி செய்ய, தொண்டு செய்ய கிடைத்த வாய்ப்பாகத்தான் ஆட்சிக்கு வந்து இருப்பதையும், முதலமைச்சர் என்கின்ற நாற்காலியில் அமர்ந்திருப்பதையும் நான் நினைக்கிறேன்.

தமிழ்நாடு அனைத்துத் துறையிலும், முன்னேறி இந்தியாவோட தலைசிறந்த மாநிலமாக ஆனது என்று சொல்லவேண்டும். அந்த ஒற்றை இலக்குடன்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் அரசாக, அனைத்துத் தரப்பு மக்களும் போற்றும் அரசாக நமது தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

மாணவக் கண்மணிகளுக்கு நான் சொல்வது, அரசு உருவாக்கித் தரக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிக்கின்ற காலத்தில் கவனச் சிதறல்கள் வேண்டாம். படிப்பு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயல்படுங்கள். நாளைய நம்பிக்கை நீங்கள். நாளைய எதிர்காலம் நீங்கள். உங்கள் பெற்றோர் மட்டுமல்ல, இந்த நாடே உங்களை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

நிறைவாக, தலைவர் கலைஞரின் வரிகளோடு முடிக்கிறேன். "புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தைப் புத்தகமாய்ப் படிப்போம்"

நன்றி! வணக்கம்!

அன்புப் பரிசாகப் பெறப்பட்ட 7,740 புத்தகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையின் பொது நூலகப் பயன்பாட்டிற்கு வழங்கல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.07.2023 அன்று, சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, நேரு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கிலம் - தமிழ் அகராதிகளையும், ஆசிரியர்களுக்குப் பரிசுப் பொருட்களையும், அப்பள்ளிகளில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுத் தொகையும் வழங்கி, வாழ்த்தினார்.

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான ஜூலை 15யை ஒவ்வொரு ஆண்டும் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2006ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, அதன்படித் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இக்கல்வியாண்டில் கல்வி வளர்ச்சி நாளையொட்டி சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்ற கல்வியாண்டில் (2022-2023) சிறப்பாகச் செயல்பட்ட நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளின் 12ஆம் வகுப்பைச் சேர்ந்த 6 மாணவ, மாணவியர்களுக்கு 60 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும், 10ஆம் வகுப்பைச் சேர்ந்த 6 மாணவ, மாணவியர்களுக்கு 44 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

மேலும், நேரு அரசு ஆண்கள், பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11, 12ஆம் வகுப்புகளில் பயிலும் 777 மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கிலம் - தமிழ் அகராதிகளை வழங்கிடும் அடையாளமாக

4 மாணவ, மாணவியர்களுக்கு அகராதிகளையும், பள்ளி ஆசிரியர்களுக்குப் பரிசுப் பொருட்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தன்னைச் சந்திக்க வருபவர்கள் அன்புப் பரிசாக வழங்கிய 7,740 புத்தகங்களைப் பள்ளிக்கல்வித் துறையின் பொது நூலகப் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக அப்புத்தகங்களை மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களிடம் வழங்கினார்.

படமும்/செய்தியும்

தியாகிகள் தினம்

தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் 17.07.2023 அன்று சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகி செண்பகராமன், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படங்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகரச் சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தருமபுரியில்
“கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முகாம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கிவைத்து
ஆற்றிய உரை - 24.07.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.07.2023 அன்று, தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமைத் தொடங்கி வைத்தார். மேலும், விண்ணப்பங்களை பயோமெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன் கலந்துரையாடினார்.

நிதிநிலை அறிக்கையில், மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000

வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் - பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15ஆம் நாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். தமிழ்நாட்டு மகளிரின் சமூக, பொருளாதார வாழ்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக்கூடிய இத்திட்டத்திற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.7,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டது.

மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் குறித்துத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விளக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 27.03.2023 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் எனப் பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்று அறிவித்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

பெண்களுக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடும் வழங்கி பெண்ணுரிமைக் காத்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று இத்திட்டத்திற்குப் பெயரிடப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்திட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் ஒவ்வொரு துறைகளின் பங்களிப்பு குறித்தும், மாவட்ட நிருவாகத்தின் பொறுப்புகள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 07.07.2023 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள், இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும். அவர்களிடம் குடும்ப அட்டை,

ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, இந்த மகளிர் உதவித் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்று தெரிவித்ததோடு, எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்று அறிவுறுத்தினார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெறத் தகுதியுடையோர்

ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு பயனாளி மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர். குடும்ப அட்டையில் பெயர் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஒரு குடும்பமாகக் கருதப்படுவர். ஒவ்வொரு தகுதிவாய்ந்த குடும்பத்திலும் உள்ள குடும்பத்தலைவி கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கலாம். குடும்ப அட்டையில் குடும்பத்தலைவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பெண் குடும்பத் தலைவியாகக் கருதப்படுவார். குடும்ப அட்டையில் ஆண் குடும்பத் தலைவராகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத்தலைவரின் மனைவி குடும்பத்தலைவியாகக் கருதப்படுவார். குடும்ப அட்டையில் ஆண் குடும்பத்தலைவரின் மனைவியின் பெயர் ஏதேனும் காரணத்தினால் இல்லாதபட்சத்தில், குடும்பத்திலுள்ள குடும்பத்தலைவியாக இதர பெண்களில் ஒருவர் கருதப்படுவார். ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட 21 வயது நிரம்பிய பெண்கள் இருந்தால், இத்திட்டத்தின்கீழ்ப் பயன்பெற, ஒரு நபரைக் குடும்ப உறுப்பினர்கள் தேர்வு செய்து விண்ணப்பிக்கச் செய்யலாம்.

மேலும், திருமணமாகாத தனித்த பெண்கள், கைம்பெண்கள், திருநங்கைகள் தலைமையில் குடும்பங்கள் இருந்தால் அவர்களும் குடும்பத் தலைவிகளாகக் கருதப்படுவர்.

பொருளாதாரத் தகுதிகள்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்கும் குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குக் கீழ் இருக்க வேண்டும், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாகப் புன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும், வீட்டு உபயோகத்துக்கு ஆண்டிற்கு 3,600 யூனிட்டிற்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைச் செயல்படுத்தும் முறை

இத்திட்டத்திற்கு விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப அட்டை இருக்கும் நியாயவிலைக் கடை அமைந்திருக்கும் விண்ணப்பப் பதிவு முகாமில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பொது விநியோக நியாய விலைக் கடை பணியாளரும் தங்களது பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு ஒவ்வொரு தெருவாரியாக நிர்ணயிக்கப்பட்ட தேதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்ட விண்ணப்பத்தினை வீடுகளுக்குச் சென்று வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்படும் விண்ணப்பங்களில் டோக்கன் எண், பயனாளிகள் முகாமிற்கு வருகை புரிய வேண்டிய தேதி, நேரம் குறிப்பிட்டு வழங்கப்படும்.

அக்குறிப்பிட்ட நாளில் முகாமிற்கு வருகை தரும் விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இதற்கெனத் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ள கைப்பேசி செயலி வழியாக நேரடியாகப் பதிவு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் முகாமிற்கு வரும்பொழுது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், மின்வாரிய கட்டண இரசீது ஆகியவற்றை அசலாகச் சரிபார்த்தலுக்கு கொண்டுவர வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவு செய்தவுடன் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதற்கான தகவல் விண்ணப்பதாரருக்குக் கைப்பேசி வழியாக குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்படும். பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் மின்னணு முறையில் பரிசீலிக்கப்பட்டுத் தகுதியான விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டவுடன் அது தொடர்பான தகவல் விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும். திட்டம் தொடங்கப்பட்டவுடன் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் பலனாக அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

தருமபுரியில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் விண்ணப்பப் பதிவு முகாம் தொடங்கி வைத்தல்

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, அவ்விண்ணப்பங்களைப் பயோ-மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விண்ணப்பம் செய்ய வந்த மகளிருடன், அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்துக் கேட்டறிந்து, கலந்துரையாடினார். பின்னர், அங்கு நடைபெற்ற மக்களைத் தேடி மருத்துவம் முகாமினைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தருமபுரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பம் பெறும் முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதற்கட்டமாக, 24.07.2023 முதல் 04.08.2023 வரை நல்லம்பள்ளி, கடத்தூர், காரிமங்கலம், மொரப்பூர், பாலக்கோடு ஆகிய வட்டாரங்களில் உள்ள 494 நியாய விலைக் கடைகளை உள்ளடக்கிய 2,21,484 குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இரண்டாவது கட்டமாக, 05.08.2023 முதல் 16.08.2023 வரை தருமபுரி, ஏரியூர், அரூர், பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரங்களில் உள்ள 554 நியாய விலைக்கடைகளை உள்ளடக்கிய 2,47,111

குடும்ப அட்டைதாரர்களுக்குச் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் தமிழ்நாடு முழுமைக்குமான திட்டமாக இருந்தாலும், நான் எதற்காகத் தருமபுரிக்கு வந்திருக்கிறேன் என்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் குறிப்பிட்டு சொன்னதுபோல, அதாவது 34 ஆண்டுகளுக்கு முன்னால் 1989ஆம் ஆண்டு இதே தருமபுரி மாவட்டத்தில்தான் மகளிர் சுயஉதவிக் குழு என்ற ஒரு மாபெரும் அமைப்பை அன்றைக்குத் தமிழகத்தின் முதல்வராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மகளிர், தாய்மார்கள் தன்னம்பிக்கையோடு வாழ்ந்திட வேண்டும், சுயமரியாதை உணர்வோடு வாழ்ந்திட வேண்டும், யாருடைய தயவை எதிர்பார்க்காமல், தன்னுடைய சொந்தக்காலில் அவர்கள் நிற்கவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட திட்டம்தான் மகளிர் சுயஉதவிக் குழு என்கிற அந்த அற்புதமான திட்டம். ஏழை எளிய மகளிரைக் கொண்டு முதன்முதலில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டன.

அன்று தலைவர் கலைஞர் அவர்கள் விதைத்த விதைதான் இன்றைக்கு மாபெரும் திட்டமாகத் தமிழ்நாடு எங்கும் தழைத்து, வளர்ந்து இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் அது ஒளியை ஏற்றி வைத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு கணக்கெடுத்துப் பார்த்தால், 4 இலட்சத்து 57 ஆயிரம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதில் 51 இலட்சத்து 46 ஆயிரம் மகளிர் பங்கெடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டில் மட்டும் 3,90,633 குழுக்களுக்கு ரூ.25,642 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2006-2011 காலக்கட்டத்தில் நான் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். துணை முதலமைச்சராகவும் இருந்தேன். அந்தச் சமயத்தில், அந்தக் காலக்கட்டத்தில், பல்லாயிரக்கணக்கான மகளிர் சுயஉதவிக் குழுவினுடைய உறுப்பினர்களையும், குழுக்களையும் நான் உருவாக்கினேன். அவர்களுக்கான கடனுதவிகளைப் பல மணி நேரம் மேடைகளில் நின்று நான் வழங்கினேன். அதையெல்லாம் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

சுயநிதி, வங்கிக்கடன், கடனுதவி

இன்னொரு சுவையான செய்தியைக்கூட உங்களிடத்தில் நான் சொல்லவேண்டும். மறக்க முடியாத நிகழ்ச்சி, என்னவென்று கேட்டீர்கள் என்றால், நான் அன்றைக்குத் துணை முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசு நிகழ்ச்சிக்காக நான் செல்கிறபோது, அதில் கட்டாயம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் பங்கேற்க வைத்தேன். பங்கேற்க வைத்து அவர்கள் அத்தனை பேருக்கும் சுழல்நிதி, வங்கிக்கடன், கடனுதவி இதையெல்லாம் அன்றைக்கு மானியமாக வழங்கினோம். அப்படி வழங்குகின்றபோது, ஒவ்வொரு நிகழ்ச்சியில் குறைந்தபட்சம் 5,000 பேர், பல மாவட்டங்களில் 7,000, 8000, 9,000, 10,000 பேர் இருந்தார்கள். அவ்வளவு பேருக்கும், ஒருத்தர் விடாமல், இப்போது அரசு நிகழ்ச்சி என்று பார்த்தீர்கள் என்றால், அது அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அரசு அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஒரு அரசு நிகழ்ச்சி நடத்துகின்றபோது, நலத்திட்ட உதவிகள் வழங்குவார்கள். ஒரு 5, 6 பேருக்கு அல்லது 10 பேருக்கு வழங்கிவிட்டு மீதமிருக்கக்கூடிய பயனாளிகள் எல்லாம் தயவு செய்து நேரமில்லை அதனால் உங்கள் வீடு தேடி வரும் இல்லையென்றால் அலுவலகத்திற்குச் சென்று நீங்கள் வாங்கிச் செல்லுங்கள் என்று ஒரு செய்தி சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். இது எல்லாம் கடந்த காலத்தில் நடந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. காரணம் நான் துணை முதலமைச்சராக இருந்தபோது, உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது, மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில், எத்தனை பேர் அந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்களோ, அத்தனை பேருக்கும் தந்துவிட்டுத்தான் நான் அந்த நிகழ்ச்சியைவிட்டு வெளியில் சென்றிருக்கிறேன் என்ற உண்மையான செய்தியை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம் என்ன என்று கேட்டால், அலுவலகத்திற்கு வந்து வாங்கிச் செல்லுங்கள் என்று சொன்னால், சில பேருக்குச் சங்கடங்கள் ஏற்படும். அதனால் பல பிரச்சினைகள் எல்லாம் வரும். பலபேருக்கு கிடைக்காமல்கூட போய்விடும். அந்த நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான், அந்த முறையை அப்போது நான் கையாண்டேன். அப்போதுகூட அவர்களுக்கெல்லாம் நம்பர் கொடுத்து வரிசையாக வரச் சொல்லுவோம். மேடைக்கு வந்து அந்தச் சுழல்நிதியை என் கையால் வாங்கிப் போவார்கள். ஒரு நிகழ்ச்சியில் இப்படி வாங்கிக் கொண்டிருக்கும்போது, ஒரு வயதான தாயார் மேடைக்கு வந்தார்கள், என் கையைப் பிடித்துச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கிறோம், நீங்கள் கூப்பிடும்போதுதான் மேடைக்கு வந்து வாங்கிக்கொண்டு செல்கிறோம். ஆனால் நானும் பார்க்கிறேன், வந்த நேரத்திலிருந்து நீங்கள் அத்தனை பேருக்கும் கொடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதுவும் 10, 20 பேர் என்றால் பரவாயில்லை, 5,000 பேருக்குத் தருவதால் கிட்டதட்ட 2, 3 மணி நேரம் ஆகுமே, இவ்வளவு நேரம் நின்று கொடுப்பதனால் உங்கள் கால் வலிக்கவில்லையா? ஏன் உட்கார்ந்து கொண்டு கொடுங்கள், என்று அந்தத் தாய் என்னைப் பார்த்துச் சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன். நான் நின்றுகொண்டு கொடுக்கும்போது எனக்குக் கால் வலிக்கவில்லை. காரணம் என்னவென்று கேட்டால், இதை நீங்கள் வாங்குகின்றபோது உங்கள் முகமலர்ச்சியைப் பார்க்கிறேன், அதில் எனக்குக் கால் வலி பறந்து போய்விட்டது என்று நான் சொன்னேன். எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், என்னை பெருமைப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. அது முறையாகச் சென்று சேரவேண்டும், எந்த உணர்வோடு தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை உருவாக்கினாரோ, அந்தத் திட்டம் மக்களுக்கு, குறிப்பாகத் தாய்மார்களுக்குப் போய் சென்றடையவேண்டும். பயனடையவேண்டும், என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றினோம்.

இன்றைக்குக் கம்பீரமாக இது வளர்ந்து வந்திருப்பதைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன். அப்படிப்பட்ட அந்தச் சிறப்பான திட்டத்திற்கு விதை போட்ட மண்தான் இந்தத் தருமபுரி மண் என்பதை நான் நினைத்து, நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

ஊரக வாழ்வாதாரத் திட்டம்

இந்த மாவட்டத்தில், ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் 14 ஆயிரத்து 104 குழுக்களிலுள்ள, 1 இலட்சத்து 69 ஆயிரத்து 248 மகளிர் குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். மேலும் கடந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் 8 ஆயிரத்து 625 குழுக்களுக்கு ரூ.751 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தருமபுரியில் விதைத்தால், அது தமிழ்நாடு முழுக்க முளைக்கும் என்ற நம்பிக்கையால்தான் இன்றைக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தையும் இங்கு நாங்கள் தொடங்கி வைத்திருக்கிறோம்.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான், என்று சொல்லி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டேன் அல்லவா? அந்தப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு முதன்முதலில் கோட்டைக்குச் சென்று முதல் கையெழுத்திட்டது எது? என்று கேட்டால், தமிழ்நாட்டுக்கான நலத்திட்ட உதவிகள். அவைகள் எல்லாம் இன்றைக்கு நாள்தோறும் நடந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

சுயமரியாதைக் கொள்கையில் உறுதியாக இருந்தவர் தந்தை பெரியார், இனமான எழுச்சியில் அறிவுச்சுடராக விளங்கியவர் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இவர்கள் எல்லாம் வகுத்துத் தந்திருக்கக்கூடிய பாதையில்தான், தமிழ்நாட்டை வளமான, வலிமையான மாநிலமாக, அனைத்துத் துறைகளிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்திடச் செய்வதற்காக, நாள்தோறும் எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை, பல்வேறு மக்கள் பயன்படக்கூடிய திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

மகளிர் இலவசப் பேருந்துப் பயணம்

முதன்முதலில் பதவியேற்றுக் கொண்டு கவர்னர் மாளிகையிலிருந்து நேராகக்

கோட்டைக்குச் சென்று, நான் இட்ட முதல் கையெழுத்து எது? என்று கேட்டால், மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து, அதுதான் நான் போட்ட முதல் கையெழுத்து. கடுமையான நிதி நெருக்கடி. அதுமட்டுமல்ல, போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமையில் மிகவும் மோசமாக இருக்கக்கூடிய ஒரு துறை. அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், அந்தக் காலக்கட்டத்தில், கடுமையான சூழ்நிலையில், கோடிக்கணக்கான மகளிருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன் அந்தக் கோப்பில் நான் கையெழுத்திட்டேன்.

★ ஒரு நாளைக்கு 36 இலட்சம் மகளிர் இலவசமாக அந்தப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை 283 கோடி முறை பெண்கள் பயணம் செய்திருக்கிறார்கள். இதனால், மாதந்தோறும், ரூ.800 முதல் ரூ.1,000 வரை பெண்களால் சேமிக்க முடிகிறது. இதுதான் ரொம்ப, ரொம்ப முக்கியம்.

★ அரசுப்பள்ளியில் பயிலும் மாணவிகள் உயர்கல்வி பெற்றாகவேண்டும் அதற்கு அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகை. அந்த உதவித்தொகை அளித்தால் அந்த மாணவிகளுக்கும் அவர்களுடைய குடும்பத்திற்கும் அது பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் "புதுமைப் பெண் திட்டம்" என்ற ஒரு அற்புதமான திட்டத்தினை நாம் இன்றைக்குத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தின் மூலமாகத் தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்துப் பார்த்தால், 2,11,506 மாணவிகள் மாதந்தோறும் ரூ.1,000 பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில் மட்டும் இந்தத் திட்டத்தின் மூலமாக 11, 252 மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்

★ காலை உணவுத் திட்டம். நீதிக்கட்சியினுடைய தலைவர்களில் ஒருவராக இருந்த திரு. தியாகராயர் அவர்கள்தான் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும் என்பதற்காக, அவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்திருக்கக்கூடிய அந்தப் பள்ளிச் செல்வங்கள் படிக்க வேண்டும் என்பதற்காக, அப்போது மதிய உணவுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பிறகு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி அதைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்தார். அதற்குப்பிறகு மறைந்த மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டம் என்று பெயரை மாற்றி அதை விரிவாக்கி இன்னும் சிறப்பாக நிறைவேற்றினார். அதை மறுக்க முடியாது. ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், சத்துணவு திட்டத்தை நிறுத்திவிடுவார்கள் என்று திட்டமிட்டே பிரச்சாரமே நடந்தது. ஆனால் கலைஞர் ஆட்சிக்கு வந்தார். சத்துணவை, உண்மையான சத்துணவாக நான் வழங்குகிறேன் என்று சொல்லி, முட்டையோடு கலந்த சத்துணவை வழங்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

இவையெல்லாம் அடிப்படையாக வைத்துத்தான், இந்தக் காலை உணவுத் திட்டம். சத்துணவுத் திட்டம் என்பது மதியம் வழங்கப்படுகிறது. பள்ளிக்கு வந்தபிறகு மதியம் அந்த உணவு வழங்கப்படுகிறது.

பள்ளிக்கு வீட்டிலிருந்து காலையில் 7, 8 மணிக்கு புறப்படுகிறார்களே, அதில் 100க்கு 99 சதவீதம் காலைச் சிற்றுண்டியைச் சாப்பிடாமலேயே அவசர அவசரமாகப் புறப்பட்டு வந்துவிடுகிறார்கள். ஆனால் பசியோடு வரக்கூடிய அந்தக் குழந்தைகள் எப்படிக் கவனத்தை அந்தக் கல்வியில் செலுத்தமுடியும். ஆகவேதான், அதற்காகச் சிந்தித்து, யோசித்து, காலையில் அந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்கவேண்டும் என்று முடிவு செய்து 'முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்' என்ற பெயரில் திட்டத்தை உருவாக்கி பள்ளிக்கூட மாணவ, மாணவியர்க்குக் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது.

2 இலட்சம் மாணவ, மாணவியர் தினமும் காலையில் அந்த உணவை அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் இப்போது வரக்கூடிய காலக்கட்டங்களில் இந்த மாதத்திலிருந்து விரிவுபடுத்தப் போகிறோம். எப்படி என்று கேட்டீர்கள் என்றால், அது ஒரு குறிப்பிட்ட பள்ளிகளுக்குத்தான், 2 இலட்சம் மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில்தான் அதை நிறைவேற்றிக் கொண்டிருந்தோம். இப்போது அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும், அந்தக் காலைச் சிற்றுண்டியை வழங்கவேண்டும் என்று முடிவு செய்து 18 இலட்சம் மாணவர்கள் அதில் இனிமேல் பயன்பெறப் போகிறார்கள் என்ற செய்தியை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரிசையில்தான் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். அந்த மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்திற்கு எப்படிக் கலைஞர் அவர்கள் மகளிருடைய முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தாரோ, அந்தத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரைத்தான் இதற்கும் சூட்டவேண்டும் என்று முடிவு செய்து "கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" என்ற பெயரில் அதை உருவாக்கியிருக்கிறோம்.

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை

பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்க வேண்டும் என்று 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை சீர்திருத்த மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றினார். அப்படி நிறைவேற்றிய தீர்மானங்களில் மிக, மிக முக்கியமான ஒரு தீர்மானம்தான் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கவேண்டும் என்ற அந்தத் தீர்மானம். 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் தந்தை பெரியார் அவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அந்தத் தீர்மானத்தை 1989ஆம் ஆண்டு 60 வருடங்களுக்குப் பிறகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்திலே பெண்களுக்குச் சொத்தில் சமஉரிமை வழங்க வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றித் தந்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இதுதான் பெண்ணினத்திற்குத் திராவிட இயக்கம் வழங்கிய மாபெரும் அதிகாரக் கொடை. இதன் அடுத்த கட்டமாகத்தான் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை வடிவமைத்துள்ளோம்.

இல்லறப் பொறுப்புகளுடன் பல்வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கக்கூடிய, அதன்மூலம் தங்களுடைய குடும்பங்களுக்கு, அந்தக் குடும்பத்தில் இருக்கக்கூடிய நபர்களுக்கெல்லாம் பணி செய்து அந்தக் குடும்பத்தின் உயர்வுக்கு உழைத்துக் கொண்டிருக்கக்கூடிய மகளிரின் உழைப்பை அங்கீகரிக்க வேண்டும். அதற்குரிய மரியாதை தரவேண்டும். இதனை மனதில் வைத்துக்கொண்டுதான், கடந்த சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாக வழங்குவோம் என்று வாக்குறுதி அளித்தோம்.

சொன்னதைச் செய்ய தொடங்கிவிட்டதன் அடையாளம்தான் இன்றைக்கு நீங்கள் பார்க்கக்கூடிய இந்தக் காட்சி. இந்த விழா.

சமூக நீதித் திட்டம்

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நான் சொன்னேன். "தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூகநீதித் திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் நிலைபெறவுள்ள, ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத்தலைவிகளுக்கு, மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற வகையில் அமைந்திடும் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை" என்ற திட்டத்தை நான் அறிவித்தேன்.

மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும் இந்தத் திட்டத்தின் மூலம், நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரைக்குச் சென்று கொண்டிருக்கக்கூடிய மீனவ சமுதாயத்தைச்

சார்ந்திருக்கக்கூடிய மகளிர், கட்டுமானத் தொழிலில் ஈடுபடக்கூடிய மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரேநாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் சென்று பணிபுரியக்கூடிய விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய மகளிர், எனப் பல்வேறு வகையில் தங்கள் விலைமதிப்பில்லாத உழைப்பைத் தொடர்ந்து வழங்கிவரும் பெண்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறுவார்கள் என்று நினைத்துத் தெளிவாகச் சொன்னேன். யாருக்கெல்லாம் கிடைக்கும் என்று கேட்டார்கள், 'யாருக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் அவசியம் தேவை இருக்கிறதோ, அவர்கள் அனைவருக்கும் கிடைக்கும் என்று நான் அழுத்தமாகச் சட்டமன்றத்தில் சொன்னேன்.

இந்தத் திட்டத்தை முறையாக செயல்படுத்துவதற்காகக் கடந்த ஆண்டு வரவு-செலவு அறிக்கையில் ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஒரு மாபெரும் திட்டம் கிடையாது. இதுவரை இப்படிப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு இந்த மாபெரும் திட்டம். அடுத்த நிதி ஆண்டில் ரூ.12 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது என்பதையும் தெரிவித்திருக்கிறேன்.

மகளிரின் சமூக, பொருளாதார நிலைமை

இந்தத் திட்டம் வருகிற செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் அன்று இந்தத் திட்டம் தொடங்கப்படவுள்ளது. அதன்பிறகு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உங்களது வங்கிக் கணக்கில் வந்துவிடும். அதனை யாரும் தடுக்க முடியாது. எந்தத் தவறும் நடக்க வாய்ப்பே கிடையாது. இது அரசாங்கம் தருகிற உதவிப் பணமாக நீங்கள் கருத வேண்டியதில்லை. அது உங்களுடைய உரிமைத் தொகை, மகளிர் உரிமைத் தொகை அதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இத்திட்டத்தில் பயனடையக்கூடிய வகையில், அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சியர்கள் அதை உறுதி செய்தாக வேண்டும்.

இந்த மகத்தான திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள மகளிரின் சமூக, பொருளாதார நிலைமை பெருமளவில் மேம்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாறிவரும் சமுதாய, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்பப் பெண்களின் பங்களிப்பு, ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சியிலும், மாநிலத்தில் ஏன் நாட்டின் வளர்ச்சிக்காகவும் கூட மிகப்பெரிய உந்துசக்தியாகத் திகழ்ந்து வருகின்றது.

இந்தப் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் பெண்களின் சுயமரியாதையையும், பொருளாதார விடுதலையையும் வழங்க தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக இன்று இந்தக் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தினை" நடைமுறைப்படுத்த நாமெல்லாம் ஒன்று கூடியுள்ளோம்.

இப்படி ஒரு திட்டத்தை அறிவித்தபோது, இதை நிறைவேற்ற முடியாது, வெறும் பொய்யான

வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள் என்று சில பேர் அரசியல் ரீதியாகப் பேசினார்கள். நான் அதற்கெல்லாம் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. பதில் சொல்லவும் தயாராக இல்லை. பொய்யான வாக்குறுதியைக் கொடுத்து தி.மு.க. ஆட்சிக்கு வந்துவிட்டது. இவர்களால் தரமுடியாது என்று திட்டமிட்டுச் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்ததும் கொடுத்திருப்போம். ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு என்ன நிலை? நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. கொரோனா என்ற கொடிய நோயில் இந்த நாடு சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. அப்போது இருந்த நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்த காரணத்தால்தான், உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வர முடியவில்லை. ஆனால் இன்றைக்கு அதை ஓரளவு நிதி நிலைமையைச் சரிசெய்து, அதுவும் முழுமையாக அல்ல, ஓரளவு நிலைமையைச் சரிசெய்து, இப்போது செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி முதல் வழங்கப் போகிறோம். இதனைச் சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பொய்களையும், வதந்திகளையும் கிளப்பி இந்தத் திட்டத்தை எப்படியாவது கொச்சைப்படுத்த வேண்டும். முடக்க வேண்டும், மக்களிடத்தில் ஒரு தவறானப் பிரச்சாரம் செய்து திட்டமிட்டுச் சிலர் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள். இதை அறிவித்துவிட்டால், நிறைவேற்றிக் காட்டுவதுதான் இந்த ஸ்டாலினுடைய பணி என்பதை அழுத்தந்திருத்தமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன். அது தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்

ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் என்ன சொன்னேன். தேர்தல் வெற்றிச் செய்தி வந்து கொண்டிருக்கிறது. ஆட்சி அமைக்கக்கூடிய அளவிற்குப் பெரும்பான்மையான இடங்களில் தி.மு.க. வெற்றி பெற்றிருக்கிறது என்ற செய்தி வந்துகொண்டிருக்கிறது. அந்த வெற்றிச் செய்தியைத் தலைவருடைய நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செய்வதற்காக நாங்கள் சென்றபோது, பத்திரிகை நண்பர்கள் என்னைச் சந்தித்தபோது, என்ன சொன்னேன் என்று சொன்னால், வெற்றியைத் தந்த மக்களுக்கு நன்றி, ஆனால் வாக்களித்த மக்களுக்காக மட்டுமல்ல, வாக்களிக்கத் தவறியவர்களுக்கும் சேர்த்து நாங்கள் ஆட்சி செய்யப்போகிறோம். வாக்களித்தவர்கள் நாம் நியாயமாக வாக்களித்திருக்கிறோம். நம்பிக்கையோடு நாம் ஓட்டுப் போட்டது இன்றைக்கு அந்த நம்பிக்கை வெற்றி பெற்றிருக்கிறது என்று எண்ணக்கூடிய அளவிற்கு அவர்களுக்குப் பணி ஆற்றுவோம். எங்களுக்கு வாக்களிக்கத் தவறியவர்கள் இவர்களுக்கு ஓட்டுப் போடாமல் போய் விட்டோமே என்று வருந்தக்கூடிய அளவிற்கு அவர்களும் அதை உணரவேண்டும் என்பதற்காக நாங்கள் ஆட்சியை நடத்துவோம் என்று அப்போதே நான் உறுதியாகச் சொன்னேன்.

பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்தான் இந்த முன்னேற்றம்.

ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் மகளிருக்கு உரிமைத் தொகை கிடைக்கப் போகிறது. இது பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை அறவே ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கப் போகிறது. பெண்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கு இது பயனுள்ளதாக இருக்கப் போகிறது.

இந்த இரண்டும்தான் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கமாகும். தந்தை பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், தலைவர் கலைஞர் அவர்களிடம் நாங்கள் கற்ற பாடங்களின் அடிப்படையில்தான், இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்.

உங்களிடம் ஏற்கனவே அரசு ஊழியர்கள், தன்னார்வலர்கள் மூலமாக 4 நாட்களுக்கு முன்பு வழங்கப்பட்டிருக்கக்கூடிய விண்ணப்பங்களை இன்றைக்கு நீங்கள் பூர்த்தி செய்து கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று விளம்பரப்படுத்தி, இன்றைக்கு முதன்முதலாக நான் தருமபுரி மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். இந்த விண்ணப்பங்கள் தன்னார்வலர்கள் மற்றும் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூலமாகப் பதிவு செய்யப்படும்.

சிறப்பு முகாம்கள்

இந்த விண்ணப்பங்களைப் பெறுவதற்குச் சிறப்பு முகாம்கள் இன்று முதல் தமிழ்நாடு

முழுவதும் நடைபெறும். இது ஏற்கனவே பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அரசினுடைய செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இது கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் நிகழ்ச்சியாக இருக்கின்ற காரணத்தால் இதை நான் மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இந்த விண்ணப்பங்கள் தன்னார்வலர்கள், சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மூலமாகப் பதிவு செய்யப்படும்.

இந்த விண்ணப்பங்களை வாங்க சிறப்பு முகாம்கள் இன்று முதல் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும். விண்ணப்பப் பதிவு காலை 9-30 மணி முதல் மதியம் 1-00 மணி வரையும், பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 5-00 மணி வரையும் நடைபெறும். பொதுமக்கள் வசதிக்காகச் சனி, ஞாயிறு உள்ளிட்ட விடுமுறை தினங்களிலும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் முகாம்கள் நடைபெறும். அந்த இரண்டு நாட்களில் நீங்கள் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். குடும்ப அட்டைதாரர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படக்கூடிய டோக்கன்களில் நீங்கள் முகாமுக்கு வரவேண்டிய தேதி, நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த தேதியில் சரியாக வந்து, எவ்வித கூட்ட நெரிசலுமின்றி, நீங்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்து செல்ல ஏற்பாடுகளை மாவட்ட நிருவாகம் செய்துள்ளது. அந்தக் குறிப்பிட்ட நாளில் உங்களால் ஒருவேளை முகாமுக்குச் செல்லமுடியாத சூழ்நிலையிருந்தால் முகாமின் கடைசி இரண்டு நாட்களில் உங்கள் விண்ணப்பங்களை நீங்கள் கொடுத்துக் கொள்ளலாம்.

நீங்கள் அளித்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, ஏற்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த தகவல் குடும்பத் தலைவிக்குத் தெரிவிக்கப்படும். செல்போனில் செய்தி வந்துவிடும்.

அரசு விதிமுறைகளின்படி, வகுக்கப்பட்ட தகுதிகளையுடைய எந்தவொரு குடும்பமும் இந்த உரிமைத் தொகை பெறுவதிலிருந்து விடுபட்டுவிடக்கூடாது என்பதில் நம்முடைய அரசு மிக, மிக, மிகக் கவனமாக இருக்கிறது. ஆகவே, எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். பொய்ப் பிரச்சாரங்கள், பித்தலாட்ட பிரச்சாரங்கள் செய்து கொண்டிருப்பார்கள் அதைப்பற்றி எல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள். முகாமிற்கு வரும் தாய்மார்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், மின்வாரியக் கட்டண இரசீது ஆகியவற்றை அசலாகச் சரிபார்ப்பதற்காகக் கொண்டுவந்து, தகுதியுள்ள அனைவரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ்ப் பயன்பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தினை நல்ல முறையில் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 35 ஆயிரத்து 925 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில், விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்காக 68 ஆயிரத்து 190 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். முகாம்களுக்கு வரும் உங்களை வழி நடத்துவதற்காக, ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு உதவி மையத் தன்னார்வலர் என்று 35 ஆயிரத்து 925 தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்றுமுதல் ஆகஸ்ட் 28ஆம் தேதிவரை ஞாயிற்றுக்கிழமைகளில் கூட இந்த முகாம்கள் செயல்படும். இந்தத்திட்டம் இவ்வளவு சிறப்பாகச் செயல்படுவதற்காக அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கக்கூடிய, அதற்காகப் பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய அனைத்துத் துறைச் செயலாளர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், மாவட்ட நிர்வாகங்கள், தன்னார்வலர்கள், உதவி மைய தன்னார்வலர்கள், அனைத்து நிலை அலுவலர்கள் அத்தனை பேருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் இலக்கணம். அதனால்தான் அனைத்துத் துறை வளர்ச்சி - அனைத்து மாவட்ட வளர்ச்சி - அனைத்து சமூக வளர்ச்சி என்பதை நாங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

அனைத்துச் சமூக வளர்ச்சியின் அடையாளம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் ஆகும். இதன் மூலமாகத் தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான பெண்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படும். உங்களுடைய குடும்பங்களில் வளம் பெருகும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் ஒற்றைக் கையெழுத்தில் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள புரட்சிதான் இந்தப் புரட்சி. இத்தகைய சாதனைச் சரித்திரம் தொடரும், தொடரும், தொடரும் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

படமும்/செய்தியும்

மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டி 11.07.2023 அன்று, சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 15.07.2023 அன்று, சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்கள் நினைவு நாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 03.08.2023 அன்று, சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க.தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சிலை திறப்பு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 10.08.2023 அன்று, சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பேராசிரியர் க. அன்பழகன் கல்வி வளாகத்தில், பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் புதியதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

சென்னையில் மாநில அளவில் “முதலமைச்சர் கோப்பை - 2023” போட்டிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 25.07.2023 அன்று, சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை – 2023” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாவட்ட அணிகளுக்குப் பரிசுக் கோப்பைகளையும், 27ஆவது தேசிய மகளிர் கால்பந்து போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற தமிழ்நாடு அணியைச் சார்ந்த 22 வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் நமது பாரம்பரிய விளையாட்டான கபடி, சிலம்பம் உட்பட 15 விளையாட்டுக்களையும், பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கும்

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நிறைவு விழாவில் ஆற்றிய உரை – 25.07.2023*

இப்போட்டிகளை நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதனடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி மார்ச் மாதம் முடிய நடைபெற்றது. இந்த மாவட்ட அளவிலான போட்டிகளில் 3,76,000க்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் ஜூலை 1ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 25ஆம் தேதி வரை 17 இடங்களில் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிகளில் பங்கேற்ற 27,000க்கும் மேற்பட்ட வீரர்கள் – வீராங்கனைகள், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள், தேசிய மாணவர் படைத் தன்னார்வலர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக தனியார் விடுதிகள், அரசு விருந்தினர் மாளிகை ஆகியவைகளில் 2,000க்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மேலும், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவு, சிற்றுண்டி, வீரர்கள் – வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள், தங்கும் விடுதிகளுக்குச் செல்ல பேருந்து வசதிகள், அனைத்து இடங்களிலும் மருத்துவ வசதி ஏற்பாடுகள், போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை மூலம் உரிய பாதுகாப்பு ஆகியவை சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட்டன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மாநகரப் போக்குவரத்துக் கழகம், பெருநகரச் சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத்துறை, காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

“முதலமைச்சர் கோப்பை – 2023” மாநில அளவிலான இறுதிப் போட்டிகளில் தமிழ்நாட்டிலுள்ள 38 மாவட்டங்களைச் சேர்ந்த 27,000க்கும் மேற்பட்ட வீரர் – வீராங்கனைகள் பங்கேற்று விளையாடினர். இதில், சென்னை மாவட்டம், 61 தங்கம், 33 வெள்ளி, 19 வெண்கலப் பதக்கங்கள் வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தையும், செங்கல்பட்டு மாவட்டம், 18 தங்கம், 19 வெள்ளி, 18 வெண்கலப் பதக்கங்கள் வென்று இரண்டாம் இடத்தையும், கோயம்புத்தூர் மாவட்டம் 15 தங்கம், 13 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்கள் வென்று மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் "முதலமைச்சர் கோப்பை – 2023"ல் முதல் மூன்று இடங்களைப் பெற்ற சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட அணிகளுக்குப் பரிசுக் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார்.

இப்பரிசுக் கோப்பைகளை முதலிடத்தைப் பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு. அருணா, இ.ஆ.ப., அவர்களும், இரண்டாமிடத்தைப் பெற்ற செங்கல்பட்டு மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ.ர. ராகுல்நாத், இ.ஆ.ப., அவர்களும், மூன்றாமிடத்தைப் பெற்ற கோயம்புத்தூர் மாவட்ட அணியின் சார்பாகக் கோயம்புத்தூர் – தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. கே.செல்வம், விளையாட்டு வீரர்கள் – வீராங்கனைகள், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்சியாளர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸில் ஜூன் 12 முதல் 28 வரை நடைபெற்ற 27ஆவது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப்- 2023 போட்டியில், முதலிடம் பெற்றுத் தங்கக் கோப்பையை வென்று சாதனை படைத்த தமிழ்நாடு அணியைச் சார்ந்த டி. தேவி, என். சௌமியா, பி. தனலட்சுமி, எஸ். கௌசல்யா, என். லாவண்யா, எம். பவித்ரா, பி. துர்கா, எஸ். சண்முகப்பிரியா, எம். சுபாஷினி, எம். பரமேஸ்வரி, எஸ். பிரியதர்ஷினி, எம். மாளவிகா, எம். நந்தினி, ஏ. கார்த்திகா, கே. இந்துமதி, ஆர். வினோதினி, எஸ். ஐஸ்வர்யா, ஆர். சந்தியா, பி. சந்தியா, எஸ். சண்முகப்பிரியா, ஆர். யுவராணி, என். அம்சவள்ளி ஆகிய 22 வீராங்கனைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் 55 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) சார்பில் 5 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 60 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை உயரிய ஊக்கத்தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 26.06.2021 முதல் 12.07.2023 வரை சர்வதேச, தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1,684 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.49.15 கோடி உயரிய ஊக்கத் தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிப் பாராட்டக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கக்கூடிய இந்தத் துறையின் அமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டுப் பிள்ளையாக இருக்கிறாரே என்று வளர்ந்த பிள்ளையைப் பார்த்துச் சில பெற்றோர் நினைப்பதுண்டு. விளையாட்டுத் துறைக்கு அமைச்சராக நம் பிள்ளை சிறப்பாகச் செயல்படுகிறார் என்று பெற்றவனை மகிழ வைக்கக்கூடியவராக உதயநிதி இருக்கிறார்.

விளையாட்டைப் பார்ப்பவர்களுக்குக் களிப்பாக இருக்கும். விளையாட்டுப் போட்டிகளை நடத்துபவர்களும், அந்தப் போட்டிகளில் விளையாடுபவர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

இந்த நிகழ்வை மிகப் பொறுப்பாக நடத்தியிருக்கும் விளையாட்டுத்துறைச் செயலருக்கும், உறுப்பினர் செயலர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரு உள்விளையாட்டு அரங்கைப் பார்க்கும்போது, என் நினைவுகள் 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்குச் செல்கிறது.

இதே நேரு உள்விளையாட்டு அரங்கில்தான் கடந்த ஆண்டு அதன் தொடக்க நிகழ்ச்சியும், நிறைவு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நீங்கள் அனைவரும் அந்த நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மற்ற விளையாட்டுப் போட்டிகளின்போது நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள்போல் இல்லாமல், நமது தமிழ்நாட்டின், இந்திய நாட்டின் வரலாற்றை நமது மண்ணுக்கு விருந்தினர்களாக வந்த வெளிநாட்டு வீரர்களுக்குக் கலை நிகழ்ச்சிகள் மூலமாக நாம் அறிமுகப்படுத்தினோம்.

அதனால் நமக்குக் கிடைத்த பாராட்டு என்பது, நமது அரசுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டுக்கே சொந்தமானது! அத்தகைய பெருமையைத் தேடித் தந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியின்போதுதான் 'முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்' என்று நான் அறிவித்தேன். 15 விதமான விளையாட்டுக்களில் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள், மாற்றுத்திறனாளிகள் என ஐந்து பிரிவுகளின்கீழ் நடத்தப்படும் என்று நான் அறிவிப்பு செய்தேன்.

அந்த அறிவிப்பை மிக வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டிய மாண்புமிகு அமைச்சர் உதயநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த மே 8ஆம் நாள் முதலமைச்சர் கோப்பைகள் போட்டிக்கான 'வீரன்' சின்னத்தையும் அதற்கான பாடலையும் நான் வெளியிட்டேன். ஜூன் 30ஆம் நாள் தொடங்கப்பட்ட இந்தப் போட்டிகள் நிறைவு விழா காண்கிறது.

உதயநிதி அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையே புத்துணர்வு பெற்றுள்ளது.

நான் 2006ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் இடம் பெற்றபோது, பதவியேற்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டது, இதே நேரு விளையாட்டு அரங்கத்தில் தான்!

எனவே, இங்குள்ள விளையாட்டு வீரர்களைப் போல எனக்கும் நேரு விளையாட்டு அரங்கம் சிறப்பான வாய்ப்பைக் கொடுத்தது. அப்போது

நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தேன். “அந்தத் துறையை நான் நிருவகிப்பதைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது” என்று அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்;

அதாவது, ஏராளமான திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதைப் பாராட்டும் வகையில் இப்படி உயர்வாகச் சொன்னார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அந்த வகையில் இப்போது எனக்கு விளையாட்டுத் துறையின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது!

மாவட்ட, மண்டல அளவிலான போட்டிகள்

நாள்தோறும் ஏராளமான போட்டிகள் நடைபெற்று வருகின்றன. எப்போது பார்த்தாலும் விளையாட்டு வீரர்களுடன் அமைச்சர் உதயநிதி அவர்கள் இருக்கிறார். விளையாட்டுத் துறையால் அமைச்சர் பெருமை அடைவதும் – அமைச்சர் உதயநிதியால் விளையாட்டுத் துறை சிறப்பு அடைவதுமான காட்சிகளை நான் காண்கிறேன்.

இவை எல்லாம் விளம்பரத்துக்காகச் செய்யப்படுபவை அல்ல. விளையாட்டுத் துறையின் செயல்கள் மூலமாக இத்தகைய பாராட்டுக்கள் கிடைக்கின்றன.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் தொன்மையான பாரம்பரிய விளையாட்டுக்களான கபடி, சிலம்பாட்டம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

விளையாடும் வீரர்களுக்கு உடல் திறன் மேம்படுகிறது. அதனைப் பார்த்து ரசிப்பவர்களின் மனதுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. விளையாட்டைக் காண வந்தவர்களில் நாளைய சாம்பியன்களும் நிச்சயம் இருப்பார்கள். இதுதான் விளையாட்டின் சிறப்பம்சம்.

முந்தைய காலங்களில் பள்ளி, கல்லூரிகள் என இரண்டு பிரிவுகளில் மட்டுமே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்தன. இப்போது மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் என்ற பிரிவுகள் இணைக்கப்பட்டு உள்ளன.

முன்பு 10 விதமான போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போது 15 விதமான போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டிகளைச் சிறப்பாக நடத்த மாவட்டக் குழு – மாநிலக் குழு அமைக்கப்பட்டது. கிரிக்கெட், சதுரங்கம், பீச் வாலிபால் போன்ற போட்டிகள் இதில் இணைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கு ரூ.50.86 கோடி நிதியைத் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்தது. இதில் பரிசுத் தொகையாக மட்டும் ரூ.28.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் மிகச் சீராக நடைபெற்றதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட அளவிலான நடைபெற்ற போட்டிகளில், 3 இலட்சத்து 70 ஆயிரம் வீரர்களும் வீராங்கனைகளும் கலந்து கொண்டுள்ளார்கள். அதன்பிறகு மண்டல அளவில் போட்டிகள் நடந்துள்ளன.

மண்டல அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 54 வீரர் – வீராங்கனைகள் பங்கெடுத்துள்ளார்கள். இவர்களை வைத்து மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

போட்டி நடத்துபவர்கள் அடையவேண்டிய பெருமை

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் மட்டும் 17 இடங்களில் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள் மட்டும் மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டுள்ளன. அதில் 3 இலட்சத்து 70 ஆயிரம் பேர் பங்கெடுத்ததைத்தான் முதலமைச்சர் கோப்பைக்கான வெற்றியாக நான் கருதுகிறேன்.

போட்டிகளில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது ஒருபக்கம் என்றால் – இந்தப் போட்டியை

வெற்றிகரமாக நடத்தி முடித்ததன் மூலமாக இந்த விளையாட்டுத்துறையும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இங்கே பதிவு செய்கிறேன்.

போட்டிகளில் எவ்வளவு பேர் பங்கெடுக்கிறார்கள் – எவ்வளவு வீரர்களும் – வீராங்கனைகளும் உங்களை நோக்கி வருகிறார்கள் என்பதுதான் போட்டி நடத்துபவர்கள் அடையவேண்டிய பெருமை! அதனால்தான் பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளைப் பற்றி நீங்கள் அனைவரும் அறிவீர்கள். ஒற்றையர் போட்டியாக இருந்தால் அதிகபட்சம் ஒரு இலட்சம் ரூபாயும் – குழுப் போட்டியாக இருந்தால் அதிகபட்சம் 9 இலட்சம் ரூபாயும் பரிசுத் தொகை பெறும் மாபெரும் போட்டியாக இது அமைந்துள்ளது.

மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 27 ஆயிரம் பேரையும் சென்னைக்கு அழைத்து வர சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சென்னையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளிர்சாதன வசதி கொண்ட அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. வீரர் – வீராங்கனைகள் போட்டி நடைபெறும் இடங்கள், தங்கும் விடுதிகளுக்குச் சென்றுவர 72க்கும் மேற்பட்ட பேருந்து வசதிகளும், மருத்துவ வசதிகளும் செய்யபட்டன.

டீம் ஸ்பிரிட்

போட்டிகளைச் சிறப்பாக நடத்திட ஏதுவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மாநகரப் போக்குவரத்துக்கழகம், பெருநகரச் சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, காவல்துறை ஆகிய துறைகளுடன் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதான் மிக, மிக முக்கியம்!

'டீம் ஸ்பிரிட்' என்று விளையாட்டுக் களத்தில் சொல்வார்கள். விளையாட்டுப் போட்டிகளை நடத்தும்போதும் பல்வேறு துறையினருடன் இணைந்து செயல்படக்கூடிய இத்தகைய 'டீம் ஸ்பிரிட்' தேவை. அந்த வகையில், போட்டிகளை நடத்துவதற்கான சிறப்பான சூழலை உருவாக்குவதில் நமது அரசு நற்பெயரைப் பெற்றிருக்கிறது.

நான் ஆரம்பத்தில் சொன்னேனே... மிகக் குறுகிய காலத்தில், அதாவது நான்கே

மாதத்துக்குள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியை நாம் நடத்திக் காட்டினோம்.

நமது விருந்தோம்பலைச் சிலாகித்து வெளிநாட்டு வீரர்கள் பலரும் தங்கள் ட்விட்டர் பக்கங்களில் பகிர்ந்தார்கள். உலக விளையாட்டு வீரர்களை மட்டுமல்ல, உள்ளூர் வீரர்களையும் நாம் மரியாதையுடன்தான் நடத்துவோம் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் இந்த விழா!

இதனை நான் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், போட்டிகளில் பரிசுகள் வழங்குவதோடு அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடவில்லை. விளையாட்டு வீரர்களை மதித்து, அன்புடன் வரவேற்று அவர்களுக்கு வெற்றிகரமான சூழலையும் உருவாக்கித் தர வேண்டியதும் அரசின் கடமை! அதனைத் தமிழ்நாடு விளையாட்டுத்துறை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறது.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து வீரர் – வீராங்கனைகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். பலருக்குப் பதக்கங்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். அது முக்கியமல்ல; பங்கேற்புதான் முக்கியம்! விளையாட்டில் வெற்றி என்பதே பங்கேற்பதும்; சளைக்காமல் போராடுவதும்தான்!

தனிப்பட்ட முறையில் எனக்கு விளையாட்டின்மீது இருக்கும் ஆர்வத்தைப் பலரும் அறிவீர்கள். அதனால்தான், கடுமையான பணிச்சூழலுக்கு இடையிலும் இந்த நிகழ்ச்சிக்கு நான் இங்கே வந்திருக்கிறேன்.

நான் மட்டுமல்ல; தலைவர் கலைஞர் அவர்களும் மிகப்பெரிய விளையாட்டு ரசிகர்! அதனால்தான் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தினார்.

ஸ்போர்ட்ஸ்மேன் ஷிப்

2006ஆம் ஆண்டு நடைபெற்ற Asian Games-இல் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை சாந்தி அவர்களை, "ஓடியது இந்த கால்கள் தானே!" என ஆதரித்து ஊக்கப்படுத்தினார்.

தலைவர் கலைஞர் அவர்கள் நல்ல விளையாட்டுப் போட்டிகளை ரசிக்கக் கூடியவர். விளையாட்டில் நேர்மையும் அறமும் வேண்டும் என்று விரும்பியவர்.

தலைவர் கலைஞரிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றன. வெற்றியையும் தோல்வியையும் இயல்பாக எடுத்துக் கொண்டு சளைக்காமல் போராடியவர் அவர். இதைத்தான் விளையாட்டுக் களத்தில் 'ஸ்போர்ட்ஸ்மேன் ஷிப்' என்கிறார்கள். அரசியலில் அவர் 'ஸ்டேட்ஸ்மேனாக' இருந்தார். அரசியலை அணுகுவதில் அவரிடம் 'ஸ்போர்ட்ஸ்மேன் ஷிப்' இருந்தது.

விளையாட்டில் நீங்கள் அனைவரும் அறத்தைப் பேண வேண்டும் என்று சொல்லி, மாநில அளவிலான போட்டிகளில் பங்கெடுத்துப் பதக்கங்கள் பெற்ற அனைவரையும் பாராட்டுகிறேன்.

நீங்கள் மேன்மேலும் வெற்றிகளைக் குவிக்க வேண்டும். மாநில அளவில் பல போட்டிகளில் பங்கேற்றுள்ள நீங்கள் இனி வருங்காலத்தில் இந்திய அளவிலான போட்டிகளில் பங்கேற்க வேண்டும். விளையாட்டு வீரர்களான நீங்கள் மட்டுமல்ல; இந்தியாவுக்காகத்தான் நாங்களும் பாடுபடுகிறோம்.

எங்கள் அணியும் 'இந்தியா' அணிதான்! அதன் வெற்றிக்காகத்தான் நாங்களும் ஒருங்கிணைந்து – 'டீம் ஸ்பிரிட்டுடன்' பாடுபடுகிறோம்.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போலவே – விளையாட்டு மீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும், வெற்றிக்காகப் பாடுபட வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி அவர்களையும் விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிச் செய்தால் தமிழ்நாட்டின் இளைய சக்தியானது ஈடு இணையற்ற சக்தியாக வளரும் என்று சொல்லி அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

முதல்வரின் முகவரித் துறையில்

2.94 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முதல்வரின் முகவரித்துறைச் செயல்பாடுகள் குறித்த
ஆய்வுக்கூட்டத்தில் ஆற்றிய உரை - 13.07.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 13.07.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், முதல்வரின் முகவரித் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, முதல்வரின் முகவரித் துறையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களின்போது பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

01.01.2023 முதல் 30.06.2023 வரை முதல்வரின் முகவரித் துறை மூலமாகப் பெறப்பட்ட 3.42 இலட்சம் மனுக்களில் 2.94 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. அதாவது 86 சதவிகித மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

மனுக்களின் தீர்வு முறைகளில், எண்ணிக்கையை குறைப்பதோடு மட்டுமல்லாமல், தீர்வின் தன்மையைப் பொறுத்துத் தீர்வு செய்யப்பட்ட மனுக்கள் A, B & C எனத் தர வரிசைப்படுத்தப்படுகிறது. அவ்வாறு தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் தர வரிசை மதிப்பீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஆகிய துறைகளில் அதிக மனுக்கள் பெறப்பட்டுள்ளதால் சம்மந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி விரைவில் மனுக்கள் மீது தீர்வு காணுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும், முதலமைச்சரின் உதவி மையத்தின் இலவச அழைப்பு எண் 1100 மூலமாகத் தொடர்பு கொள்ளும் நபர்களின் அழைப்புகளை ஏற்பது, அழைப்பின் தன்மையைப் பொறுத்து கோரிக்கைகளாகப் பதிவு செய்வது, ஏற்கெனவே பதிவு செய்த மனுவின் நிலவரம் குறித்து தெரியப்படுத்துவது, மனுதாரர்களைத் தொலைபேசி

வாயிலாகத் தொடர்பு கொண்டு மனுக்களின் தரம் கண்காணித்தல், பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் குறித்த சேவைகளின் மதிப்பீடுகள் பெறுவது போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் AI Chatbot போன்ற புதிய தொழில்நுட்பங்கள் வாயிலாக விரைவாகப் பொதுமக்களின் கோரிக்கைகளைத் தீர்வு காண புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட ஆய்வின்போது, மனுதாரர்களின் கோரிக்கைகள் தீர்வு காணப்பட்டுள்ளதை உறுதிசெய்யும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரு சில மனுதாரர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

அவர்களில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மனுதாரரின் குழந்தைக்குக் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக ரூ.22 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 19.06.2023 அன்று, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது குறித்தும்;

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டத்தைச் சேர்ந்த மாணவி பட்டப்படிப்புப் பயில்வதற்குக் கல்வி உதவித்தொகை ரூ.50,000 வழங்கப்பட்டது குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, மனுக்களைத் திறம்படவும், விரைவாகவும் தீர்வு செய்த தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டாட்சியர் திரு. எச். சவுகத் அலி, தென்காசி மாவட்டம், ஆலங்குளம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் திரு.ஜெ.ஜெயபால் ஆகியோரைப் பாராட்டியும், சுணக்கமாகச் செயல்படும் அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

செப்டம்பர் 16 – இராமசாமி படையாட்சியார் அவர்கள் பிறந்த நாள்

“போர்க்குரல்”

இராமசாமி படையாட்சியார் அவர்களை நான் பல்லாண்டு காலமாகப் பழகி அறிந்தவன். அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலே மாத்திரமல்ல, அமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு முன்பு பழைய தென் ஆற்காடு மாவட்டத்தில் உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவராக அவர் இருந்த காலத்திலிருந்து நான் அவரை மிகவும் நன்றாக அறிவேன்.

என்னுடைய அருமை நண்பரும் மறைந்த வேளாண்மைத்துறை அமைச்சருமான கோவிந்தசாமி அவர்கள் இராமசாமி படையாட்சியார் அவர்களிடம் எவ்வளவு நெருக்கமான நண்பர் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். உழவர் உழைப்பாளர் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவராகக் கோவிந்தசாமி அவர்கள் இருந்தபோது அவருக்காகத் தேர்தல் பணியாற்றவும், தேர்தல் பிரச்சாரம் செய்யவும் அதையொட்டி அதே நேரத்தில் படையாட்சியார் அவர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்யவும் நான் அப்போது சென்றிருந்தேன். படையாட்சியார் அவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே எவ்வளவு நெருங்கியப் பழக்கம் என்பதையும் நான் நன்றாக அறிவேன். அதைப்போலவே, அண்ணாவிற்கும் இராமசாமி படையாட்சியாருக்கும் இடையே தூதராக இருந்து அரசியல் விஷயங்கள் பலவற்றைப் பரிமாறிக்கொள்கின்ற ஒரு நண்பராக இருந்தவர் என்னுடைய அருமை நண்பர் மறைந்த மதியழகன் அவர்கள் ஆவார்கள். இப்படி நெருங்கிப் பழகுகின்ற ஒரு சூழ்நிலையிலே வளர்ந்தவர், வாழ்ந்தவர், மறைந்தும் மறையாத எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களாவார்கள்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இந்தச் சமுதாயத்தை மாற்றிட வேண்டும், நடத்திட வேண்டுமென்று ஒரு குரல் தமிழகத்திலே எழுந்தது. அது போர்க்குரலாக எழுந்தது என்றாலுங்கூட, முதன்முதலாக அதை உரிமைக்குரலாக எழுப்பியவர் வேறு யாருமல்ல, அவர்தான் இன்றைக்குச் சிலையாக இங்கே நின்று கொண்டிருக்கின்ற இராமசாமி படையாட்சியார் அவர்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு 1989ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றிருந்த போதுதான் அந்தக் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட்டது.

– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 21.02.2001 அன்று, சென்னையில் இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவச்சிலையினைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து...

திருச்சிராப்பள்ளியில்

“வேளாண் சங்கமம் - 2023”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.07.2023 அன்று, திருச்சிராப்பள்ளியில் வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற “வேளாண் சங்கமம் 2023” விழாவில், வேளாண் கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்து, பாரம்பரிய நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கி வாழ்த்தினார்.

2023–2024ஆம் ஆண்டிற்கான வேளாண்மை-உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையில், நவீனத் தொழில்நுட்பங்கள், புதிய இரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வினை விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாநில அளவில் வேளாண் கண்காட்சி திருச்சியில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, உயர் விளைச்சல் தரவல்ல புதிய இரகங்கள், பாரம்பரிய நெல் இரகங்கள், வருமானத்தைப் பெருக்க வேளாண் நவீனத் தொழில்நுட்பங்கள், உத்திகள், நவீன வேளாண் இயந்திரங்கள், சூரியசக்தி மூலம் இயங்கும் கருவிகள், செயல் விளக்கங்கள், விளை பொருட்களை மதிப்புக் கூட்டும் முறைகள், தொழில்நுட்பங்கள், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன், பட்டுப்பூச்சி வளர்ப்புக் குறித்தான கருத்தரங்குகள், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டபலன் முன்பதிவுகள் போன்ற வேளாண்மை தொடர்புடைய நிகழ்வுகளை உள்ளடக்கிய, “வேளாண் சங்கமம் – 2023” கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் – 27.07.2023

இக்கண்காட்சி ஜூலை 27 முதல் ஜூலை 29 வரை திருச்சிராப்பள்ளி, கேர் பொறியியல் கல்லூரியில் நடைபெறும்.

வேளாண்மை – உழவர் நலத்துறையினால் நடத்தப்படும் இக்கண்காட்சியில், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல், சர்க்கரைத் துறை, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), கைத்தறித்துறை, தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சித்துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியனவும், ஒன்றிய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும், ஒன்றிய அரசின் பயிர் வாரியங்களும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், மீன்வளப் பல்கலைக்கழகங்களும் பங்கேற்றுள்ளன.

மேலும், இக்கண்காட்சியில் நுண்ணீர் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், வேளாண் இயந்திர நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், சர்க்கரை ஆலைகள் போன்ற பல்வேறு தனியார் நிறுவனங்களும், அரசுத் துறைகளும் இணைந்து வேளாண் செயல்பாடுகள் சார்ந்த இடுபொருட்கள் செயலாக்கத்துடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, உழவர்களுக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்களான கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மின்னணு வேளாண்மை, இயற்கை வேளாண்மை, சீர்மிகு சிறுதானியம், தென்னை, பயிர் பாதுகாப்பு முறைகள், பாரம்பரிய இரகங்கள், பசுமைக்குடில், செங்குத்துத் தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றை முன்னிலைப்படுத்தும் சிறப்புக் கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளன.

வேளாண் சார்ந்த புதிய நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளவும், வேளாண்மை – உழவர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களை எடுத்துரைக்கும் விதமாகவும் பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன.

இக்கண்காட்சியின் முத்தாய்ப்பாக, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதைகள், நாற்றுக்கள், உயிர்உரங்கள் போன்ற வேளாண் இடுபொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை வாங்கவும், உழவன் செயலி பதிவிறக்கம், திட்டப்பதிவு மையம், தமிழ் மண்வள இணையதளம் மூலம் மண்வள அட்டை வழங்குதல் போன்ற இணையவழிச் சேவைகளைப் பற்றி அறிந்துகொள்ளவும், ஒருங்கிணைந்த பண்ணையம், நுண்ணீர்ப் பாசனம், நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றை செயல்விளக்கங்கள் மூலம் விவரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இக்கண்காட்சி நடத்தப்படவுள்ள மூன்று நாட்களில் சுமார் 50,000 விவசாயிகள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காட்சி அரங்குகளைத் திறந்து வைத்த பின்னர், பாரம்பரிய நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற்ற 3 விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கிடும் விதமாக, முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம், திரு. ரங்கசாமி சார்பாக அவர் மனைவி

திருமதி வீரம்மாள் அவர்களுக்கு ரூ.1 இலட்சத்திற்கான காசோலையையும், இரண்டாம் பரிசு பெற்ற செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மு.சரவணன் அவர்களுக்கு 75 ஆயிரத்திற்கான காசோலையையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மூர்த்தி அவர்களுக்கு 50 ஆயிரத்திற்கான காசோலையையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மிக, மிக பசுமையான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் இப்போது மனமும் பசுமையாகி விடுகிறது. சில நாட்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சியைப் பார்வையிட்டுச் செல்லுகிற நேரத்தில், இன்றைக்கு நான் பெற்ற உணர்வை அன்றைக்கு நான் பெற்றேன்.

பழங்கள் - காய்கனிகள் – ஆகியவற்றை மொத்தமாக ஒரே இடத்தில் பார்ப்பது என்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. அந்த உணர்வை எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய, அந்த பெரும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நம்முடைய திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களைப் பொறுத்தவரைக்கும், அவரை 'வேங்கையின் மைந்தன்' என்று நாங்கள் அரசியல் மேடைகளில் சொல்வதுண்டு. ஆனால் வேளாண் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகு அவர் ஆற்றி வரக்கூடிய பணிகளைப் பார்க்கும்போது, அவர் உழவர் மகனாகவே இப்போது மாறியிருக்கிறார்.

வேளாண் துறையையே தலைசிறந்த துறைகளில் ஒன்றாக அவர் மாற்றியிருக்கிறார். கழக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு அனைத்துத் துறைகளும் ஒருசேர வளர வேண்டும் என்று நாங்கள் உழைத்து வருவதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். அதில் மிகச் சிறப்பான வளர்ச்சியை வேளாண் துறையும் பெற்றுள்ளது. மற்ற துறைகளைப்போல வேளாண் துறையை நினைத்த உடனே வளர்த்துவிட முடியாது. மற்ற துறைகளை வளர்க்க நிதி வளம் இருந்தால் போதும். ஆனால், வேளாண் துறையை வளர்க்க, நிதித்துறை மட்டுமல்ல, நீர்வளமும் வேண்டும். தேவையான இடுபொருட்கள் காலத்தில் கிடைக்க வேண்டும்.

கழக ஆட்சி அமைந்ததும் நீர் வளமும் கைகொடுத்தது. பருவ மழையும் முறையாகப் பெய்து உழவர்களுக்கு உதவியாக இருந்தது. வேளாண் பெருங்குடி மக்களுக்குத் தேவையான இடுபொருட்களை வேளாண் துறை குறித்த காலத்தில் தேவையான அளவு வழங்கியது. அதனால் உற்பத்தி பெருகியது. உற்பத்தி பரப்பும் அதிகமானது! மண்ணும் ஈரமானது. உழவர்களது உள்ளமும் ஈரமானது. மண்ணும் மக்களும் மகிழ்ந்தார்கள். அதனால்தான் இதுபோன்ற வேளாண் சங்கமத்தை நம்மால் இன்றைக்குப் பெருமையோடு நடத்த முடிகிறது.

கழக அரசு அமைந்ததும் வேளாண்மைத் துறைக்குக் கூடுதல் முக்கியத்துவம் தரும்

குறுவைச் சாகுபடியை மேற்கொள்வதற்காக கடந்த 2022ஆம் ஆண்டில் மேட்டூர் அணையை உரிய தேதிக்கு முன்னரே திறந்த காரணத்தினால், டெல்டா மாவட்டங்களில் 5 இலட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் குறுவைச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 47 ஆண்டுகளில் நிகழாத சாதனையை நாம் எட்டியிருக்கிறோம்.

உழவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் நமது அரசு, நிலத்தடி நீரினைப் பயன்படுத்தி, உழவர்கள் அதிக பாசனப் பரப்பில் வேளாண் செய்ய ஏதுவாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை படைத்துள்ளது.

வகையில், நம்முடைய திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியதுபோல, வேளாண்மைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பல்வேறு புதிய திட்டங்களை நாம் தொடங்கி இருக்கிறோம்.

- கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்
- முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்
- வேளாண் நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்
- நீர்ப்பாசன நவீன மயமாக்கல் திட்டம்
    - வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை
    - மண்வள மேலாண்மை
    - இளைஞர்களைத் தொழில் முனைவோர் ஆக்குதல்

ஆகிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வரிசையில்தான் இதுபோன்ற கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

நமது அரசு பொறுப்பேற்று, செயல்படுத்திய திட்டங்களினால், ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 2021-2022ஆம் ஆண்டு 119 இலட்சத்து 97 ஆயிரம் மெட்ரிக் டன் அளவில் உணவுத் தானிய உற்பத்தி செய்யப்பட்டு ஒரு சாதனையை நாம் படைத்திருக்கிறோம்.

அந்தச் சாதனைப் பயணத்தின் தொடர்ச்சியாகத்தான், மேலும் 50 ஆயிரம் புதிய மின் இணைப்புகள் இந்த விழாவில் வழங்கப்படுகின்றன. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டமானது இதுவரை 5 ஆயிரத்து 201 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 2 ஆயிரத்து 504 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளன.

2023-2024ஆம் ஆண்டை உலகச் சிறுதானிய ஆண்டாக நாம் கொண்டாட இருக்கிறோம். சிறுதானிய இயக்கத்தை நாம் நடத்தி வருகிறோம் என்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர்களுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன் 20 விழுக்காடு கூடுதல் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. இதற்கென ரூ.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'தமிழ் மண் வளம்' என்ற இணையதளத்தை நான் தொடங்கி வைத்துள்ளேன். விவசாயிகளுக்கு மிகுந்த பயனளித்துவரும் 'உழவன் செயலி' பயன்பாட்டில் உள்ளது. இந்தியாவிலேயே, முதல் மாநிலமாக நமது அரசின் நலத்திட்டங்கள் சரியான பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதிசெய்திட உழவர்களின் அனைத்து விவரங்களை உள்ளடக்கிய ஒற்றைச் சாளர

வலைத்தளமான 'கிரெய்ன்ஸ்' (GRAINS) உருவாக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையைவிடக் கூடுதலாக சன்ன இரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு 100 ரூபாயும், இதர இரகங்களுக்கு 75 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில், நெல் கொள்முதலில் ஊக்கத்தொகையாக மட்டுமே ரூ.376.63 கோடி வழங்கப்பட்டுள்ளது. கரும்பு விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசு அறிவித்த ஆதார விலையான டன் ஒன்றுக்கு 2,821 ரூபாய்க்கு மேல் 195 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கி வருகிறது.

உழவர்களிடையே காய்கறிகள், பழங்கள் பயிரிடுவதை ஊக்குவித்து வருகிறோம். பாசன நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்த ஏதுவாக நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

வேளாண் இயந்திரமயமாக்குதலையும், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதலையும் ஊக்கப்படுத்துகிறது. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல், இ-வாடகை கைபேசிச் செயலி வாயிலாக இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் ஆகியவற்றையும் நமது அரசு செயல்படுத்தி வருகின்றது.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், உழவர் சந்தைகள் மற்றும் விளைபொருட்களை மதிப்புக்கூட்டத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் உழவர்களுக்கு வழங்கி வருகிறது.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைத் தொடர்ந்து நமது அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில், 157 மின்னணுத் தேசிய வேளாண் சந்தைகளில் ஆறு இலட்சத்து 50 ஆயிரம் உழவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

கரூர், நாகப்பட்டினம், சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மூன்று புதிய அரசு வேளாண்மைக் கல்லூரிகளும், ஒரு தோட்டக்கலைக் கல்லூரியும் 40 கோடி ரூபாய் மதிப்பில் துவங்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் புதிய மஞ்சள் ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அங்கக வேளாண்மைத் துறையானது, இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

கழக அரசு அமைந்தபிறகு முதலில் ஒரு இலட்சம் மின் இணைப்புகளை இலவசமாகக் கொடுத்தோம். பின்னர் கூடுதலாக 50 ஆயிரம் மின் இணைப்புகளைக் கொடுத்தோம். இப்போது மேலும் 50 ஆயிரம் மின் இணைப்புகளை வழங்குகிறோம்.

உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை 1990ஆம் ஆண்டு தொடங்கி வைத்தவர் அன்றைக்கு முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

இந்த முப்பதாண்டுக் காலத்திலும் – எல்லாக் காலத்திலும் உணவுப் பொருள் விளைவித்து – தமிழ்நாட்டு வேளாண் பெருங்குடி மக்கள் வளம்பெறத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் அன்றும், இன்றும், என்றும் காரணகர்த்தாவாக அமைந்திருக்கிறார்.

கடந்த பத்தாண்டு காலம் தமிழ்நாட்டை ஒரு கட்சி ஆண்டது. பத்து ஆண்டுகாலத்தில் மொத்தமே 2 இலட்சத்து 20 ஆயிரம் வேளாண் மின் இணைப்புகள் மட்டும்தான் அவர்களால் வழங்கப்பட்டன. ஆனால் நாம் இரண்டு ஆண்டுக்காலத்தில் 1 இலட்சத்து 50 ஆயிரம் இணைப்புகளை வழங்கி இருக்கிறோம்.

"சொன்னதைச் செய்வோம்!
செய்வதைச் சொல்வோம்!"
– இது தலைவர் கலைஞரின் முழக்கம்!

சொல்லாததையும் செய்வோம்
சொல்லாமலும் செய்வோம்
– இது எனது முழக்கம்.

அந்த வரிசையில்தான் சொல்லாமல் செய்து காட்டி இருக்கிறோம்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான வேளாண் வணிகத் திருவிழாவைச் சென்னையில் தொடங்கி வைத்தேன். இப்போது வேளாண் சங்கமத்தை இங்கே இந்தத் திருச்சியில் தொடங்கி வைத்திருக்கிறேன்.

இயந்திரங்கள் – தொழிற்சாலைகள் – துணி நூல்கள் ஆகியவற்றுக்காகக் கண்காட்சிகள் நடத்துவதைப் போல வேளாண்மைக்குக் கண்காட்சி நடத்துவதும் மிக, மிக அவசியமானது. வேளாண்மைத் துறையானது அதிகமான அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பதன் அடையாளமாகவும் இதுபோன்ற கண்காட்சிகள் மூலமாக நாம் சொல்லலாம்.

நவீனத் தொழில்நுட்பங்கள் – புதிய ரகங்கள் – வேளாண்மை இயந்திரங்கள் – மதிப்புக் கூட்டும் தொழில்நுட்பங்கள் – ஏராளமாக வந்து கொண்டே இருக்கின்றன. இதுபற்றிய அடிப்படைத் தகவல்களை உழவர்களுக்கும், பொதுமக்களுக்கும், வேளாண் கல்லூரி மாணவர்களுக்கும் அறிமுகம் செய்தாக வேண்டும். அதற்காகத்தான் இதுபோன்ற கண்காட்சிகள் அவசியமாகின்றன.

உழவர்களது உற்பத்தி அதிகமாக வேண்டுமானால் – அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமானால் வேளாண்மையில் நவீனத் தொழில்நுட்ப அறிவு பயன்படுத்தப்பட வேண்டும்!

- ➢ உயர்ந்த விளைச்சல் தரவல்ல புதிய ரகங்கள்
- ➢ பாரம்பரிய நெல் இரகங்கள்
- ➢ வருமானத்தை பெருக்க நவீனத் தொழில்நுட்பங்கள்
- ➢ உத்திகள்
- ➢ நவீன வேளாண் இயந்திரங்கள்
- ➢ சூரிய சக்தி மூலமாக இயங்கும் கருவிகள்
- ➢ செயல்விளக்கங்கள்
- ➢ தொழில்நுட்பங்கள் – போன்றவைகளை உழவர்களுக்கு ஊட்டுவதற்கு இது போன்ற சங்கமங்கள் மிக மிகத் தேவை!

தமிழ்நாடு வேளாண் துறை மட்டுமல்லாமல் – மற்ற துறைகளும் இதில் பங்கெடுத்துள்ளது. ஒன்றியத் துறைகளும் வருகை தந்துள்ளன. வாரியங்கள் – பல்கலைக்கழகங்கள் – தனியார் நிறுவனங்களும் வருகை தந்துள்ளன. இதுவே மிகப்பெரிய சங்கமமாக இது அமைந்துள்ளது. இத்தகைய கூட்டுறவு முயற்சிகள் அனைத்துத் துறைகளிலும் தேவைப்படுகின்றன.

வேளாண்மை என்பது வாழ்க்கையாக – பண்பாடாக இருந்தாலும் அது லாபம் தரும் தொழிலாக முழுமையாக இன்னும் மாறவில்லை. அப்படி அது உயர்த்தப்பட வேண்டும்.

உழவர்கள் உற்பத்தியாளர்களாக மட்டும் காலமெல்லாம் இருந்துவிடக் கூடாது. அவர்களே விற்பனையாளர்களாக மாறவேண்டும் என்ற உன்னதமான நோக்கத்துடன்தான் உழவர் சந்தைகளைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அமைத்துக் கொடுத்தார்கள்.

இதன் அடுத்தகட்டமாக, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை நமது ஆட்சிக் காலத்தில் உருவாக்கி இருக்கிறோம். இத்தகைய நிறுவனங்களுக்கு மூலதன உதவியும் – கடன் உத்தரவாதமும் தரப்பட்டுள்ளன. இவர்களது உற்பத்திப் பொருட்கள் மாநகராட்சி அங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளன. கூட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் உழவர்களுக்காகச் செய்யப்பட்ட மாபெரும் முன்னெடுப்பு இது!

வேளாண்மை என்பது நிலம் இருப்பவர்கள் மட்டும் பார்க்கும் தொழிலாக இல்லாமல் – விரும்பியவர் அனைவரும் பார்க்க முன்வரும் தொழிலாக இது மாற வேண்டும். இன்றைக்கு நிலத்தை விட அதிக மதிப்பு கொண்டது ஏதுமில்லை. அத்தகைய நிலத்தை வைத்திருக்கும் உழவர்களை மகிழ்ச்சிக்குரியவர்களாக மாற்ற வேண்டும்.

உழவர்களுக்குத் தொழில்நுட்பம் தெரிந்திருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு வேளாண்மை தெரிந்திருக்க வேண்டும். இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டால் வேளாண்மை என்பது வர்த்தகத் தொழிலாக மாறும். அதற்கு இதுபோன்ற கண்காட்சிகள் அடித்தளம் அமைக்கும்.

இதுபோன்ற கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்துங்கள். அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்லுங்கள். வேளாண் அறிவு என்பது உழவர்களுக்கு மட்டுமல்ல, மற்ற அனைவரும் பெற்றாக வேண்டும்.

நேற்று நான் திருச்சிக்கு வந்தபோது, செய்தித்தாளில் வந்த ஒரு செய்தியைப் பார்த்து இந்தத் துறையினுடைய அதிகாரிகளையும், அமைச்சரையும் அழைத்து அது பற்றி கேட்டேன். அதாவது, இந்த ஆண்டு சிறப்புத் தொகுப்புப் பெறுவதற்கான இறுதி நாளை ஆகஸ்ட் 15 வரை நீட்டித்துத் தரவேண்டும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் கோரிக்கை அரசிடம் வைத்திருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். நான் அவர்களோடு கலந்து பேசி அதை உடனடியாக அரசு ஏற்றுக்கொண்டு, ரூ.75 கோடி மதிப்பிலான குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தைப் பெறுவதற்கான இறுதி நாள் ஆகஸ்ட் 15 வரை நீட்டிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த விழாவின் மூலமாக நம்முடைய உழவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டு இதில் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்காக மீண்டும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.07.2023 அன்று, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற வேளாண் சங்கமம்–2023 விழாவில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

விவசாய மின் இணைப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2023-2024ஆம் ஆண்டு எரிசக்தித் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற வேளாண் சங்கமம் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 12 விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று எரிசக்தி துறையின் 2021-2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு, அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, எரிசக்தித் துறையின் 2022-2023ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், கூடுதலாக, 50,000 எண்ணிக்கையில் புதிய விவசாய இலவச மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.11.2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், விவசாயிகளுக்கு 50,000 கூடுதல் மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, கூடுதலாக 50,000 இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளின் நலனை எப்பொழுதுமே முதன்மையாகக் கருதக்கூடிய மக்களுக்கான இவ்வரசு, கூடுதலாக 50,000 புதிய இலவச

திருச்சி, பெரிய மிளகுபாறை நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 26.07.2023 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரிய மிளகுப் பாறையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு நேரில் சென்று நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள், மருந்து இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி அரசுப் பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று மகப்பேறு பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தாய்மார்களிடம் சிகிச்சை விவரங்கள் குறித்துக் கேட்டறிந்து, மருத்துவமனை சமையற்கூடத்தில் நோயாளிகளுக்குத் தயாரிக்கப்பட்டு வரும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, 07.05.2022 அன்று, சட்டப்பேரவை 110 விதியின்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தேவைகளை மென்மேலும் மேம்படுத்திடும் விதத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப் போல நகர்ப்புறங்களில் மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவச் சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில், பெருநகரச் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள்,

63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி முதல்கட்டமாக, பெருநகரச் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிப் பகுதிகளில் ரூ.125 கோடி செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.06.2023 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டது.

அவற்றில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரிய மிளகுப்பாறையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, நலவாழ்வு மையத்தின் பதிவேடுகளை ஆய்வு செய்து, அங்குள்ள மருத்துவர்கள், செவிலியர்களிடம் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்துக் கேட்டறிந்து, மருந்துகளின் இருப்புக் குறித்து ஆய்வு செய்தார். பின்னர், அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நலவாழ்வு மையத்தின் சிகிச்சை வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இந்நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் கர்ப்பகால மற்றும் பிரசவகாலச் சேவைகள், சிசு மற்றும் குழந்தைகள் நலச் சேவைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்பநலம், கருத்தடை மற்றும் பேறுகாலச் சேவைகள், தேசிய சுகாதாரத் திட்டங்களின் பொதுவான தொற்றுநோய்களுக்கான சிகிச்சைகள், வெளிநோயாளிகள் மற்றும் சிறுநோய்களுக்குச் சிகிச்சைகள், தொற்றா நோய்களுக்கான சிகிச்சை அளித்தல், மனநோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல், கண், காது, மூக்கு, தொண்டை பிரச்சினைக்குச் சிகிச்சை அளித்தல், பல் நோய்களுக்கான சிகிச்சை அளித்தல், முதியோருக்குச் சிகிச்சை அளித்தல், விபத்து, அவசர மருத்துவச் சிகிச்சை போன்ற சிகிச்சை வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற நலவாழ்வு மையத்தினை ஆய்வு செய்த பின்னர், திருச்சிராப்பள்ளியில் உள்ள 1,832 படுக்கை வசதிகள் கொண்ட அரசுப் பொது மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, அங்குள்ள மருத்துவர்கள், செவிலியர்களிடம் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார். பின்னர், மகப்பேறு பிரிவிற்குச் சென்று அங்குள்ள தாய்மார்களிடம் சிகிச்சை விவரங்களையும், மருத்துவமனையில் தினந்தோறும் அளிக்கப்பட்டு வரும் உணவு சரியான நேரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறதா என்று கேட்டறிந்தார். தொடர்ந்து, மருத்துவமனையில் நோயாளிகளுக்கு உணவு தயாரிக்கும் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தயாரிக்கப்பட்டு வரும் உணவினைச் சாப்பிட்டுப் பார்த்து, தரத்தினை ஆய்வு செய்தார். பின்னர், நோயாளிகளுக்குத் தயாரிக்கப்படும் உணவுகளின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். இம்மருத்துவமனை மொத்தம் 1,832 படுக்கை வசதிகள் கொண்டதாகும்.

ஓராண்டில் 13 இலட்சம் மாணவர்களுக்கு உயர்தரத்தில் திறன் பயிற்சி வழங்கப்பட்ட "நான் முதல்வன்" திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை - 07.08.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 07.08.2023 அன்று, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற "நான் முதல்வன்" திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழாவில், இத்திட்டத்தின்கீழ்ப் பயிற்சி பெற்ற பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களால் அமைக்கப்பட்டிருந்த திறன் சாதனைக் கண்காட்சியைத் திறந்து வைத்து, "நான் முதல்வன்" திட்டத்தை பாலிடெக்னிக்குகள், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு விரிவுப்படுத்தி, "நான் முதல்வன்" நிரலோட்ட இணையதளம் (Hackathon), காலணி உற்பத்தித் தொழில்நுட்பம், ஆயத்த ஆடை உற்பத்தி, சரக்கு நகர்வு மேலாண்மை ஆகிய பிரிவுகளில் ஒரு புதிய இளங்கலைத் தொழிற்கல்வி பட்டப்படிப்பு, கலைஞர் 100 இணையதளம் ஆகியவற்றை தொடங்கி வைத்து, ஒன்றிய அரசின் குடிமைப் பணி போட்டித் தேர்வுகளில் தமிழக இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்கும் வகையில் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 10 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக தலா ரூ.25,000 வழங்கினார்.

உயர்கல்வியில் அடியெடுத்து வைக்கும் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் அனைவரும், இன்றைய தொழில் துறைக்குத் தேவையான நவீனத் திறன்களைக் கற்றுணர்ந்து அவர்களது துறைகளில் வெற்றி பெற ஏதுவாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி வைக்கப்பட்ட மாபெரும் திறன் மேம்பாட்டிற்கான திட்டம் "நான் முதல்வன்" திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் மூலம், கல்லூரி மாணவர்களுக்கு முன்னணி நிறுவனங்கள் வாயிலாகத் தரவுப் பொறியியல் (Data Engineering) Genomic Mastery (ஜினோமிக் மாஸ்டரி), PCR Technology (பிசிஆர் தொழில்நுட்பம்), தாவரத்திசு வளர்ப்பு (Plant Tissue Culture), பாசித் தொழில்நுட்பம் (Algal Technology), வரைகலைவடிவமைப்பு (Graphic Design), இயந்திரவியல் (Robotics), செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர கற்றல் (Machine Learning), பொருளின் இணையம் (Internet of Things), கிளவுட் கணினிமுறை அடிப்படைகள் (Cloud Computing), தொழில் 4.0. (Industry 4.0) இணையப் பாதுகாப்பு (Cyber Security), பெருந்தரவு ஆய்வு (Big Data Analytics), பெருக்குதல் உண்மை (Augmented Reality), மெய்நிகர் உண்மை (Virtual Reality), திறன் ஆற்றல் கட்டம் (Smart Energy Grid), பிளாக்செயின் மேம்பாடு (Block Chain Development), நீடித்த கட்டுமான வடிவமைப்பு (Sustainable Building Design), மின்சார வாகனத்துறை (Electrical Vehicle) செயற்கை அறிவு தொழில்நுட்பத்தின் உன்னத வடிவமான Chat GPT, 5G தொழில்நுட்பம் போன்ற நவீன பாடப்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி அவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்குடன் தொடங்கப்பட்டு ஓராண்டிலேயே பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து "நான் முதல்வன்" திட்டம் சாதனை புரிந்துள்ளது.

மாணவ, மாணவியர்கள், இளைஞர்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ள "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம், 2022-2023ஆம் கல்வியாண்டில் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் திறன் பயிற்சி முடித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 13,14,519 ஆகும். இவற்றுள் இறுதியாண்டு பொறியியல் பட்டப்படிப்பினை முடித்து வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்திருந்த 85,053 மாணவர்களில் 65,034 மாணவர்களும். இறுதியாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பினை முடித்து வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்திருந்த 99,230 மாணவர்களில் 83,223 மாணவர்களும் பணிநியமனம் பெற்றுள்ளனர்.

இவற்றுள் "நான் முதல்வன்" திட்டத்திற்கென்று பிரத்தியேகமாக நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் கலை அறிவியல் கல்லூரிகளில் 20,082, பொறியியல் கல்லூரிகளில் 5,844, என மொத்தம் 25,926 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

"நான் முதல்வன்" திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழாவில், "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ்ப் பயிற்சி பெற்ற பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட தொழிற்திறனை வெளிப்படுத்தும், தொழில்நுட்ப வடிவமைப்புக்களைக் காட்சிப்படுத்தும் திறன் சாதனைக் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து,அரசுகலை,அறிவியல்,பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட இத்திட்டம், தொழிற்கல்வி மாணவர்களின் எதிர்காலத்தையும் கவனத்தில் கொண்டு, பாலிடெக்னிக்குகள், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரிவுபடுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட நிருவாகம், அரசுத்துறை நிருவாகத்தில் மக்கள் சேவையில் ஏற்படும் சவால்களுக்குத் தீர்வு காணும் வகையிலும், மாணவர்களின் படைப்பாற்றலையும் புத்தாக்கத் திறனையும் ஊக்குவிக்கும் வகையிலும் "நான் முதல்வன்" நிரலோட்ட இணையதளம் (Hackathon) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாணவச் சமுதாயத்தின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்பட்டது.

பின்னர், இளங்கலைத் தொழில் கல்வியை முன்னெடுத்து தொழில் முனைவோரை உருவாக்கும் வகையில் அண்ணா பல்கலைக்கழகத்தின்கீழ்க் காலணி உற்பத்தித் தொழில்நுட்பம், ஆயத்த ஆடை உற்பத்தி, சரக்கு நகர்வு மேலாண்மை ஆகிய பிரிவுகளில் இளங்கலைத் தொழிற்கல்வி (Bachelor of Vocation) என்ற ஒரு புதிய பட்டப்படிப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து, பல்துறை வித்தகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பல்துறை சாதனைகளை ஆவணப்படுத்தி நினைவுகூறும் விதமாகக் "கலைஞர் 100" இணையதளம் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

பின்னர், ஒன்றிய அரசின் குடிமைப் பணி போட்டித் தேர்வுகளில் தமிழக இளைஞர்களின் பங்கேற்பை அதிகரித்து வெற்றி பெறச் செய்யும் நோக்கிலும், இப்போட்டித் தேர்வுகளில் பங்கேற்க பொருளாதார ரீதியாக உள்ள தடைகளை நீக்கவும், குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 10 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக, தலா ரூ.25,000க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இதில் திரு. விக்னேஷ் குமார் என்ற மாற்றுத்திறனாளி இளைஞர் குடிமைப் பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று ஊக்கத்தொகை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில், பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்பின்கீழ், திறன் பயிற்சி அளிக்க "நான் முதல்வன்" திட்டத்துடன் இணைந்து செயல்படும் பயிற்சி பங்குதாரர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இளைஞர்களுக்குச் சிறந்த திறன் பயிற்சி அளித்திடவும், தொழிற்சாலைத் திறன் பள்ளி பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிடும் வகையிலும், Tata Power Solar, Tata Electronics, Ernst & Young, TVS சப்ளை செயின் சொல்யூஷன்ஸ், வீல்ஸ் இந்தியா, Pinnacle Infotech, KGISL, Technosmile, Teamlease, Infonet comm, Wadhwani Foundation, Tamilnadu

Academy of Construction ஆகிய முன்னணி நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசால் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ந்து, "நான் முதல்வன்" திட்டம் வாயிலாகப் பயிற்சி முடித்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குப் பல்வேறு முன்னணி நிறுவனங்களால் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பிற்கான பணிநியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டு இன்று நாம் காணும் நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினம் இன்று.

கலைஞரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில், உருவாக்கப்பட்ட இணையதளத்தை நான் தொடங்கி வைத்திருக்கிறேன். முரசொலி நாளிதழில் நான் எழுதிய கவிதையில் ஒன்றைச் சுட்டிக் காட்டி இருந்தேன்.

தலைவர் கலைஞர் அவர்களே, "நீங்கள் இருந்து செய்ய வேண்டியதை நான் அமர்ந்து செய்து கொண்டிருக்கிறேன்" என்று எழுதியிருந்தேன். அந்த வகையில், கலைஞருக்கும் பிடிக்கக்கூடிய திட்டம் தான், இந்த "நான் முதல்வன்" திட்டம்.

"நான் முதல்வன் திட்டம்" என்னுடைய கனவுத் திட்டம்! திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்த பிறகு, தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளும் வளர்ந்து வருகிறது. அனைத்துத் தரப்பினரும் உயர்ந்து வருகிறார்கள். மாணவர்கள், இளைஞர் இடையே பெரிய மாற்றத்தை ஏற்படுத்த இந்தத் திட்டம் காரணமாகயிருக்கிறது. நம்முடைய கழக அரசு ஆட்சிக்கு வந்ததும், ஏராளமான தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வந்தார்கள். அப்போது, பல தொழிலதிபர்களுடன் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

"புதிய கம்பெனிகள் தொடங்கினாலும், அதில் வேலை செய்வதற்குத் திறமையான இளைஞர்கள் கிடைக்கிறது கஷ்டமாக இருக்கிறது" என்று அதில் சிலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைக் கவனத்தில் வைத்து, என்னுடைய மனதில் உருவான திட்டம்தான், இந்த 'நான் முதல்வன்' திட்டம்.

தமிழ்நாட்டு மாணவர்கள், இளைஞர்கள், கல்வியில், அறிவாற்றலில், சிந்தனைத் திறனில், பன்முக ஆற்றலில் முன்னேறக்கூடிய வகையில் அவர்களை உயர்த்த வேண்டும் என்று இந்தத் திட்டத்தை கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் தேதி, என் பிறந்த நாளில் தொடங்கி வைத்தேன். இதிலிருந்து இந்தத் திட்டம் எந்த அளவுக்கு என் மனதுக்கு நெருக்கமானத் திட்டம் என்று நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டு இளைஞர்களை உலகத்திலேயே முதன்மையானவர்களாக ஆக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய "தணியாத ஆசை"! சில திட்டங்கள், அப்போதைய தேவையை நிறைவு செய்வதாக இருக்கும். சில திட்டங்கள், ஓராண்டுக்குப் பயன் தருவதாக இருக்கும். ஆனால், நான் முதல்வன் போன்ற திட்டங்கள்தான் தலைமுறை தலைமுறைக்குப் பயன்படுகின்ற திட்டங்கள்!

இந்தத் திட்டத்தை அறிவிக்கும்போது, "இதை முறையாக நடத்திக் காட்டவேண்டும்! இதனுடைய நோக்கத்தை முழுமையாக அடைகின்ற வகையில் நடத்தவேண்டும்" என்று நான் உறுதி எடுத்துக் கொண்டேன். அறிவிப்புச் செய்வதுடன் எந்தத் திட்டமும் முழுமை அடைந்துவிடாது. அதைக் கடைசி வரை நடத்திக் காட்டுவதில்தான், அதனுடைய வெற்றி அடங்கியிருக்கிறது என்று அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும் சொல்லக்கூடியவன் நான். அந்த வகையில், "நான் முதல்வன்" திட்டம் ஓராண்டை நிறைவு செய்கிறது.

நெஞ்சில் நிறைவும், முகத்தில் மகிழ்ச்சியும் பொங்க, நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். உலகை வெல்லும் இளைய தமிழ்நாட்டை உருவாக்குகின்ற, "நான் முதல்வன்" திட்டத்துடன் வெற்றிச் செய்தியைச் சொல்வதற்காகத்தான் இந்த விழா நடைபெறுகிறது.

இதற்குக் காரணமான, மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்களை நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். விளையாட்டுத் துறையில், எப்படிப்பட்ட மாற்றத்தை உருவாக்கி வருகிறாரோ, அதே மாதிரி "நான் முதல்வன்" திட்டத்தையும் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்.

இதற்கு உறுதுணையாக இருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற, திருமதி இன்னசென்ட் திவ்யா, ஐ.ஏ.எஸ். அவர்கள், திட்ட உயர் அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள், கல்லூரி ஆசிரியர்கள், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர், அலுவலர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவன அலுவலர்கள் உள்ளிட்ட எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டுக்கு, "10 இலட்சம் பேருக்குத் திறன் பயிற்சி" என்றுதான் முதலில் இலக்கு நிர்ணயித்தோம். முதல் வருடத்திலேயே, 13 இலட்சம் மாணவர்களுக்கு, உயர்தரத்தில் திறன் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. இதுதான் இந்தத் திட்டத்தினுடைய மிகப்பெரிய சாதனை. இப்படிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு மிகச் சிறந்த வேலைவாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன என்பது, அடுத்த சாதனை.

"நான் முதல்வன்" திட்டம் மூலமாக, 445 பொறியியல் கல்லூரிகளில் திறன் பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. இதில் பயிற்சி பெற்ற, 85,053 பொறியியல் பட்டதாரிகள் பல்வேறு பணிகளுக்கு விண்ணப்பித்திருந்தார்கள். அதில், 65,034 மாணவர்கள் மிகச் சிறந்த இடங்களில் பணி நியமனம் பெற்றிருந்தார்கள். இதைச் சொல்வதில், நான் அளவில்லாப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

அதேபோல, 861 கலைக் கல்லூரிகளில் "நான் முதல்வன்" திட்டம் செயல்பாட்டில் இருந்தது. இந்தக் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற, 99,230 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களுக்குப் பணிகள் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள். இதில், 83,223 மாணவர்கள் பணி நியமனம் பெற்றிருந்தார்கள்.

"நான் முதல்வன்" திட்டம் மூலமாகவும், தனியாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இதன்மூலம், 5,844 பொறியியல் மாணவர்களுக்கும், 20,082 கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய மாபெரும் வெற்றி இது. இந்தத் திட்டத்தினுடைய ஓராண்டு வெற்றி இது.

இந்தத் திட்டத்தை கலைவாணர் அரங்கத்தில் துவக்கி வைக்கும்போது "என்னுடைய வாழ்விலோர் பொன்னாள்" என்று நான் சொன்னேன். உண்மையாகவே, அது பொன்னாள்தான் என்று, இந்த நாள் உறுதி செய்திருக்கிறது. "தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சர் ஆக்கப்பட்டவன் நான், அனைத்து மாணவச் செல்வங்களையும் முதல்வன் ஆக்க உருவாக்கியத் திட்டம்தான் இந்தத் திட்டம்" என்று அப்போது சொன்னேன். அந்த வகையில், இலட்சக்கணக்கான திறமைசாலிகளான நம்முடைய செல்வங்கள் இந்த ஓராண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பள்ளிப் படிப்புக்குப் பிறகு மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்ட மாவட்டந்தோறும் "கல்லூரிக் கனவு" என்ற திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. இதன் மூலமாக, 75,000 மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். மாணவர்களுடைய உயர்கல்வியை ஊக்குவிக்க, "உயர்வுக்குப் படி" என்ற திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. இதில், 2.50 இலட்சம் மாணவர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

"நான் முதல்வன்" இணையதளம் மூலமாக, 25 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். இந்த இணையதளம், 4 கோடி முறை பார்வையிடப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு திட்டம் தமிழ்நாட்டு மாணவச் சமுதாயத்தில் எப்படிப்பட்ட அறிவுப் புரட்சியை உருவாக்கி வருகிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள் இவைகள் எல்லாம்!

தொழிற்கல்விக்கு அடித்தளமாக விளங்குகிற பாலிடெக்னிக் கல்வி நிறுவனங்களுக்கும், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும், திறன் பயிற்சி விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எந்த ஒரு பன்னாட்டு நிறுவனமும் தொழில் தொடங்குவதற்குத் தேவையான திறன் மிகுந்த மனித வளத்தைத் தமிழ்நாட்டில் 'நான் முதல்வன் திட்டம்' உறுதி செய்திருக்கிறது.

தலைநகரத்தில் இருக்கின்ற தலைசிறந்த கல்லூரியில் படித்தால்தான் சிறந்த வேலைவாய்ப்பும், எதிர்காலமும் இருக்கும் என்ற நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்திலேயும் எந்தக் கல்லூரியில் படித்தாலும், அங்கே உரிய திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அந்தக் கல்லூரி வளாகத்திலேயே முன்னணி நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்துகொண்டு, பெரிய நிறுவனங்களுக்கு வேலைக்குப் போகக்கூடிய அளவிற்கு இளைஞர்களுடைய திறன் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய மொத்த மக்கள் தொகையில், 2.31 கோடி இளைஞர்கள், 18 வயதிலிருந்து 35 வயசுக்கு உட்பட்டோர் என்று ஒரு புள்ளிவிவரம் சொல்லுகின்றது. அதாவது, 33 விழுக்காடு பேர்! இந்த இளைய சக்தியை வளர்த்தெடுக்க வேண்டும்.

"தமிழ்நாடு திறன் போட்டிகள்" தொடர்ச்சியாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. படிக்கின்ற காலத்திலேயே மாணவர்கள் – இளைஞர்களின் திறமையை நிரூபிக்கக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்புதான் இது! இந்தத் திறன் போட்டிகள் நம்முடைய மாநிலம் முழுவதும் பள்ளிகள், அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள், பாலிடெக்னிக் கல்லூரிகள், கலை, அறிவியல், பொறியியல் கல்லூரி மாணவர்கள் என்று எல்லோரும் பங்குபெறும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அடுத்த மாதம், தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கின்ற, தமிழ்நாடு திறன் போட்டிகளுக்கு,

இதுவரைக்கும் 58,000 மாணவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். தேசிய அளவில் திறன் போட்டிகள் ஒருங்கிணைக்கின்ற அமைப்பான, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தினுடைய புள்ளிவிவரப்படி, திறன் போட்டிக்கான பதிவுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது.

படிப்பு என்பது பட்டம் சார்ந்தது மட்டுமில்லை; திறமை சார்ந்ததாகவும் மாறவேண்டும்! வேலை என்பது, சம்பளம் சார்ந்ததாக மட்டுமில்லை, திறமை சார்ந்ததாகவும் மாறவேண்டும். அத்தகைய திறமையை உங்களுக்கு உருவாக்க – உங்களில் ஒருவனாக இருக்கக்கூடிய நான், இந்தத் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். இதை இன்றையில் இருந்து எப்போதும் நினைவில், மனதில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.

"நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக, நான் முன்னேறி இன்றைக்கு நல்ல நிலைமையில் இருக்கிறேன்" என்று நீங்கள் சொல்வதைவிடப் பெரிய பெருமை எனக்கு வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த நேரத்தில், ஒரு வருத்தமான செய்தியையும் பதிவு செய்துதான் ஆகவேண்டும்.

குடிமைப் பணித் தேர்வு என்று சொல்லப்படுகிற ஐ.ஏ.எஸ்.- ஐ.பி.எஸ். தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்களுடைய தேர்ச்சி, நாளுக்கு நாள் குறைந்துகொண்டு வருகிறது. 2016ஆம் ஆண்டில் இருந்து, 10 விழுக்காட்டுக்கு மேல் என்ற நிலையில் இருந்து, 5 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. இது என்னை மிகவும் வருந்த வைக்கிறது. இந்த நிலை மாறவேண்டும். நாம்தான் மாற்றவேண்டும்!

அதற்காகத்தான் 'நான் முதல்வன்' திட்டத்தினுடைய ஒரு பகுதியாக ஒன்றிய அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுப் பயிற்சிப் பிரிவு உருவாக்கப்பட்டது. குடிமைப் பணித் தேர்வு எழுதுகிற மாணவர்களுக்கு, இனிப் பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்று, சமீபத்தில் இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டிருந்தோம்.

முதல் அறிவிப்பு, ஒவ்வொரு ஆண்டும், ஆயிரம் பேருக்கு, முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராக, மாதம் ரூ.7,500 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இரண்டாவது, முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறக்கூடிய மாணவர்களுக்கு, ரூ.25,000 ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

இந்தப் பொருளாதார உதவியானது, குடிமைப் பணி தேர்வுக்காகப் படிக்கின்ற மாணவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். அதைவிட முக்கியமாக, அவர்கள் I.A.S. - I.P.S. அதிகாரியானால், நம்முடைய தமிழ்நாட்டிற்குத்தான் பெருமை!

வங்கித்துறை, இரயில்வே துறை, மத்தியப் பணியாளர் தேர்வாணையம் ஆகிய தேர்வுகளுக்கும், ஒருங்கிணைந்த கட்டணமில்லாப் பயிற்சித் திட்டத்தில், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு எல்லா மாவட்டங்களிலும் பயிற்சிகள் தந்துகொண்டு இருக்கிறோம். சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் – அனைத்துப் பணிகளிலும் இடம் பெறவேண்டும். அதிகாரத்தை அடையவேண்டும்!

அந்தச் சமூகநீதியை நிலைநிறுத்துவதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியோட இலட்சியம்! அதற்காகத்தான் இத்தனை திட்டங்களும்! இதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்து தர, நான் இருக்கிறேன்! நம்முடைய அரசு இருக்கிறது! உங்களிடம் நான் கேட்பது எல்லாம், அரசு உருவாக்கித் தருகிற வாய்ப்புகளை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

படிங்க! படிங்க! படிங்க! படிக்கின்ற காலத்தில் எந்தக் கவனச் சிதறல்களும் கூடாது!

தலைவர் கலைஞர் திருக்குறள் போல் ஒன்று சொல்வார்:

'முடியுமா நம்மால்' என்பது தோல்விக்கு முன்பு வரும் தயக்கம்;

'முடித்தே தீருவோம்' என்பது வெற்றிக்கான தொடக்கம்!"

என்று சொல்வார்.

இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். முயற்சி செய்தவர்கள்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள்!

தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல - உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, உங்கள் தந்தையாக நான் உங்களை வாழ்த்துகிறேன்.

உங்களுடைய கனவுகளுக்குப் பாதை அமைத்துத் தர இந்த ஸ்டாலின் இருக்கிறான். நீங்கள் எல்லோரும், வருங்காலத் தலைமுறைக்கான 'ரோல் மாடலாக மாற வேண்டும்' என்று வாழ்த்தி, விடை பெறுகிறேன்!

உலகை வெல்லும் இளைய தமிழகம்

தமிழ்நாடு அரசின் சார்பில் "தமிழ்நாடு நாள்" விழா

சென்னை, மாநிலக் கல்லூரி, திருவள்ளுவர் அரங்கத்தில் 18.07.2023 அன்று, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் "தமிழ்நாடு நாள்" விழா நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், தமிழன்னை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நாள் ஜூலை 18 சிறப்பு மலரை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டுப் பள்ளி மாணவர்களுக்கு நடைபெற்ற மாநில அளவிலான பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுத்தொகை, பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். மேலும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை சார்பில் முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு நாள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணியில் கலந்து கொண்ட கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குத் தமிழ்நாடு நாள் சிறப்பு மலரை வழங்கினார். தமிழ்நாடு நாள் விழாவில் தமிழ்நாடு நாள் தொடர்பான சிறப்புக்குறும்படம் காட்சிப்படுத்தப்பட்டது.

இவ்விழாவில், மாநிலக் கல்லூரி, முதல்வர் முனைவர் இரா.இராமன் அவர்கள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை உரையும், "எழுக தமிழ்நாடு" என்ற தலைப்பில் திரு. ஆழி செந்தில்நாதன் அவர்களும், "வாழ்க தமிழ்நாடு" என்ற தலைப்பில் தமிழ்ப் பல்கலைக்கழகம் மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களும், "வளர்க தமிழ்நாடு" என்ற தலைப்பில் சமூக நீதிக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் குழுத் தலைவர் திரு. சுப. வீரபாண்டியன் அவர்களும் கருத்துரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் விழாப் பேருரையாற்றி, 2021ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது திரு. என்.எஸ்.நாணா என்கிற நாராயணன் அவர்களுக்கும் 2022ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது திரு.ஏ.ஆரோக்கியதாஸ் அவர்களுக்கும் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விருதுகளைப் பெற்ற விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய்க்கான காசோலையும் தங்கப் பதக்கமும் தகுதியுரையும் வழங்கிப் பொன்னாடை அணிவித்தும் சிறப்புச் செய்தார்.

தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டுப் பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடத்தப் பெற்றன. கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தூத்துக்குடி மாவட்டம் செல்வி ர.கங்காஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.50,000மும் பாராட்டுச் சான்றிதழும், இரண்டாம் பரிசு பெற்ற திருவண்ணாமலை மாவட்டம் செல்வி இ.அர்ஷியா என்ற மாணவிக்கு ரூ.30,000மும் பாராட்டுச் சான்றிதழும், மூன்றாம் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம் செல்வி ஜே.செபாஸ்டியன் அகல்யா என்ற மாணவிக்கு ரூ.20,000மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றன.

பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தென்காசி மாவட்டம் செல்வி க.சிவமுத்துலட்சுமி என்ற மாணவிக்கு ரூ.50,000மும் பாராட்டுச் சான்றிதழும், இரண்டாம் பரிசு பெற்ற நீலகிரி மாவட்டம் செல்வன் த.தமிழவன் என்ற மாணவனுக்கு ரூ.30,000மும் பாராட்டுச் சான்றிதழும், மூன்றாம் பரிசு பெற்ற தருமபுரி மாவட்டம் செல்வி மு.கோகிலா என்ற மாணவிக்கு ரூ.20,000மும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றன.

செப்டம்பர் 17– தந்தைப் பெரியார் அவர்கள் பிறந்த நாள்



"சமூக விடுதலைப் போராட்டக்காரர்"

காந்தியடிகளின் கொள்கைகளை, கோட்பாடுகளை, திட்டங்களை நூற்றுக்கு நூறு உண்மையாக, உறுதியாக, திட்பமாக, தீவிரமாக நிறைவேற்றிய தந்தைப் பெரியார், சுதந்திரப் போராட்ட இயக்கமான காங்கிரஸ், தமிழ்நாட்டில் வேரூன்றித் தழைக்கவும், கதராடை கட்டுதல் எங்கும் பரவவும் தீண்டாமை ஒழியவும் பாடுபட்டார்.

வெள்ளை ஆதிக்கத்திலிருந்து சுதந்திரமடைவது மட்டும் போதாது என்று கூறி, தீண்டாமை ஆதிக்கம், அறியாமை ஆதிக்கம், இல்லாமை ஆதிக்கம், மொழி ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்தும் நாம் விடுதலை பெற வேண்டும் என்று பாடுபட்டார். அல்லும், பகலும் வாழ்நாள் முழுவதும், நோய்த் தொல்லைகளையும் பொருட்படுத்தாது தமது 95ஆவது வயது வரையிலும் தனது இறுதி மூச்சு வரை சுதந்திரப் போரைத் தொடர்ந்தார்.

அரசியல் விடுதலை மட்டுமல்ல, சமுதாய விடுதலைக்காகவும் அவரது போர் தொடர்ந்தது. உலகம் கண்டிராத சமூக விடுதலைப் போராட்டக்காரர் அவர். சமுதாயச் சீர்திருத்தவாதிகள் பேசுவார்கள், எழுதுவார்கள். எதுவும் நடக்கவில்லையே என்று மனம் புழுங்குவார்கள். தந்தைப் பெரியார் ஒருவர்தான் தனது கொள்கைகளை நிறைவேற்ற ஒரு அமைப்பினை உருவாக்கினார். தக்கதோர் தளபதியாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் மூலம் ஒப்பரிய சாதனைகளைத் தன் வாழ்நாளிலேயே கண்டார்.

- வைக்கம் சத்தியாக்கிரகமும், காந்தியும் என்னும் நூலிலிருந்து...

கட்டுரை

தமிழ் இலக்கியமும் போட்டித் தேர்வுகளும்

– டாக்டர் சங்கர சரவணன்
இணை இயக்குநர் பாடநூல் கழகம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்துப் பணிகளுக்கும் தமிழ் மொழிப் பாடத்தில் கட்டாயத் தாள் ஒன்று உள்ளது. இத்தாள் தகுதித் தாள் ஆகும். அதாவது, இத்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே மற்ற தாள்கள் திருத்தப்படும். குறைந்தபட்ச மதிப்பெண் 40 விழுக்காடு ஆகும். அதேபோல், தொகுதி – IV, தொகுதி – II களும் IV & II தேர்வுகளில் இடம்பெறும் பொதுத் தமிழ் தாளில் தமிழ் இலக்கணம், இலக்கியம் போன்ற பகுதிகளிலிருந்து குறிப்பாகப் பள்ளிப் பாடநூல்களில் இடம்பெற்றுள்ள செய்யுள், உரைநடை, இலக்கணம் போன்றவற்றிலிருந்து வினாக்கள் கேட்கப்படுகின்றன. இந்த வினாக்கள் அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தையொட்டி அமைந்தபோதிலும் இந்த வினாக்களுக்கு விடையளிக்க 6 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாடங்களில் காணப்படும் தகவல்களே அடிப்படை ஆகும். பாடத்திட்டத்தில் உள்ள ஒரு சில பகுதிகள் தற்போதைய பாடநூல்களில் இல்லாத பட்சத்தில் அவற்றைப் பிற நூல்களிலிருந்தோ இணையதளம் வாயிலாகவோ படிக்க வேண்டும்.

கட்டாயத் தமிழ் தாள் குரூப் – II தேர்வர்களுக்கு மட்டும் விரித்துரைக்கும் விடை வகையில் அமைந்துள்ளது. அதற்கெனத் தனிப்பாடத் திட்டத்தையும், ஆணையும் வகுத்துள்ளது.

இந்தியக் குடிமைப்பணித் தேர்வு எழுதுபவர்களுக்கும் கட்டாய மொழித்தாள் வரிசையில் தமிழ் மொழித்தாளைத் தேர்வு செய்து எழுத வேண்டியுள்ளது. அந்தத் தாளும் தகுதித் தாளாகும். தகுதித்தாள் என்ற போதிலும் இந்தத் தாளை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாது. பள்ளி அளவிலாவது கட்டாயம் தமிழ் படித்திருந்தால் மட்டுமே இந்தத் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெற இயலும். இந்த இடத்தில் எனது மாணவிகளில் ஒருவரான சுஜிதா குறித்து நினைவு கூற விரும்புகிறேன். சுஜிதா மிகவும் அறிவார்ந்த மாணவி. நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். I.A.S. தேர்வில் இரண்டு முறை முதல்கட்டத் தேர்வில் வெற்றிபெற்று முதன்மைத் தேர்வு எழுதினார். ஆனால், முதன்மைத் தேர்வில் இரண்டு முறையும் தனது கட்டாய மொழித் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் எடுக்கத் தவறியதால் தகுதி இழந்தார், காரணம் பள்ளியில் அவர் இந்தி மொழிப்பாடத்தைப் பயின்றிருந்தார், ஆனால், அதில் அவருக்கு UPSC குடிமைப்பணித் தேர்வில் கேட்கப்படும் கட்டாய இந்தி மொழித் தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெருமளவிற்குப் புலமை இல்லை. இதை உணர்ந்துகொண்ட அவர் பள்ளியில் தமிழ் படிக்காமல் விட்டதைத் தவறு என உணர்ந்து கொண்டார்.

தமிழ் பேசவும், பேசுவதைப் புரிந்து கொள்ளவும் முடிந்த அவருக்குத் தமிழை வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்வது கடினமாக இருக்கவில்லை. சுமார் ஒரு மாத காலம் என்னிடம் பயிற்சி எடுத்துக்கொண்டு தொடர்ந்து

தொலைக்காட்சியில் செய்திகள் பார்த்தும் செய்தித்தாள்கள் வாசித்தும் UPSC முந்தைய வருட தாள்களுக்குப் பயிற்சி எடுத்தும் மூன்றாவது முறை தேர்வில் வெற்றிகரமாகத் தேறினார்.

தற்போது, கருநாடக மாநிலத்தில் அவர் I.P.S. அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். அவர் வெற்றி பெற்றபோது எனது இல்லத்திற்கு வந்து அவரது பெற்றோர்கள் பள்ளிப் பருவத்தில் சுஜிதாவை தமிழ் படிக்க வைக்காமல் போனதற்காக வெகுவாக வருத்தப்பட்டார்கள். வெகுவிரைவில் அவருக்குப் பயிற்சி அளித்து வெற்றி அடைய வைத்ததற்காக எனக்கு நன்றி சொன்னார்கள்.

இது குறித்துப் பிரபல தமிழ் வார இதழான ஜூனியர் விகடன் 'கைவிட்ட இந்தி, கைகொடுத்த தமிழ்' என்ற கட்டுரை ஒன்றையும் வெளியிட்டது.

இப்போதும் சுஜிதாவும் நானும் உலகத் தாய்மொழி தினத்தன்று உரையாடிக் கொள்வோம்.

கடந்த 20 ஆண்டுகளாக இந்தியக் குடிமைப் பணித் தேர்விற்குத் தமிழை விருப்பப் பாடமாக எடுக்கும் மாணவ, மாணவியர்களோடு தொடர்ந்து பழகியும், பயிற்சி கொடுத்தும் வருகிறேன். தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் மொழி வரலாறு, தமிழ் பண்பாட்டு வரலாறு, இலக்கிய உத்திகள், இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகள், நாட்டுப்புற இலக்கியம், மொழிபெயர்ப்பு, ஒப்பியல் இலக்கணம், இதழியல் உள்ளிட்ட பகுதிகளைப் பாடமாகக் கொண்டது முதல் தாள்.

இரண்டாம் தாளில் குறுந்தொகை (25 பாடல்கள்), புறநானூறு (18 பாடல்கள்), திருக்குறள் (அரசியல் மற்றும் அமைச்சியல்), சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம்), திருவாசகம் நீத்தல் விண்ணப்பம்), திருப்பாவை, கண்ணன் பாட்டு, குடும்ப விளக்கு, கறுப்பு மலர்கள், ஏ தாழ்ந்த தமிழகமே!, அறமும் அரசியலும், குரு பீடம், சித்திரப்பாவை, மலையருவி, முத்துப்பட்டன் கதை போன்றவை பாடப்பகுதிகளாக உள்ளன. இவற்றிலிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு விமர்சனப் போக்கில் விடை எழுத வேண்டும். விடை சொந்த நடையில் கருத்துச் செறிவுடன் தக்க அகச் சான்றுகள், புறச் சான்றுகளோடு அமைதல் வேண்டும். தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவதற்குப் பரந்துபட்ட வாசிப்பும், நல்ல எழுத்துப் பயிற்சியும் தேவை. எழுத்துப் பிழை இல்லாமல் எழுதுதல் வேண்டும். கையெழுத்து அழகாக இருந்தால் நல்லது. கண்டிப்பாக அழகாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், படிப்பதற்கு ஏற்றாற்போல் இருக்க வேண்டும். சுமாரான கையெழுத்தோடு நல்ல கருத்துச்செறிவோடு விடை எழுதி நல்ல மதிப்பெண் பெற்று, வெற்றி பெற்ற நண்பர்களை நான் அறிவேன். அனைத்துக் கேள்விகளுக்கும் 'விடை எழுதுவதற்கு நேர மேலாண்மை மிக மிக அவசியம், எனது மாணவர்கள் சிலரின் வெற்றி இரகசியங்களைப் பகிர விரும்புகிறேன்.

தம்பி ஆனந்தகுமார் 2003இல் தேர்வானவர். பரந்துபட்ட வாசிப்பும் சொல்லும் கருத்துக்களை நன்கு உள்வாங்கிக்கொண்டு சொந்த நடையில் துணிச்சலாக விடை எழுதுவது இவரது தனித்தன்மை.

2010இல் வெற்றி பெற்ற தங்கை சண்முகப்ரியா ஆழமாகப் படிப்பவர், அதே சமயத்தில் நான் கூறும் கருத்துக்களை அளவறிந்து ஏற்ற இடங்களில் சரியாகப் பயன்படுத்துபவர். நேர மேலாண்மை இவரின் குறிப்பிடத்தக்க திறமைகளில் ஒன்று.

2014இல் இந்தியக் குடிமைப்பணித் தேர்வை முழுமையும் தமிழில் எழுதி வெற்றி பெற்ற தம்பி வி.பி.ஜெயசீலன் இலக்கிய ஆர்வமிக்கவர், கவிதைகளை விரும்பி வாசிப்பவர், கவிதைகளும் எழுதக் கூடியவர். நல்ல மேடைப் பேச்சாளர், ஒரு முறை இவர் மாதிரித் தேர்வு ஒன்றில் எழுதிய விடை கவிதை நடையில் இருக்க அதைத் திருத்திய பேராசிரியர் ஒருவர் அவ்வாறெல்லாம் எழுதக் கூடாது என்று கண்டிக்க, அதன் பின்னர் என்னைச் சந்தித்து தனது நடையில் தவறு யாதென வருத்தத்துடன் வினாவினார்.

இந்தியக் குடிமைப்பணித் தேர்வில் தமிழை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர்கள் சிலர்தான். அவர்களிலும் தமிழைக் கவிதை நடையில் எழுதுபவர்கள் வெகு சிலரே. எனவே, தாராளமாக எழுதலாம் தம்பி என்று அவரை ஊக்குவித்தேன். சிறப்பாகப் பல பயிற்சித் தேர்வுகளை எழுதிக் காட்டினார். சுட்டிக்காட்டிய தவறுகளை அடுத்த தேர்வில் வெட்டிக் காட்டினார். அதன் விளைவு. இந்தியக் குடிமைப்பணித் தேர்வில் தமிழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்வானார்.

இன்னும் சில தம்பி, தங்கைகளோடு தமிழ் இலக்கியப் பாடத்தால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் அதனால் இந்தியக் குடிமைப்பணித் தேர்வில் அவர்களடைந்த வெற்றியையும் குறித்து விரிவாக எழுத ஆசையுண்டு, ஆனால், விரிவஞ்சி இப்போதைக்கு விட்டு வைக்கிறேன்.

எதிர்காலத்தில் இதுபோல ஒரு கட்டுரை எழுதும் பொழுது தங்கை ஒற்றுப் பிழை உமா, அடாது மழை பெய்தாலும் விடாது வந்து தேர்வெழுதிய தம்பி மதுபாலன், திருக்குறளை உகப்பு வாய்ப்பில் (Choice) விட்டுவிட்டு வந்ததற்காக என்னிடம் திட்டு வாங்கிய இன்னொரு தம்பி, வகுப்பு முடிந்து நான் வாசலுக்கு வந்தாலும் என்னிடம் ஐயம் கேட்டுக்கொண்டே துரத்தி வந்து, அந்தத் துரத்தலின் அர்த்தத்தை தன் வெற்றி மூலம் நிரூபித்த தம்பி சரவணன், மாதிரித் தேர்வுக்குப் பின் நான் கொடுக்கும் விரிவுரைகளைக் கேட்டும் பயன்பெற்ற தம்பி முருகானந்தம், ஒரு தேர்வில் செய்த பிழைகளை ஓயாமல் ஆராய்ந்து மறு தேர்வில்' தன்னைத் திருத்தி வெற்றி பெற்ற தங்கை அலர்மேல் மங்கை, சிதைவிடத்து உல்கார் உரவோர் என்று நான் சொன்ன குறளால் உத்வேகம் பெற்ற தம்பி சுப்புராஜ், படித்துமுடித்த பின்பு பயிற்சித் தேர்வுகள் மூலம் கற்க வேண்டிய பாடங்கள் நிறைய இருந்தன என்று சொன்ன தம்பி உதயகுமார் போன்றோரைப்பற்றியும் நான் இந்தக் கட்டுரையில் இப்போது நினைவு கூற மறந்துவிட்ட – ஆனால், என் மூளையின் மூலையில் (அடிமனதில்) பதிந்திருக்கும் வேறு சில தம்பி தங்கைகளின் இந்தியக் குடிமைப்பணித் தேர்வில் தமிழ் இலக்கியப் பாடம் ஏற்படுத்தியத் தாக்கம் குறித்து இன்னொரு கட்டுரையில் பார்க்கலாம். இப்போதைக்கு இக்கட்டுரை முடிகிறது. ஆனால், இலக்கியம் தரும் இப்(போதை)க்கு எப்போதும் முடிவில்லை.

செப்டம்பர் 5: கப்பலோட்டியத் தமிழன்
வ.உ.சிதம்பரனார் அவர்கள் பிறந்த நாள்

"தென்னாட்டுத் திலகம்"

வெள்ளை ஏகாதிபத்தியம் வீழ்த்தப்பட வேண்டுமானால், அவர்கள் இங்கே காலூன்றக் காரணமான வியாபாரத்துறையை முதலில் நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற ஓர் ஒப்பற்றத் திட்டத்தை முதலில் வகுத்த பெருமையாளர்தான் கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள். இந்த உயரிய நோக்கத்தோடுதான் 'சுதேசி' கப்பல் கம்பெனியைத் துவக்கினார் இவர்.

இன்றைய, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில், உலகநாதப் பிள்ளை- பரமாயி அம்மாள் தம்பதியினருக்குப் பிறந்தவர்தான் வ.உ.சிதம்பரனார் அவர்கள். 05.09.1872 அன்று பிறந்தவரான இவர், இளமைக்காலக் கல்வியை ஒட்டப்பிடாரத்தில் முடித்தார். தனது மகன் ஆங்கிலக் கல்வி பெறுவதற்காகவே இவருடைய தந்தையார் ஒட்டப்பிடாரத்தில் ஓர் ஆங்கிலப் பள்ளியை நிறுவினார். அதன் பின்னர், இவரது படிப்பு தூத்துக்குடியில் தொடர்ந்தது. சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், கால்டுவெல் உயர்நிலைப் பள்ளியிலும் படித்து வந்த வ.உ.சி. அவர்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பெரும்புலமை மிக்கவரானார்.

சிதம்பரனாரின் பாட்டனாரும், பெரிய தந்தையாரும், தந்தையாரும் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிந்தோர் ஆவர். அந்த வேட்கை இவரையும் ஆட்கொண்டது. திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று 1895ஆம் ஆண்டு வாக்குவல்லமை மிகுந்த வழக்கறிஞர் ஆனார்.

ஒட்டப்பிடாரத்திலேயே வழக்கறிஞர் தொழில் தொடங்கினார் வ.உ.சி. அவர்கள். பரம்பரை, பரம்பரையாக வழக்கறிஞர் தொழில் நடத்தும் குடும்பத்தார் ஆகையால், அந்நாளில் அவ்வீடு 'வக்கீல் ஐயா வீடு' என்றே ஊர் மக்களால் குறிப்பிடப்பட்டது.

நமது வ.உ.சிதம்பரனார் அவர்கள், குற்றவியல் துறையில் நிகரற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தார். ஐந்தாண்டுக்குப் பின் இவருடைய வழக்கறிஞர் தொழில் தூத்துக்குடியிலே தொடரலாயிற்று. நேர்மையின் நிலைக்கலனாக விளங்கிய இவரிடமிருந்த வாதத்திறமையால் வெற்றி மேல் வெற்றி கிடைத்தது.

தலைசிறந்த பேச்சாற்றல் மட்டுமல்ல, இணையற்ற எழுத்தாற்றலும் இவருக்குண்டு. அதன் காரணமாகவே ‘விவேகபானு’ என்ற மாத இதழ் வ.உ.சி. அவர்களால் தொடங்கப்பெற்றது.

‘தமிழ்நேஷனல்’, ‘இந்து நேசன்’ ஆகிய பத்திரிக்கைகளும் இவரால் நடத்தப்பட்டன. மெய்யறிவு, மெய்யறம், எனது பாடல் திரட்டு, வ.உ.சி. கண்ட பாரதி சுயசரிதை போன்ற நூல்களையும் எழுதினார். தமிழ்ப் புலமைமிக்கவர் ஆதலால் இன்னிலை, திருக்குறள், சிவஞான போதம் ஆகியவற்றுக்கு உரை எழுதினார். தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சிவஞானபோதம் ஆகிய நூல்களைப் பதிப்பித்தார்.

சைவ சிந்தாந்த சபை, மதுரைத் தமிழ்ச் சங்கம், வாலிபர் சங்கம், பிரம்ம சங்கம் போன்ற பல சங்கங்களில் உறுப்பினராக மட்டும் அல்ல, கைத்தொழில் சங்கம், தருமசங்கம் ஆகியவற்றைத் தோற்றுவித்த சிறப்பும் சிதம்பரனார் அவர்களுக்கு உண்டு.

விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருஷ்ணானந்தரின் சந்திப்பு, வ.உ.சி. அவர்களின் உள்ளத்தில் சிறிது சிறிதாகச் சுதந்திரக் கனல் மூட்டியது.

‘மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்’ என்ற பாரதியின் கனவை நனவாக்கிட ‘சுதேசிக் கப்பல் கம்பெனி’ ரூ.10 இலட்சம் பங்கு முதலீட்டில் துவங்கப்பட்டது. மதுரை தமிழ்ச் சங்கத் தலைவர் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் இதற்குத் தலைவராகவும், வ.உ.சி. அவர்கள் செயலாளராகவும், விஜயராகவாச்சாரியார் அவர்கள் சட்ட ஆலோசகராகவும் பொறுப்பேற்றார்கள். வெள்ளையர் வியாபாரம் இதனால் சற்று நொடிந்தது.

இந்தக் காரணத்தால், சிதம்பரனார் அவர்களை எப்படியும் ஒடுக்கியே தீர்வது எனக் கருதிய ஆங்கிலேய அரசினர் பலவகையிலும் தொல்லைக் கொடுக்கலாயினர்.

திலகரையே தம் குருவாகக் கொண்டு தேசியம் வளர்ப்பில் தீவிரம் காட்டலானார் வ.உ.சி. அவர்கள். மகாகவி பாரதியார் அவர்களும், சொல்வல்லார் சுப்பிரமணிய சிவா அவர்களும் இந்திய விடுதலைப்போரில் இவரோடு தோளோடு தோள் நின்றார்கள்.

1905இல், திருநெல்வேலியில் இவரால் ‘தேசாபிமானிகள் சங்கம்’, ‘ஜனசங்கம்’ ஆகியவை உருவாக்கப்பட்டன.

வேகமும் நுணுக்கமும் மிக்க இவருடைய சொற்போருக்கு நாடெங்கும் மக்களை எழுச்சிமயமாக்கவே, வெள்ளையராட்சி வெகுண்டெழுந்தது. அப்போதிருந்த திருநெல்வேலி கலெக்டர் விஞ்சுதுரை தூண்டுதலால் அரசாங்கமே சிதம்பரனார் அவர்கள் மீது பேசியும், எழுதியும் நாட்டின் அமைதியைக் குலைத்தார் என்று வழக்குத் தொடுத்தது.

வழக்கு முடிவில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு 40 ஆண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கோயம்புத்தூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட இவர், மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார். கொடிய வெள்ளையர் அங்கே வ.உ.சி. அவர்களை எண்ணெய்ச் செக்கு இழுக்கச் செய்து பெரும் இன்னலுக்கு ஆளாக்கினார்கள்.

இதற்கிடையில் ‘சுதேசிக் கப்பல் கம்பெனி’ ஆங்கிலேயர் சூழ்ச்சியால் சீர் குலைந்து போன செய்தியும் சிதம்பரனார் அவர்களின் நெஞ்சத்தில் வேல் பாய்ச்சுவதாக வந்தது.

இந்திய விடுதலைப்போரில், தனது இன்னுயிரைத் துச்சமென மதித்து முழுமூச்சோடு இறங்கியதன் காரணமாக 35ஆம் வயதில் சிறையில் அடைக்கப்பட்ட சிங்கத் தமிழர் சிதம்பரனார் அவர்கள், 1912ஆம் ஆண்டு டிசம்பரில் விடுதலை செய்யப்பட்டார்.

சிறைக்குள்ளிருந்த காலத்திலேயே மிகவும் நோய்வாய்ப்பட்டு நலிந்த நிலையிலேயே தூத்துக்குடியில் 18.11.1936 அன்று ‘தென்னாட்டுத் திலகம்’ எனப் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரனார் அவர்களின் இன்னுயிர் பிரிந்தது.

நன்றி: பூவழகி பதிப்பக வெளியீடான கட்டபொம்மன் முதல் காந்தியார் வரை என்னும் நூலிலிருந்து...

இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா....

எம் அண்ணா... இதய மன்னா...
படைக்கஞ்சாத் தம்பியர் உண்டென்று
பகர்ந்தாயே,
எமை விடுத்துப் பெரும்பயணம் ஏன்
தொடர்ந்தாய்...?
உன் கண்ணொளியின் கதகதப்பில்
வளர்ந்தோமே!
எம் கண்ணெல்லாம் குளமாக ஏன்
மாற்றிவிட்டாய்?
நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்;
நியாயந்தானா ?
கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;
நான் தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ ?
நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?
விரல் அசைத்து எழுத்துலகில்
வித்தைகளைச் செய்தாயே; அந்த
விரலை ஏன் மடக்கிக் கொண்டாய் ?
கண்மூடிக் கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்... இன்று
மண் மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை!
கொடுமைக்கு முடிவு கண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன் சென்றாய்?
எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்றாய்

இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம் ?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதுமண்ணா!
எழுந்து வா எம்மண்ணா!
வரமாட்டாய்; வரமாட்டாய்;
இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா ...நீ
இருக்குமிடந் தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத்
தந்திடண்ணா...
நான் வரும்போது கையோடு
கொணர்ந்து அஃதை
உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா...

– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்
09.02.1969 அன்று, சென்னை வானொலியில்
வடித்த கவிதாஞ்சலி...

எதிர்காலத் தலைமுறையின் அறிவாற்றலைப் பெருக்கும் வகையில் தலைநிமிர்ந்து நிற்கும் கலைஞர் நூற்றாண்டு நூலகம்

தொன்மை, கலை, நாகரிகம், பண்பாடு, இலக்கியம், அரசியல், ஆன்மிகம் போன்ற பல்வேறு அடையாளங்களைத் தாங்கி நிற்கும் மதுரையின் மற்றொரு பெருமையாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால், 15.07.2023 அன்று, மதுரை, புதுநத்தம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

நவீனக் கட்டுமானத் தொழில்நுட்பத்தில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் தானியங்கி டிஜிட்டல் நூலகமாக இந்த நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்த நூலகம் மொத்தம் 6 தளங்களுடன் 3 இலட்சம் புத்தகங்களுடன் ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. அரிய நூல்கள் இடம்பெற்றுள்ளதோடு அண்மைக்கால எழுத்தாளர்கள் எழுதிய நூல்கள்வரை இந்த நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.

6 மாடிகளை அலங்கரிக்கும் நூல்கள்

2.73 ஏக்கர் நிலத்தில் 2,13,338 சதுர அடிப் பரப்பளவில், தரை மற்றும் 6 தளங்களுடன் ரூ.218.20 கோடிச் செலவில் அடித்தளம், தரைத்தளம், அதனுடன் 6 தளங்களைக் கொண்டு 120.75 கோடிச் செலவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளத்தில் வாகன நிறுத்துமிடம், செய்தி-நாளிதழ் சேமிப்பு, நூல் கட்டும் பிரிவு அமைந்துள்ளன.

தரைத்தளத்தில் கலைக்கூடம், மாற்றுத்திறனாளிகளுக்கானப் பிரிவு, மாநாட்டுக் கூடம், ஓய்வறை, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, பல்வகை பயன்பாட்டு அரங்கம், உறுப்பினர் சேர்க்கைப் பிரிவு உள்ளிட்டவை அமைந்துள்ளன. முதல் தளத்தில் கலைஞர் பகுதி, குழந்தைகள் நூலகம், நாளிதழ்கள் – பருவ இதழ்கள் படிக்கும் பகுதி, சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு, அறிவியல் கருவிகள் பிரிவு உள்ளிட்டவை அமைந்துள்ளன. இரண்டாம் தளத்தில் தமிழ் நூல்கள் பிரிவு, கலைஞரின் நூல்களைக் கொண்ட பிரிவு எனச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது தளத்தில் ஆங்கில நூல்கள், ஆராய்ச்சி இதழ்கள் உள்ளன. நான்காவது தளத்தில் எதிர்காலக் கனவுகளுடன் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மாணாக்கர், இளைஞர்களின் கனவு நனவாகும் வகையில் ஏறத்தாழ 30 ஆயிரம் புத்தகங்களுடனானப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது தளத்தில் மின்னணுத் தொழில்நுட்பத்தின் வாயிலாக இன்றைய தலைமுறைக்குத் தேவையான அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தருவதற்கான பகுதி உலகத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஆறாவது தளத்தில் நூல் பகுப்பாய்வு, நூல் பட்டியல் தயாரித்தல், நிருவாகப் பணியாளர்கள் சார்ந்த பகுதிகள் இடம்பெற்றுள்ளன. உள்கட்டமைப்புகள் கண்களை விரியச் செய்யும் வகையில் வியக்க வைக்கின்றன.

தற்போது இந்த நூலகத்தைப் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், எழுத்தாளர்கள் ஆர்வமாகப் பார்வையிட்டு வருகின்றனர். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் இந்த நூலகத்தைப் பார்வையிட ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் குழந்தைகளுடன் சுற்றுலாவுக்கு வருவதுபோல் திரள்கின்றனர். இதனால், மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருமலை நாயக்கர் மகால், காந்தி அருங்காட்சியகம் போன்ற சுற்றுலாத்தலங்கள் வரிசையில் தற்போது கலைஞர் நூற்றாண்டு நூலகமும் இணைந்துகொண்டது.

நூலகத்தைப் பார்வையிட வரும் மக்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் நூலகத்தின் முகப்புத் தோற்றம் முதல் நூலக உள் அரங்குகளின் முன் நின்று சுயபடம் (செல்ஃபி) எடுத்து மகிழ்கின்றனர். குழந்தைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், அவர்களைக் கவருவதற்கான

நோக்கத்தில் இந்த நூலகத்தில் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் அறிவியல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சிறார் அறிவியல் அரங்கம் குழந்தைகளைக் கவர்ந்துள்ளது. ஓர் அறிவியல் பூங்காவில் உள்ள அனைத்து அம்சங்களும் இந்த அறிவியல் அரங்கில் உள்ளன. மனிதனின் உடல் எடை, கோள்களுக்குக்கோள் மாறும். அந்த அடிப்படையில் குழந்தைகள் தங்கள் உடல் எடையை இந்த அறிவியல் அரங்கில் உள்ள உயர் தொழில்நுட்ப எடைக்கருவியில் நின்று ஒவ்வொரு கோள்களிலும் தங்களது எடை எவ்வளவு என்பதை அறியலாம்.

குழந்தைகள் நூலகப் பிரிவு சுவரில் ஓவியங்கள், விசாலமான இருக்கைகள் குழந்தைகளை ஆசை ஆசையாகப் புத்தகங்களை எடுத்துப் படிக்கத்தூண்டுகிறது. தனியார், அரசுப் பள்ளி நிருவாகங்கள் தற்போது அதிகளவில் பள்ளிக் குழந்தைகளை இந்த நூலகத்துக்கு அழைத்து வருகின்றனர். நூலகத்தின் தரைத்தளத்தில் வரவேற்பு அறை அருகே பார்வையாளர்கள் அமரும் இருக்கைகளும் பேனா வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இப்படி நூலகத்தின் ஒவ்வொரு வடிவமைப்பும், சிறப்புகளும் வாசிப்பையும், எழுத்தார்வத்தையும் நமக்கு நினைவூட்டிக்கொண்டே இருக்கின்றன.

சின்னஞ்சிறு குழந்தைகளின் வியப்பு, பள்ளி மாணவர்களின் ஆர்வம், பெரியவர்களின் பிரமிப்புப் போன்றவற்றால் கலைஞர் நூற்றாண்டு நூலகம், தற்போது பார்வையாளர்களால் நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் சங்கத் தமிழ்க் கவிதைகளுக்குத் தன் தங்கத் தமிழ் வரிகளால் அணி சேர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் அமைந்துள்ள இந்த மாபெரும் நூலகம் தென் தமிழகத்தின் அடையாளமாக விளங்கி எதிர்கால தலைமுறையின் அறிவாற்றலைப் பெருக்கும் வகையில் என்றென்றும் தலைநிமிர்ந்து நிற்கும்.

இந்நூலகம் குறித்து மதுரை மாவட்டம், பனையூர் கிராமத்தைச் சார்ந்த திரு. விக்னேஷ் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

நான் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பனையூர் கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்தவன். நான் டிப்ளமோ படிப்பான (DEEE) முடித்துள்ளேன். நான் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்விற்குத் தயார் செய்து வருகிறேன். இந்நிலையில், மதுரையில் மிகப்பிரம்மாண்டமாகக் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான புத்தகங்கள் இடம்பெற்றுள்ளன. நூலகம் முழுவதும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் போட்டித்

தேர்விற்குத் தயார் செய்யும் என்னைப் போன்ற இளைஞர்களுக்கு ஏராளமானப் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. நூலக அரங்குகள் ஒவ்வொன்றும் மிக அமைதியான சூழலில் படிப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இந்த நூலகம் ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகம் எனக் கூறப்படுகிறது. இத்தகைய பிரம்மாண்டமான நூலகத்தை எங்கள் மதுரை நகரில் அமைத்ததில் எங்களுக்குமிகுந்தமகிழ்ச்சி.இந்நூலகம்என்னைப் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள இளைஞர்களுக்கு வரமாக அமைந்துள்ளது. இந்நூலகத்தைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலகம் குறித்து மதுரை, யாதவா பெண்கள் கல்லூரி மாணவி செல்வி தெ.நிவேதா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது:

நான் மதுரை திருப்பாலையில் உள்ள யாதவா பெண்கள் கல்லூரியில் பி.எஸ்.சி.கணிதம் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். மதுரை புதுநத்தம் சாலையில் புதிதாகத் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் மிகப் பிரம்மாண்டமாக உள்ளது. நவீனத் தொழில்நுட்பத்துடன் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு மிக சிறப்பாகக் கட்டப்பட்டுள்ளது. ஏராளமான புத்தகங்கள், டிஜிட்டல் சேவைகள், எஸ்கலேட்டர், ஏ.சி., போன்ற ஏராளமான வசதிகள் உள்ளன. நூலகத்திற்கு உள் செல்லும்போது புதிதாகத் தொடங்கப்பட்ட வணிக வளாகத்திற்குள் நுழைந்தது போன்ற உள்ளுணர்வு ஏற்படுகின்றது. இங்குள்ள புத்தகங்கள் என்னைப் போன்ற கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கலை, இலக்கியம், கட்டுரை, புதினம், ஆராய்ச்சி நூல்கள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் என இலட்சக்கணக்கான புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நூலகம் மீண்டும், மீண்டும் வரவேண்டும் என்ற ஆவலையும், புத்தகம் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றது. இந்த நூலகத்தை எங்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வெற்றிக்கதை

தூத்துக்குடி மாவட்டம்

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும்வகையில் முதியோர் உதவித்தொகையை உயர்த்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!

தமிழ்நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்தப் பிரிவினர்களைப் பாதுகாக்கும் வகையில் ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதுமட்டுமல்லாமல், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக ஏழை, எளிய மக்களுக்குத் தொடர்ந்து நல்வாய்ப்புகளையும், உதவிகளையும் வழங்கக்கூடிய ஒரு மாநிலமாக மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

கடந்த 10 வருடங்களாக உயர்த்தப்படாமல் இருந்த முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக வழங்கப்படக்கூடிய உதவித்தொகையை, தமிழ்நாட்டு மக்களின் நலனில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு, பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியத்தொகையான 1,000 ரூபாயை 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நடைமுறையில் இருக்கிறது. இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், இந்திராகாந்தி மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், இந்திராகாந்தி கைம்பெண்கள் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், ஆதரவற்றோர் ஓய்வூதியத் திட்டம், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஓய்வூதியத் திட்டம், 50 வயதிற்கு மிகாமல் திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம், இலங்கையிலிருந்து வந்திருக்கக்கூடிய மக்களுக்கான ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த ஓய்வூதியத் திட்டங்கள் 1962ஆம் ஆண்டில்தான் முதன்முறையாகத்

தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்போது மாதத்திற்கு ரூ.20 அன்றைய சூழ்நிலையில் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு இந்தத் திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. 1962ஆம் ஆண்டிலிருந்து இப்போதுவரை பல்வேறு காலக்கட்டங்களில் இந்த ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது ரூ.1,000 மாத ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டு, அவர்கள் முன்னேற்றத்துக்குத் தனியாக துறையை உருவாக்கி, பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த 1,000 ரூபாய் ஓய்வூதியத்தை 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டு, கடந்த ஜனவரி மாதம் 1ஆம் தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்துச் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாகத் தமிழ்நாடு முழுவதும் ஏறத்தாழ 30 இலட்சத்து 55 ஆயிரத்து 857 பயனாளிகள் இந்த மாதாந்திர ஓய்வூதியங்களைப் பெற்று வருகிறார்கள். இந்த ஓய்வூதியம் உயர்வினால் கைத்தறித் துறையில் இருக்கக்கூடிய திட்டங்களில் பதிவு செய்திருக்கக்கூடியவர்கள், தொழிலாளர் நலத்துறையின்கீழ் இயங்கக்கூடிய பல்வேறு வாரியங்களின் உறுப்பினர்கள் பயன்பெறுகிறார்கள். அதேபோல, கட்டுமானத் தொழிலாளர்கள், அதாவது கட்டடத் தொழிலாளர் வாரியத்தில் இருக்கக்கூடியவர்களும் பயன்பெறுகிறார்கள்.

அதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக இதுவரை 50,131 பயனாளிகள் மாதாந்திர ஓய்வூதியத்தொகை பெற்று வருகிறார்கள்.

மாதாந்திர ஓய்வூதியம் பெறும் பயனாளி திருமதி பூலம்மாள் அவர்கள் மகிழ்ச்சியுடன் நம்மிடம் தெரிவிக்கையில்,

என் பெயர் பூலம்மாள். நான் தூத்துக்குடி, கருப்பசாமிபுரத்துல வசித்து வருகிறேன். அன்றாட கூலி வேலைக்கு தான் போயிதான் குடும்பத்த பாக்கனும். நான் ஓய்வூதியத்துக்கு எழுதிபோட்டு, ஓஏபி பணம் வாங்கிக்கிட்டு இருக்கேன் மாசம் 1,000 ரூபாய். அந்த 1,000 ரூபாய்தான் பத்தாண்டுக் காலமா வாங்கிக்கிண்டு இருந்தோம். இப்ப முதலமைச்சர் அய்யா அவர்கள் 1,200 ரூபாயா ஆக்கிருக்காங்க. அது எங்களுக்கு ரொம்ப சந்தோசம்.

திருமதி பூலம்மாள்

எங்கள மாதிரி ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் இதுபோன்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாதாந்திர ஓய்வூதியம் பெறும் பயனாளி திருமதி அசன் பீவி அவர்கள் நெகிழ்ச்சியுடன் நம்மிடம் கூறுகையில்,

திருமதி அசன் பீவி

என் பெயர் அசன் பீவி. நான் தூத்துக்குடி, நந்தம்மாள்புரத்தில் வசித்து வருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக முதியோர் உதவித்தொகை 1,000 ரூபாய் வாங்கிட்டு இருக்கேன். அடுத்த மாசத்துல இருந்து 1,200 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்படும்னு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்கள் அறிவிச்சுருக்காங்க. எங்களுக்கு ரொம்ப மனநிறைவா இருக்கு. முதியோர் உதவித்தொகை உயர்த்திக்கொடுக்குறதுனால என்போன்ற நிறைய முதியோர்கள் பலனடைவார்கள். அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறனும் மகிழ்ச்சியா இருக்கனும் என்று பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள அறிவித்து வரும் முதலமைச்சர் அய்யாவுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

தொகுப்பு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

தூத்துக்குடி மாவட்டம்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி **திரௌபதி முர்மு** அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 06.08.2023 அன்று, சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பாரதியார் மண்டபம் மற்றும் மகாகவி பாரதியார் திருவுருவப் படத்திறப்பு விழாவிற்கு வருகை தந்தபோது நினைவுப் பரிசினை வழங்கினார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,